SARINIHAR

# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இதழ் 208 நவ.12-நவ.18. 2000 விலை ரூபா 12.00

209

21 NOV 2000

**உலக்கைக்கும் உண்டு உயர்வு!**

புலி வேட்டை ஆடியதிற் கொன்றவொரு புலி; அன்றேல்
புலி வேட்டையாடியல்லோ போட்டுதென்பீர் ~ புலி காட்டில்
உள்ளவரை உங்களுக்கு யோகந்தான்; உலக்கைக்கும்
உள்தன்றோ உயரவொரு காலம்!


-ஈழமோகம்



## நோர்வே-இலங்கை அரசு-புலிகள்:



# பேச்சுக்கான கதவு திறக்குமா?



## இலங்கை அரசும் இந்திய அரசும் புலிகளுக்கெதிராகக் கூட்டு!



மலையகத்திற்கு வழிகாட்டும் இனவாதம்!

## பண்டாரவளை:



தொடரும் படுகொலை:


**நிமலன் சௌந்தரநாயகம்**



**தற்கொலைப் போராளி பற்றிய காற்றுக்கென்னவேலிக்குத் தடை!**



**பொறுப்பான அமைச்சரின் பொறுப்பற்ற பதில்**




ஒரு பிடி மண்:

**காட்சிகள் சித்திரிக்கும் கதை!**

## மட்டக்களப்பு:
# "இந்தப் பாதகர்களுக்கு அழிவே இல்லையா?"

~ வி.ஜே.கே

"இந்தப் பஞ்சமா பாதகனுகளுக்கு அழிவே இல்லையா?, இந்தப் பிள்ளையளப் போட்டு என்ன பாடுபடுத்திறானுகள்" - மட்டக்களப்பு மாவடிவேம்புக் கிராமத்தில் விதவைத்தாய் ஒருவரிடம் இருந்து வந்த அழுகுரல் அது. மாவடிவேம்பு, வந்தாறுமூலைப் பகுதிகளில் கடந்த 1ம்,2ம் திகதிகளில் மாணவர்கள், சமூர்த்தி ஊக்குவிப்பாளர்கள், அரசாங்க ஊழியர்கள், மூத்தோர் முதியோர் என்ற பாகுபாடின்றி கிட்டத்தட்ட 90பேருக்கு மாவடிவேம்பு இராணுவத்தினர் தங்களுடைய கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

இதில் வந்தாறுமூலை மத்திய மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த ஆறு மாணவர்களும் தாக்கப் பட்டிருக்கின்றனர். இதில் ஒரு மாணவனுக்கு குனிந்து நிமிர்ந்தால் மலம் வெளியேறுகிறது. அந்தளவுக்கு தாக்கியிருக்கிறார்கள். அண்மைக்காலமாக நடைபெற்ற நிமலராஜன் கொலை, பண்டாரவளை புனர்வாழ்வு முகாம் படுகொலைகள் மட்டக்களப்பு மக்களை விழிப்படைந்த ஒரு இயங்கு நிலைக்கு கொண்டுவந்திருக்கிறது. இதன் விளைவு ஒழுங்கமைக்கப்படாத தன்னெழுச்சியாக ஹர்த்தாலுகளும் கடையடைப்புக்களும் கடந்தவாரத்தில் தொடர்ந்து நடைபெறத் தொடங்கின.

ஹர்த்தால் மக்கள் பாதுகாப்பாக தங்களுடைய எதிர்ப்பைக்காட்டக் கூடிய ஊடகமாக இருந்தாலும், ஆங்காங்கு மக்கள் மத்தியில் ஏற்பட்ட கொந்தளிப்புணர்ச்சிகள் வீதிக்கு குறுக்கே ரயரை போட்டு எரித்தும், கட்டைகளைப் போட்டும் அட்டகாசத்தில் இறங்கியிருந்தனர்.

**அதிரடிப் படையினர் சூடு!**

நீண்டகாலமாக அடிவாங்கியும், அடிவாங்கத் தயாராகவும் இருந்த மக்களைத் தான் இராணுவத்தினரும் பொலீசாரும் பார்த்திருந்தனர், சந்தித்தனர். இவ்வாறு மக்களின் கிளர்ச்சியைக் கண்ட இராணுவத்தினர் ஒருகணம் ஆடிப்போனாலும் மறுகணம் இராணுவக் காடைத்தனம் கட்டவிழ்த்து விடப்பட்டது. மாவடிவேம்பு, வந்தாறுமூலை, களுதாவளை, கல்லாறு, பெரியநீலாவணை போன்ற இடங்களில் இராணுவத்தினரதும் விசேட அதிரடிப்படையினரதும் துப்பாக்கிகள் பேசத் தொடங்கின.

பெரிய கல்லாற்றில் அதிரடிப் படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி இளைஞர் ஒருவர் காயங்களுக்குள்ளாகியுள்ளார்.

முதலாம் திகதி மாவடிவேம்பு இராணுவத்தினரால் பாடசாலைக்கு செல்லச் செல்லவந்த மாணவர்கள் உட்பட 32 பேர் அடையாள அட்டைகள் பறிக்கப்பட்டு சித்தாண்டி உதயன் மூலை பஸ் தரிப்பு நிலையத்துக்குள் கொண்டு செல்லப்பட்டனர். நைலோன் கயிற்றாலும், பொல்லாலும், வயர்களாலும், துப்பாக்கியாலும் அவர்கள் தாக்கப்பட்டனர். இரண்டு கட்டுகளுக்கிடையில் நிப்பாட்டிவிட்டு கட்டுக்குமேல் நின்று கல்லில் துணியடிப்பது போல் தங்களை அடித்ததாக மாணவன் ஒருவர் குறிப்பிட்டார். இதனால் இன்னமும் வயிறு வீங்கி எந்த வேலையும் செய்யமுடியாத நிலையில் இவர் இருக்கின்றார்.

காலையில் 7.45 மணியளவில் அந்த பஸ்தரிப்பு நிலையத்துக்குள் அழைத்து சென்று அடிக்கத் தொடங்கியவர்கள் பகல் 12.05 வரைக்கும் அவ்விடத்துக்கு வந்த இராணுவத்தினர் மாறிமாறி தங்களைத் தாக்கியதாக அரச ஊழியர் ஒருவர் குறிப்பிட்டார். அன்று அடையாள அட்டைகளை பறித்துவைத்து விட்டு மறுநாள் முகாமுக்கு வரச்சொல்லியிருக்கின்றனர். இரண்டாம் திகதி காலையில் முகாமுக்கு சென்ற அனைவரையும் காடுகள் வெட்டித் துப்பரவு செய்வதில் ஈடுபடுத்தினர். தாங்கள் பாடசாலை செல்ல வேண்டும், வேலைக்குச் செல்ல வேண்டும் என்று கேட்டவர்கள் தாக்கப்பட்டிருக்கின்றார்கள். முதல் நாள் அடியால் கைகால் முதுகு வீங்கியிருந்து மஞ்சள் பூசிவந்தவர்களும் தாக்கப்பட்டிருக்கின்றனர்.

தாங்கள் அடித்ததை யாரிடமும் போய்ச் சொல்லக்கூடாது என்று ஒருசில இளைஞர்கள் பயமுறுத்தப்பட்டிருக்கிறார்கள். அன்று நண்பகல் ஒரு மணிவரைக்கும் தங்கள் பிள்ளைகளை வைத்து வேலை வாங்கியதாகவும், தங்களுடைய பிள்ளைகளைப் பார்க்கச் சென்ற போது தங்களை துஷணவார்த்தைகளால் பேசி அடித்து துரத்தியதாகவும் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட தாய் ஒருவர் குறிப்பிட்டார். இவ்வாறான அடாவடித்தனங்களில் மாவடிவேம்பு இராணுவத்தினர் மிகவும் மூர்க்கத்தனமாகவே இருக்கின்றார்கள்.

**பல்கலைக்கழக மாணவர் போராட்டம்!**

கடந்த மாதம் 31ந் திகதி கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் பண்டாரவளை படுகொலையையும், பத்திரிகையாளர் நிமலராஜனின் படுகொலையையும் கண்டித்து பல்கலைக்கழகம் முன்பாக மாறியல் போராட்டம் ஒன்றை நடத்தினர். அந்தவேளையில் அங்கு கவச வாகனத்தில் வந்த மாவடிவேம்பு இராணுவத்தினர் மாணவர்களுக்கு மேல் கவச வாகனத்தை ஏற்ற முற்பட்டனர். ஆனால் மறியல் போராட்ட நேரத்தில் வெலிக்கந்தைக்கு செல்ல வந்த ஏறாவூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியும் தடுக்கப்பட்டு மறியல் போராட்டம் முடிந்த பின்பே செல்ல முடிந்தது.

இதன்விளைவு அன்று பிற்பகலே தெரியவந்தது. பல்பலைக்கழக ஆசிரியர்கள் வழமையில் ஏறாவூர் சோதனைச் சாவடியில் இறங்கி நடப்பதில்லை. ஆனால், அன்று எல்லோரும் இறக்கி நடத்தப்பட்டனர். போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் யார் யார், இதற்கு தலைமை தாங்கியவர்கள் யார் என இராணுவத்தினராலும் புலனாய்வுப் பிரிவினராலும் விசாரிக்கப்பட்டுள்ளனர்.

பல்கலைக்கழக விடுதியில் தங்கும் மாணவர்கள் பிற்பகல் 5.30க்கு பின் எவரும் வீதிக்கு வரக்கூடாது, அவ்வாறு வீதிகளில் கண்டால் அடிப்போம் எனவும் இராணுவத்தினரால் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. இதனால் மாணவர்கள் தங்களது பல்கலைக்கழக அடையாள அட்டையைக் காட்டுவதற்குகூட பயப்படுகின்றனர்.

**தலைவிதி இதுதான்!**

மாவடிவேம்பு இராணுவத்தினர் கடந்த பல மாதங்களாக இப்பகுதி மக்களுக்கு பல்வேறுவகையான நெருக்குதல்களைக் கொடுத்துக் கொண்டே வருகின்றனர்.

இரு மாதங்களுக்கு முன்னர் வந்தாறுமூலை உப்போடை பாலத்தடியில் வைத்து வயலுக்கு சென்றுவந்த ஒருவரை மரத்தில் தலைகீழாகக் கட்டி தொங்கவைத்து தாக்கியிருக்கிறார்கள், உழவு இயந்திரச் சாரதி ஒருவரின் கையை உடைத்திருக்கிறார்கள், ஆகஸ்ட் 09ம் திகதி அன்று சித்தாண்டியைச் சேர்ந்த அருணாசலம் சந்திரமோகன் என்பவரின் தலையை வெட்டி "சொப்பிங் பேக்கில்" எடுத்து வந்தார்கள், ஆகஸ்ட் 18ம் திகதி அன்று பாடசாலை மாணவன் மாணிக்கவேல் விஜயதர்ஷன் சுட்டுக் கொல்லப்பட்டான்.

இப்படியாக நித்தமும் இப்பகுதி மக்களை இவர்கள் பாடாய்ப்படுத்துகின்றனர். யார் கேட்டார்கள் இவர்கள் பிரச்சினைகளை, காலில் விழுந்து கும்பிட்டு மண்டாடி இந்த மக்களின் வோட்டுக்களை வேண்டிப் பாராளுமன்றத்துக்கு சென்றவர்கள் எல்லோரும் இராணுவத்துக்கும் பாதுகாப்பு வேண்டும் தானே என்று சொல்கின்றார்கள்.

சித்தாண்டியில் கழுத்தைவெட்டி கையிலெடுக்கிறான், பண்டாரவளையில் உயிரோடு தீவைக்கிறான், கிண்ணையடியில் ஆணுடம்பை வெட்டியெடுக்கிறான். இதெல்லாம் ஒருவாழ்வா, இதற்கெல்லாம் விடிவுகாண மறுமலர்ச்சிக் கழகம் கிராமம் கிராமமாக விழிப்புணர்வு கருத்தரங்குகள் நடாத்திக் கொண்டிருக்கிறது. ஆனால் மட்டக்களப்பு லேக் வியூ இன்னில் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப்பராஜசிங்கம் தனக்கு ஆதரவளித்த நெருங்கிய நண்பர்களுக்கு விருந்துபசாரமும், வரவேற்பும் வழங்கிக் கொண்டிருக்கிறார்.

இதுதான், இன்றைய தமிழ் மக்களின் தலைவிதி!

## மாக்சியம் செய்த பாவம்!

நோர்வே தூதுவர் வன்னிக்காட்டுக்குள் சென்று தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை மல்லாவியில் வைத்து சந்தித்துப் பேசிவிட்டு வந்தது இங்கு பலருக்கு ஆச்சரியம் கலந்த எரிச்சலை ஏற்படுத்தியிருக்கிறது. லேக்ஹவுஸ் பத்திரிகைகளுக்கு கூட இல்லாத எரிச்சல் மற்ற ஆங்கிலப் பத்திரிகைகளுக்கு. அரசியல்வாதிகளில் பாய்ந்தடித்துக்கொண்டு இதை எதிர்த்தது ஜே.வி.பி.

இராணுவ தலைமையுடன் கூடக் கதைக்காமல், பிரதம மந்திரிக்குக் கூடத் தெரியாமல் நடந்த இந்தச் சந்திப்பு இராணுவ உயர்மட்டங்களிலும் கீழ் மட்டங்களிலும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது என்று எழுதியிருக்கிறது ஒரு ஆங்கிலப் பத்திரிகை.

ஜே.வி.பியோ நோர்வே தேவையில்லாமல் உள்நாட்டு விடயங்களில் தலையிடத் தேவையில்லை என்று எதிர்ப்புத் தெரிவித்தது.

யுத்தத்தின் மூலம் சமாதானத்தை காண்பது என்ற அரசாங்கத்தின் திட்டத்தை, அரசாங்கத்தைவிட தீவிரமாக அமுல்படுத்த முனைந்து நிற்கிறது ஜே.வி.பி.

புலிகளுடன் யுத்தம் செய்து வெல்லமுடியவில்லை, சமாதானம் செய்யவென்று போனவர்களுக்கு அதை எப்படிச் செய்வதென்று தெரியவில்லை. இரண்டு வழிகளிலும் புலிகளை 'வழிக்கு' கொண்டுவர முடியாமல் போய்விட்டது. இந்த நிலைமைக்கு நாளுக்கு நாள் விலைகொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் இந்த நாட்டு மக்கள் - தமிழ் முஸ்லிம் மக்கள் நேரடியாகவும், சிங்கள மக்கள் மறைமுகமாகவும்!

சரி, நீங்கள் யுத்த மூலமும், பேச்சுவார்த்தை மூலமும் செய்ய நினைத்தது சமாதானம் தான் என்றால், அதைப் பெற்றுத்தர நான் கொஞ்சம் உதவி செய்கிறேன் என்று முன்வந்தது நோர்வே.

இதுவும் இவர்களுக்குப் பிடிக்கவில்லை.

ஆக, இவர்களுக்கு வேண்டுவது தான் என்ன?

யுத்தம், யுத்தம், மட்டுமே தானா?

'யார் சொன்னது? - யுத்தம் நடந்தால் தான் இனவாதத்திற்கு 'மாக்கற்' இருக்கும். நிறவாதத்துக்கு 'மாக்கற்' இருந்தால் இந்தக் கட்சிகளதும் தலைவர்களதும் வயிறும் நிறையும். ஆக, இவர்களுக்கு உண்மையில், தேவைப்படுவது இனவாதம் தான். இனவாதத்தை விட்டால் இலகுவாக சனத்தை திரட்ட வேறென்ன, உலகத் தொழிலாளர்களே ஒன்று படுங்கள்' கோஷத்துக்கா முடியப் போகிறது?' என்றார் என் நண்பர்.

'இல்லை, நோர்வேக்கும் ஏகாதிபத்தியங்களுக்கும் இடையில் உள்ள உறவு பற்றியும் அவர்கள் சொல்லுகிறார்களே' என்று மெல்ல இழுத்தேன் நான், அவரது வாயை கிண்டும் நோக்குடன்.

"மாக்சியம் செய்த பாவம் அது. இந்த இலங்கை இடதுசாரிகளின் கையில் வந்து சேர்ந்தது நாயாய்ப் படுகிறது. இவங்கள் தாங்கள் கல்தடுக்கி விழுந்தாலும் அது ஏகாதிபத்தியச் சதி என்று தான் சொல்லுவாங்கள்!"

இதற்கு நான் பதில் பேசவில்லை.

## சுகமான வேலை!

ஒரு வழக்கு விஷயமாக நீதிமன்றத்துக்குப் போயிருந்தேன். நீதிமன்றில் கறுப்புக் கோட்டுக்களுடன் அங்குமிங்கும் வேகமாக நடந்து கொண்டிருந்த பல சட்டத்தரணிகள் மத்தியில் திடீரென ஒரு பரிச்சயமான முகம். நீதிமன்றில் 'வழக்குரைத்து'க் கொண்டு நின்றது!

எங்கேயோ பார்த்த மாதிரி இருக்கிறதே என்ற மண்டையைப் பிய்த்துக் கொண்டேன்.

'இவரை எங்கேயோ பார்த்திருக்கிறோமே...' என்று கூட வந்தவரிடம் கேட்டேன்.

அட, இவரைத் தெரியாதா... இவர் தான்.... எம்பி என்று அந்தச் சட்டதரணியின் பெரைக் கூறினார் அவர்.

புதிதாக தெரிவுசெய்யப்பட்ட ஒரு தமிழ் எம்பி. அவர்.

நீதிமன்றிலிருந்து அலுவலகம் வந்த பின் இது பற்றி சக பத்திரிகையாளர் ஒருவருக்கு கூறினேன்.

'ஓமோம்... அதுக்கென்ன இப்ப என்றார் அவர்'

'இல்லை... இப்படி நீதிமன்றம் அது இதெண்டு திரிந்தால் இவர்கள் எம்பி. வேலையைப் பார்ப்பது எப்படி?'

நண்பர் சிரித்தார் பிறகு சொன்னார்.

"எம்பிமாருக்கு என்னையா வேலை? ஏதாவது நடந்தால் அறிக்கைவிட வேணும் அவ்வளவுதானே... அதைக்கூட செயலாளர் செய்துவிடுவார். இவரது வேலை கையெழுத்துப் போடுவது மட்டும் தானே?"

"அதிலும் தமிழ் எம்பிக்கள் என்றால் ஊருக்கே போகத் தேவையில்லை".

அப்ப மிகவும் 'சுகமான வேலை' என்றேன் நான்.

ஓமோம். 'சுகமான' வேலைதான். எல்லா அர்த்தத்திலும்.

நான் பேசவில்லை.

# புலிகளுக்கெதிராக இலங்கை- இந்திய கடற்படைக் கூட்டு நடவடிக்கை?

~ டி.சிவராம்

ஸ்ரீலங்கா அரசிற்கும் இந்திய நடுவண் அரசிற்குமிடையில் கடந்த 13 வருடங்களாகப் படைத் துறை உறவுகள் இறுக்கமாகியும் விரிவடைந்தும் வருகின்றன. புலிகளுக்கெதிரான ஆழ்கடற்கண்காணிப்பு என்பது இதில் முக்கியமான விடயமாகும்.

இந்த வகையில் புலிகளின் பல கப்பல்கள் இந்தியக் கடற்படையினரால் வழி மறிக்கப்பட்டு அழிக்கப்பட்ட அல்லது கைப்பற்றப்பட்ட சம்பவங்களைப் பற்றி நீங்கள் செய்தித் தாள்களில் படித்தறிந்திருப்பீர்கள்.

ஒரு சந்தர்ப்பத்தில் புலிகளின் கப்பலொன்றை இடைமறித்த இந்தியக் கடற்படையினர் அதை இலங்கையின் கடல் எல்லைக்குள் இட்டு வந்து சிறிலங்காக் கடற்படைக்கு அறிவித்தனர். இதன் பின்னர் நடந்த சண்டையில் இக்கப்பல் மூழ்கிற்று.

சுருக்கமாகச் சொல்வதானால், வங்காள விரிகுடாவினூடாக புலிகளுக்கு இருக்கக் கூடிய அனைத்துக் கடற்போக்குவரத்தையும் இல்லாதொழிக்கும் பொறுப்பை இந்தியாவிடம் சிறிலங்கா அரசு ஒப்படைத்திருந்தது. இந்த வேலையை இந்தியக் கடற்படை எவ்வாறு செய்தது, செய்து வருகிறது எனப் பார்ப்போம்.

வங்காள விரிகுடாவையும் அதில் இந்தியாவின் கேந்திரத் தளங்களையும் கண்காணிப்பது இந்தியக் கடற்படையின் கிழக்குப் பிராந்தியக் கட்டளையகமாகும். இது ஆந்திர மாநிலத்திலுள்ள வைசாகப் பட்டினத்தில் அமைந்துள்ளது.

வழக்கமான கடல் எல்லைப் பாதுகாப்பு வேலைகள் தவிர இந்தியாவிற்குச் சொந்தமான அந்தமான் நிக்கோபார் தீவுகளைக் கண்காணிப்பதும் இப்பகுதியில் வளர்ந்து வரும் சீனாவின் கடல் ஆதிக்கத்தை மதிப்பிட்டுச் செயலாற்றுவதுமே இந்தக் கிழக்குப் பிராந்தியக் கட்டளைப் பணியகத்தின் பிரதான கடமையாகும்.

ஆசியக் கண்டத்தின் வரைபடத்தை நோக்குவீர்களேயானால் தற்பொழுது மியான்மியர் என அழைக்கப்படும் பர்மாவே சீனாவுக்கு மிக எளிதாக வங்காள விரிகுடாவை அதாவது - இந்து மா கடலை அடைந்திட வாய்ப்பான பகுதியாக அமைந்துள்ளது. ஆசியாவில் தன் மேலாட்சியையும் கேந்திரப் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதற்கு இந்து மா கடலில் தனக்கும் ஓர் பிடி இருக்க வேண்டுமென சீனா எண்ணுகிறது. இதன் காரணமாகவே தனக்குச் சாதகமான ஒரு அரசை பர்மாவில் நிலைப்படுத்தியுள்ளது. இந்த அடிப்படையிலேயே பர்மாவின் தென்கோடியிலுள்ள சில தீவுகளில் கடற்படைப் பெருந்தளமொன்றை சீனா நிறுவியுள்ளது. இந்து மா கடலுக்கான சீனாவின் திறவுகோலாக இத்தளம் அமைந்துள்ளது.

இதை ஒரு அச்சுறுத்தலாகவே இந்தியா கருதுகின்றது. இது மட்டுமல்லாது இந்தியாவின் வடகிழக்குப் பகுதிகளில் நீண்ட காலமாக நடைபெற்று வரும் நாகர், அசாமியர் ஆகிய இனங்களுடைய விடுதலைப் போராட்டங்களுக்கு பர்மா ஊடாக சீனா ஆயுத உதவி வழங்கியதாக ஒரு பிரச்சினையுமுண்டு.

இந்தப் பின்னணியில் டெல்லி சென்று இந்தியக்கடற்படையின் உதவியைக் கோரியுள்ள இலங்கைக் கடற்படைத் தளபதி சுட்டிக் காட்டியுள்ள ஒரு விடயத்தை நாம் நோக்க வேண்டும். அதாவது, புலிகள் பர்மாவிலிருந்து பெரும் போர்க் கருவிகளைக் கடல் வழியாகக் கொண்டு வருகிறார்கள் என டெல்லி அதிகாரிகளிடம் கூறி அதைத் தடுக்க அவர் உதவி கேட்டிருக்கிறார்.

பர்மாவிற்கும், சீனாவிற்கும் இடையிலுள்ள கேந்திரக் கூட்டுக் காரணமாக வங்காள விரிகுடாவில் தனக்கு இருக்கக் கூடிய சிக்கலைப் பற்றிக் கரிசனை கொண்டிருக்கும் இந்திய நடுவண் அரசை எங்கணம் அணுகி உதவி பெற சிறிலங்கா அரசு முயற்சி எடுத்துள்ளது என்பதை நோக்குங்கள். புலி-பர்மா-சீனா என்ற ஒரு பொது எதிரணியை மறைமுகமாகக் கோடிட்டுக் காட்டியிருக்கிறார் சிறிலங்காக் கடற்படைத் தளபதி. புலிகளுக்குப் பர்மாவிலிருந்து (மியான்மார்) போர்க் கருவிகள் வருகின்றன என்ற அவரது கூற்றில் தொக்கு நிற்பது என்ன?


சீனாவின் ஆதரவுடன் பர்மா அரசு போர்க் கருவிகளைப் பெற்றிட புலிகளுக்கு உதவுகின்றது என்பது தான் அது.

இங்கு நிச்சயமாகப் புலிகள் பர்மாவிலிருந்து கள்ளமாய் ஆயுதங்களை முல்லைத்தீவிற்குக் கடத்துகிறார்கள் என்ற பொருள்பட அவர் பேசியிருக்க முடியாது.

ஏனெனில், ஏற்கெனவே கடந்த ஆண்டு சிறிலங்காவின் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பர்மாவிற்குரிய ஒரு சிறு தீவிலிருந்தே புலிகள் போர்க் கருவிகளைக் கடத்துகிறார்கள் எனவும், அதைத் தடுத்திட ஆவன செய்ய வேண்டும் எனவும், பர்மிய அரசிடம் எடுத்துரைத்திருந்தார். இதையடுத்து பர்மீய அரசு இது பற்றி நடவடிக்கை எடுப்படுமென கொழும்பிற்கு உறுதியளித்ததாக ஒரு அறிக்கையும் இங்கு வெளியிடப்பட்டது.

ஆகவே, இப்போது மீண்டும் புலிகள் பர்மாவிலிருந்து ஆயுதம் கொண்டு வருகிறார்கள் என இந்தியாவிடம் வெளிப் படையாக சிறிலங்கா அரசு முறையிடுகிற தென்றால் அதன் உட்கிடை என்னவாக இருக்க முடியும்?


ஒரு புறம் சீனாவுடன் மிக நெருக்கமான நீண்டகாலப் பொருளாதார இராணுவ உறவுகளைப் பேணிக் கொண்டு, இன்னொரு புறம் வங்காள விரிகுடாவில் காணப்படும் இந்திய சீன கேந்திர முரண்நிலையை முன்னிறுத்தி டெல்லியிடம் உதவி பெற முயற்சிக்கிறது சிறிலங்கா அரசு.



எனினும் சந்திரிகா அரசைப் பலப்படுத்தி புலிகளை ஓரங்கட்ட வேண்டும் என டெல்லி நாட்டங் கொண்டுள்ளமையால் அது சிறிலங்கா அரசின் வேண்டுகோளுக்குச் செவி சாய்க்கிறது. இந்தப் பின்னணியை மனதிற் கொண்டு, நாம் மீண்டும், இந்தியக் கடற்படையின் கிழக்குப் பிராந்திய கட்டளையகம், புலிகளின் வங்காள விரிகுடாவினூடான அனைத்துக் கடல் வழிகளையும் முறியடிக்க எவ்வாறு முயற்சி செய்கிறதெனப் பார்ப்போம்.

வங்காள விரிகுடாவில் வர்த்தகக் கப்பற் போக்குவரத்துக்கான பாதைகள் பல உண்டு. இவை யாவையென கடற் போக்குவரத்து வரைபடங்களில் தெளிவாகக் காட்டப் பட்டுள்ளது. இவற்றை ஆங்கிலத்தில் Merchant shipping lanes என்பர்.

கிழக்காசியா, தென்கிழக்காசியா என்பவற்றிற்கும் மேற்காசிய, ஐரோப்பா என்பவற்றிற்கும் இடையிலான கடற்பாதைகளில் பெரும்பாலானவை இலங்கையின் வடகிழக்குப் பிராந்தியத்தை அண்டியே அமைந்துள்ளன. இப்பாதைகளில் போக்குவரத்துச் செய்யும் அனைத்துக் கப்பல்களையும் வழிமறித்து அவற்றில் ஏறி அவை



ஆயுதம் கொண்டு செல்கின்றனவா, அப்படி எனில் அவ்வாயுதங்கள் புலிகளுக்குரியனவா என்றெல்லாம் சோதனை செய்வது அமெரிக்க வல்லரசால் கூட முடியுமான காரியமல்ல.

எனவே மேற்படி கடற்பாதைகளை விட்டு விலகி இலங்கையின் வடகிழக்குக் கடல் எல்லைப் பக்கம் செல்லக்கூடிய கப்பல்களையும், அப்பாதைகளில் ஒரு நாளுக்கு மேல் ஒரே இடத்தில் நிற்கும் கப்பல்களையும் இயன்ற அளவு கண்டு பிடிக்க முயல்கின்றார்கள். இந்த வேலையில் அந்தமான் - நிக்கோபார் தீவுகளையும் அவற்றை அண்டிய கடற்பரப்பையும் கண்காணிக்கும் இந்தியக் கடற்படை விமானங்களே ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

ஆனால் குறைந்தளவு விமானங்களே உள்ளமையால் இதையும் இந்தியக் கடற்படையால் செம்மையாகச் செய்ய முடியாதுள்ளது. மேலும் இருள் கவிந்த பின்னர் புலிகளின் ஒரு கப்பல் கடற்பாதையொன்றில் தரித்து நின்று பொருட்களை இறக்கினால் அதைக் கண்டு பிடிக்குமளவிற்கு இற்தியாவிடம் தொழில் நுட்பம் போதாது. இதில் வேறொரு சிக்கலுமுண்டு. ஒரு குறிப்பிட்ட கடற்பாதையில் ஒரு கப்பல் ஒரு நாட்பொழுதுக்கு மேல் சந்தேகத்திற்கிடமான முறையில் தரித்து நிற்பதை இந்தியக் கடற்படையின் கண்காணிப்பு விமானம் ஒன்று கண்டு விட்டது என்று வைத்துக் கொள்வோம்.

இது முதலில் டெல்லிக்கு அறிவிக்கப் பட வேண்டும். அங்குள்ளவர்கள் அக்கடற் பாதையில் குறிப்பிட்ட அந்த நாளில் செல்லும் கப்பல்கள் எவையென லண்டனிலுள்ள லொயிட்ஸ் நிறுவனத்தினூடாக அறிந்து அதன் மூலம் சந்தேகத்திற்கிடமான கப்பல் எந்த நாட்டுக் கொடியின் கீழ் செல்கிறது, என்ன பொருட்களைக் கொண்டு போகிறது, கப்பலின் உரிமையாளர் யார் என்பன போன்ற தகவல்களைப் பெறல் வேண்டும். ஏனெனில் தன்னுடைய நாட்டிற்கு ஆபத்து விளைவிக்கும் நோக்குடன் ஒரு கப்பல் தன் கடற்பிராந்தியத்தை நெருங்கிச் செல்கிறது என நிறுவமுடிந்தாலேயொழிய சர்வதேசக் கடற் பரப்பில் எந்தவொரு கப்பலையும் ஒரு கடற்படை மறித்துக் கைப்பற்ற முடியாது. இது சர்வதேசக் கடற் சட்டங்களுக்கு முரணானது. இதனாலேயே சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து இந்தியக் கடற்படையால் கைப்பற்றப்பட்ட புலிகளின் டொங்கனோவா என்ற கலத்தின் தமிழ் மாலுமிகளை வைசாகப் பட்டின நீதிமன்று எந்தக் குற்றச்சாட்டுமின்றி விடுதலை செய்ய வேண்டியதாயிற்று.

(அவர்களை மிக நீண்ட காலம் இந்தியக் காவற்றுறை அடைத்து வைத்திருந்தது வேறு விடயம்.) எனவே மேற்படி ஆராய்ச்சிகளைச் செய்து இந்தியக் கடற்படை நடவடிக்கை எடுக்க முற்படுகையில் சம்பந்தப் பட்ட கப்பல் இறக்க வேண்டிய பொருட்களை இறக்கி முல்லைத் தீவிற்கு அனுப்பி வட்டுப் போய் விடும். இதனாலேயே புலிகளின் ஆயுதக் கப்பல் களைத் தம்மால் பிடிக்க முடியாதுள்ளது என இந்தியக் கடற்படையினர் கூறுகின்றனர்.

இந்தச் சிக்கலைச் சமாளிப்பதற்காகவே அண்மையில் உலங்கு வானூர்திகளைக் காவிச் செல்லும் ஒரு விலையுயர்ந்த ஆழ் கடற் கண்காணிப்புக் கப்பலை இலங்கைக் கடற்படைக்கு இந்தியா வழங்கியுள்ளது. புலிகளின் பெரும் ஆயுதக் கப்பல்களை சர்வதேசக் கடற்பரப்பில் இனங் கண்டு தடுப்பது கடினமாகையால், அவற்றிலிருந்து பொருட்களை இறக்கிக் கொண்டு முல்லைத் தீவை நோக்கிச் செல்லும் படகுகளை றேடார் மூலம் கண்டறிந்து விரைந்து தாக்கி அழித் திடவே மேற்படி கண்காணிப்புக் கப்பலை இந்தியா வழங்கிற்று. திருமலை காங்கேசன்துறை ஆகிய இடங்களிலிருந்து சண்டைப் படகுகள் பொருட்களை இறக்கி வரும் கடற் புலிக் கலங்களை விரைந்து சென்று மறித்திடல் கடினம். ஆனால் ஆழ்கடலில் நிற்கும் ஒரு கண்காணிப்புக் கப்பலிலிருந்து கிளம்பும் உலங்கு வானூர்திகளால் அதைச் செய்ய முடியும்.

எனினும் தற்போது இந்திய இலங்கை அரசுகளின் இந்த எண்ணத்திலும் மண்ணைக் கொட்டி விட்டார்கள் புலிகள். அவர்களுடைய சண்டைப் படகுகளில் ZU 23-4 எனும் கனரக விமான எதிர்ப்புப் பீரங்கி பொருத்தப்பட்டிருப்பதாகவும், அதனாலேயே அண்மையில் புலிகள் இரு Mi-24 உலங்கு வானூர்திகளைச் சுட்டு வீழ்த்தி விட்டனர் எனவும் கூறி அஞ்சுகிறது சிறிலங்காக் கடற்படை.

இதனாலேயே டெல்லியின் காலடியில் போய் வீழ்ந்திருக்கிறார் சிறிலங்காவின் கடற்படைத் தளபதி. சிறிலங்காக் கடற்படையும், அதற்கு எங்ஙனம் புலிகளை வெற்றி கொள்ளும் வகையில் உதவிடலாம் என எண்ணமிடும் இந்திய நடுவண் அரசும் வெங்காய வேலை பார்க்கிறார்கள்.

ஏன்? இந்த ZU 23-4 எங்கிருந்து வந்தது?

புலிகள் மூழ்கடித்த சிறிலங்காக் கடற்படைக் கலமொன்றிலிருந்தே. அதைச் செய்வதற்கான நெஞ்சுரம் அடிப்படையில் எங்கிருந்து வருகிறது?

சிறிலங்கா அரசு எம்மக்கள் மீது இழைக்கும் அட்டுழியங்கள் எம் நெஞ்சங்களில் மூட்டிய தீயிலிருந்து.

இந்த அடிப்படை உண்மையை உணர வக்கில்லாத இந்திய அரசு: தமிழர் சிந்தும் குருதியையும், கண்ணீரையும் கண்டு கொள்ள மறுக்கும் இந்திய அரசு, சிறிலங்காவிற்குப் படை உதவி செய்திட, எமது உரிமைப் போராட்டத்தை நசுக்கிட சந்திரிகா அரசுக்கு நேசக்கரம் நீட்டுகிறது.

நெருப்பிலே மலர்ந்தது இந்த வெய்யிலுக்கெல்லாம் வாடிவிடாது என்பதை டெல்லிக்காரர் இன்னும் உணராமலிருப்பது அவர்களுடைய முட்டாள் தனத்திற்கே சான்று பகர்கின்றது.

⊙

# அரசின் முந்தானைக்குள் பாதுகாக்கப்படும் இயக்கக் கொலையாளிகள்!

மட்டக்களப்பு ஆரையம்பதியில் கடந்த தீபாவளி தினத்தன்று அப்பாவிப் பொதுமகனான தாமோதரம் சுகேந்திரன்(27) என்பவர் கொடூரமான முறையில் ரெலோ இயக்கத்தின் பேரால் இயங்குபவர்களால் தாக்கப்பட்டிருக்கின்றார். தீபாவளி தினத்தன்று ஆரையம்பதி முகாமுக்குப்


தாக்கியதாகக் கூறப்படும் வரதன்

பொறுப்பாக இருந்த வரதன் உட்பட்ட நான்கு பேர் சுகேந்திரனைக் கூப்பிட்டு சாமான் வேண்டிவரச் சொல்லியிருக்கின்றனர்.

சுகேந்திரனும் சாதுவான மதுபோதையில் இருந்ததால் வேண்டிவரமாட்டேன் என்று மறுத்திருக்கின்றார். ஆரையம்பதி ராஜாக்களாக இருந்தவர்களுக்கு தங்களின் கதையை மறுதலித்தவனை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. கண்டபாட்டுக்கு தாக்கியிருக்கின்றார்கள். முடிவில் அடிகள் படாதஇடத்தில் பட்டுவிட்டது. சுகேந்திரன் செத்துவிட்டான்என நினைத்து பக்கத்துவளவில் தூக்கிபோட்டு தங்களுக்கு தெரியாதமாதிரி இருந்துவிட்டனர்.

சுகேந்திரனுக்கு நடந்ததைப் பார்த்துக் கொண்டிருந்த நண்பனே சுகேந்திரனை வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்று அனுமதித்துள்ளார். இந்த சம்பவம்தொடர்பாக வெளியில் யாருக்கும் சொல்லக்கூடாது என்று மிரட்டியதனால் சம்பவம் நடந்து நான்கு நாட்களாகிளும் வெளிவராமல் இருந்திருக்கிறது.

ஆரையம்பதியில் விசேட அதிரடிப்படையினருடன் சேர்ந்து ரெலோ இயக்கம் முகாமிட்டிருந்தது. ஆரம்பத்தில் இவர்கள் ரெலோவின் செயற்பாட்டைக் கொண்டிருந்தாலும் மெல்லமெல்ல ஆரையம்பதியில் முகாமிட்டிருந்த அனைவரும் ரெலோவின் செயற்பாட்டிலிருந்து விலகி இராணுவப் புலனாய்வினரால் உள்வாங்கப்பட்டு அவர்களின் செயற்பாடே மேலோங்கியிருந்தது. இது அன்வரின் காலத்திலிருந்து ஆரம்பிக்கின்றது.

ஆரம்பத்திலிருந்து இவர்களை தங்களிடம் இருந்து இனம் காட்டிக் கொள்ளாததால் இவர்களுடைய செயற்பாடுகள் அனைத்தும் ரெலோவின் பெயரிலே வந்துகொண்டிருந்தது. இவ்வாறான செயற்பாடுகள் ரெலோவுக்கும் தேவைப்பட்டிருக்கிறது போலும். அதனால்தான் அவர்களும் அதைக் கண்டும் காணாதவர்கள்போல் இருந்துவிட்டனர்.

அன்வர் சுட்டுக் கொல்லப்பட்டதன் பின் அன்வரின் பொறுப்பை அவருக்கு அடுத்ததாக இருந்த வரதன் எடுத்தார். வரதனும் அன்வரின் பணியையே செய்துவந்தார். அதுமட்டுமல்லாமல் புளொட்மோகனுடனும் தொடர்புகளை வைத்திருந்தார். புளொட் மோகன் தனது பிரதிநிதிகளாக மட்டக்களப்பில் நிதி, தம்பி, குயில், மாமா போன்றோரை வைத்திருந்து தனது வேலைகளைச் செய்வது போன்று ஆரையம்பதியில் வரதன் இருந்து வந்தார்.

புளொட் மோகன் வந்தாறுமூலைப் படுகொலை, சத்துருக்கொண்டான் படுகொலை , மட்டக்களப்பில் காணாமற் போனவர்கள் மட்டக்களப்பு மாவடித்தமுனையில் ரயர்போட்டு எரித்த சம்பவங்களில் பிரதான பாத்திரமாக ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் குற்றம் சாட்டப்பட்டும் இன்னமும் இந்த அரசு அவனை தனது முந்தானைக்குள் வைத்துப் பாதுகாத்துக் கொண்டு வருகின்றதென்றால் இன்னமும் மோகனின் சேவை இந்த அரசுக்கு தேவை என்பதால்தான்.

இவ்வாறான ஒருவருடன் தொடர்பு வைத்திருந்தவரை ரெலோ தேர்தலில் போட்டியிட வைத்த போது ரெலோ முன் பல கேள்விகள் வைக்கப்பட்டது. அவர் திருந்துவதற்கு இதுவும் ஒரு சந்தர்ப்பம் என்று ரெலோ குறிப்பிட்டது. ஆனால் இன்று அந்த சந்தர்ப்பத்தையும் நழுவவிட்டு விட்டார். குற்றம் செய்தவர் தண்டிக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடுகிறது. ஆனால் வரதன் கைது செய்யப்படவில்லை. இதுவும் மோகனைப் போன்று ஆட்சியாளர்களுக்கு தூக்கியெறிய முடியாத ஒன்றாகிவிட்டது போலும்.

அரசுக்கு விளையாட்டு. மக்களுக்கோ நாளுக்கு நாள் உயிர் போகிற பிரச்சினையாகிவிட்டது இது!

# பயன்படுத்தல்

சரிநிகர் ௨௦௬இல் வெளிவந்த குறிப்பையொட்டி வந்த வாசகர்களின் அபிப்பிராயங்கள் இரண்டு இங்கு பிரசுரமாகின்றன.

கிடைக்கும் அபிப்பிராயங்களில் தரமானவை தெரிந்தெடுத்துப் பிரசுரிக்கப்படும். முடிந்தளவு சுருக்கமாக எழுதுமாறு வாசகர்களை கேட்டுக்கொள்கின்றோம்.

- கே.குமரவேல் திருகோணமலை

## திருமலை பறிபோனதற்கு அரசியல்வாதிகளின் ஊழல்தான் காரணம்!

இலங்கையில் வர்த்தக நோக்கங்களுக்காக வெளிவரும் பல தமிழ் பத்திரிகைக்கு மத்தியில் யதார்த்தபூர்வமாக உண்மைகளை நடுநிலைமையோடு எமக்களிக்கும் ஓர் உன்னத பத்திரிகை சரிநிகர் எனில், அது மிகையில்லை. உங்கள் இதழ் 206இல் பக்கம் 2இல் "பயன்படுத்தல்" என்ற தலைப்பில் வெளியாகி ஓர் சுவையான உரையாடலை பிரசுரித்திருந்தீர்கள். அத்துடன் அது தொடர்பாக உங்கள் அபிப்பிராயங்களை எழுதுவீர்களா?, என்று கேட்டிருந்தீர்கள். எனவே நடந்து முடிந்த தேர்தலைப் பற்றி நான் வாழும் மக்கள் பலருடன் கதைத்து அவர்களின் பொதுவான அப்பிராயமாக இதனை எழுதுகின்றேன்.

நடந்த பொதுத்தேர்தலில் திருகோணமலை நகரில் தமிழர் பிரதிநிதித்துவம் இழக்கப்பட்டமை அதிகமான மக்களுக்கு மனவருத்தை தந்தபோதிலும் அதற்கான காரணத்தை அதாவது இழப்புக்கு காரணம் மக்களின் சுயநலப்போக்கும் கொள்கையற்ற தன்மையும் தான். என்று கூறுபவர்களின் கருத்தை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. கடந்த பல தசாப்தங்களாக எமது மாவட்ட தமிழ் பேசும் மக்கள் தங்களுடைய தனிப்பட்ட நலன்கள் விருப்பு வெறுப்புகளை விட தமது பிரதேசநலனையே பெரிதாக நினைத்து தமது பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தை கட்டிக் காத்து வந்தனர். ஆனால், கடந்த காலங்களில் எமது பகுதியில் உள்ள அரசியல் தலைவர்கள் மக்களின் உரிமை, அவர்களது இறைமை நலன் என்பவற்றை விட தத்தமது குடும்ப நலன்களையும் தமது சொந்த பந்தம் அறிந்தவர்கள் தெரிந்தவர்கள் நலத்தையே முதன்மைப்படுத்தி சுயநலவாதிகளாக செயற்பட்டுள்ளனர். தத்தமது பதவிகளை மட்டுமே தற்காத்துக் கொள்ள வேண்டும் என்ற வெறியில் செயற்பட்டமையினால் தான். மக்கள் எந்த ஒரு அரசியல் தலைமையிலும் நம்பிக்கைவைத்து வாக்களிக்க முடியாது போய்விட்டது. திருமலையில் மக்களின் வாக்குகள் சிதறியமைக்கு காரணமாக பல காரணங்கள் முன்வைக்கப்பட்டபோதிலும் மக்கள் பொதுநலனைவிட தத்தமது சுயலாபங்களுக்காக வாக்களிக்கத் தூண்டியது. என்ன காரணி என்று வினா தொடுத்தால் சென்ற பாராளுமன்றப் பிரதிநிதியாக இருந்த திருவாளர் இரா சம்பந்தருக்கும் அவருக்கு விசுவாகசமாக கூட்டணியில் செயற்பட்ட சிலரும் தான். ஏனெனில், அவரின் பதவிக் காலத்தில் நடைபெற்ற சில மனக்கசப்பான சம்பவங்கள் திருகோணமலையில் வேலை வாய்ப்புகள் வழங்குதல் சம்பந்தமாக இடம் பெற்ற ஊழல்கள் பிரதானமானவை.

எமது பிரதேசத்தில் துறைமுக அதிகார சபையில் வழங்கப்பட்ட வேலைவாய்ப்பு கோட்டாவிலே பலவற்றை தத்தமது கட்சியின் அமைப்பாளர் செயலலாளர்களின் உறவினர் பிள்ளைகளுக்கு வழங்கியும், ஆயிரக்கணக்கில் பணத்தைப் பெற்றுக்கொண்டு விலைபேசி விற்றதும் எமது பகுதியில் பல இளைஞர். யுவதிகள் வேலை வாய்ப்புகள் இன்றி வேதனைப் பெருமூச்சு விடும்போது வெளிமாவட்டத்து இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புக்கள் விற்கப்பட்டமையும், இவ்வாறான சமூக அநீதிகளினால் பாதிக்கபப்ட மக்கள் தமிழ் பிரதிநிதித்துவத்தைவிட தமது சொந்த நலனையே முக்கியத்துவம் கொடுத்து, வரும் பிரதிநி தமக்கு தெரிந்தவராக இருந்தால் சரி அவர் எந்தக் கட்சியில் இருந்தாலும் அதைப்பற்றி அக்கறை இல்லை என்று. தமது பெறுமதியான வாக்குகளை பல அரசியல்வாதிகளுகளுக்கும், பங்கிட்டுக் கொடுத்தனர். இதனாலே எமது தமிழ்ப் பாராளுமன்ற பிரதிநிதித்துவம் இழக்கப் பட்டுள்ளது.

இதிலிருந்து எமது மக்கள் அரசியல்வாதிகளுக்கு தெரிவிக்கும் கருத்துக்கள என்னவெனில், தேர்தல் காலத்தில் மக்கள் முன் கூறப்படும் தமிழ் உரிமை, தேசியம், விடுதலை, ஜனநாயகம் என்ற கோஷங்கள் அனைத்தும் மக்களை ஏமாற்றும் வார்த்தை ஜனநாயகமாக இருக்கக் கூடாது. தமிழ் பிரதிநிதித்துவத்தைக் காப்பாற்றுவது மக்களின் கைகளில் மட்டுமல்ல. தமிழ் அரசியல்வாதிகளின் ஒற்றுமையிலும், சுயநலமில்லாத பொதுநல சேவைகளிலுமே தங்கியுள்ளது என்பதை எமது பகுதியிலுள்ள அரசியல் மர மண்டைகள் உணரவேண்டும். இந்த வகையில் பிரதான தேசியக்கட்சிகளோடு கூட்டுச்சேருவது என்ற எமது அரசியல்வாதிகளுக்கு மட்டுமே சொந்தமான அரசியல் சாணக்கிய வித்தையில் இறங்கிவிட்டனர் என்பதை நடந்து முடிந்த தேர்தல் முடிவுகள் தெரிவிக்கின்றது. இறுதியாக இழந்துபோன தமிழ்ப்பிரதிநிதித்துவம் பற்றிய உண்மைச் சம்பவம் ஒன்றை அறியத் தருகின்றேன்.

ஒருவர்: தம்பி இனி நாம எம்.பிஐ சந்திக்க வேணுமெண்டால், கிண்ணியாவுக்கு இல்ல கந்தளாய்க்கு தான் போகவேண்டும்.

மற்றவர்:-பரவாயில்லை ஐயா! முதலெல்லாம் நாம அவசரமா எம்.பியை காணவேணுமெண்டால் கொழும்புக்கு தானே போக வேண்டியிருந்தது. இப்ப கிண்ணியா கிட்டதானே.

- சிவபாலன், பேராதனை

## தமிழர்கட்கு தோல்வி!

புலிகளது அரசியல் சிக்கல்கள் யாவருக்கும் புரிந்ததே. மாற்றுக் கருத்துகள், விமர்சனங்கள், அழுத்தங்கள், அவர்களது நிலைப்பாட்டில் எந்தவொரு தாக்கமும் ஏற்படுத்தாது என்பது வரலாறு பகரும் சான்று.

புலிகள் சிங்கள அரசால் நடாத்தப்படும் எந்தவொரு தேர்தலிலும் தாம் பங்குபற்றப் போவதில்லை என தெளிவாகவே தெரிவித்திருக்கிறார்கள். எனவே தமிழ் வாக்களர்களின் இன்றைய செயற்பாடு எவ்வாறு இருந்திருக்க வேண்டும்? என்பது பற்றிய எனது கருத்து இது.

தமிழர்கள், இப்பொழுதுள்ள அரசியலில் தெளிவான மாற்றம் அதாவது சந்திரிகா அரசின் தொடர்ச்சியான அழுத்தத்தை மாற்றும் ஒரு யுக்தியாக இத்தேர்தலை பயன்படுத்தியிருக்க வேண்டும். அதற்காக ரணிலின் அரசு சமாதானத்தை ஏற்படுத்தும் என்பதல்ல எனது கூற்று. தொடர்ச்சியான செயலூாக்கத்தில் ஒரு இடைவெளி அல்லது குழப்புதல் என்ற ஒரு தந்திரத்தை கையாண்டிருக்க வேண்டும்.

இது குறிப்பாக தமிழர்கள் மீதான இராணுவ அழுத்தத்தை தோற்கடித்திருக்கக் கூடிய புறச்சூழலை ஏற்படுத்தியிருக்கும். இராணுவச் செயற்பாட்டின் விளைவுகளே தமிழர்களின் அரசியல் /நீண்டகால இருப்பை தீர்மானிக்கப் போகின்றது என்பது இன்றைய யதார்த்தம். ஆயினும், குறிப்பிட்டளவு தமிழர்கள் குறுகிய கால / மிக அற்ப சிந்தனைகளுடன் வாக்களித்த தேர்தலே நடத்தியிருக்கிறது. இதன் மூலம் தமிழ் மக்கள் தமது இருப்புக்கு தாமே குழிதோண்டியிருக்கிறார்கள். (உடனடி விளைவுகளை கூட அனுபவிக்கின்றார்கள்) நடந்து முடிந்த தேர்தல் சிங்களப் பேரினவாதிகளுகளிற்கு வெற்றி தமிழ் தேசியவாதிகளுக்கு தோல்வி, சாதாரண தமிழரின் இருப்பில் கேள்விக்குறி. இதுவே எனது கருத்து.

# நோர்வே: பேச்சும் தடையும்

~ மகேஸ்


இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான முயற்சிகளில் புலிகளுடனான பேச்சுவார்த்தை தீர்மானகரமான ஒரு பாத்திரத்தை வகிக்கிறது என்பது யாருக்கும் சொல்லித் தெரிய வேண்டிய விடயமல்ல. ஆனால் இங்குள்ள அரசியல் கட்சிகள், மத பீடங்கள் மற்றும் தனிநபர்கள் சிலர் இனவாத நிலையில் நின்றபடி எத்தகைய ஒரு பேச்சுவார்த்தையும் அவசியமில்லை, யுத்தம் மட்டுமே ஒரே வழி என்று கூச்சலிடுகின்றனர். புலிகள் பேச்சுவார்த்தையை தமக்கு சாதகமாகப் பயன்படுத்தி தம்மை இராணுவ ரீதியில் பலப்படுத்தவே முயற்சிப்பர் என்பதால், யுத்தத்தை தொடர்ந்து நடாத்த வேண்டும்



என்பதே அவர்களின் கருத்தாக உள்ளது.

ஆனால், யுத்தம் நடக்கின்ற காலங்களே சமாதானக் காலங்களை விட புலிகள் அரசியல் ரீதியாகவும் இராணுவ ரீதியாகவும் பலமாக இருக்கிற காலங்களாக இருந்து வந்திருக்கின்றன. புலிகள் இயக்கத்திற்கு பெருமளவு ஆட்சேர்தலும், நிதிசேர்தலும் அதிகமாக இருப்பது அவர்கள் யுத்தத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிற காலங்களில் தான் என்பது வெளிப்படை. புலிகள் இராணுவ ரீதியாக தம்மைத் தயார்படுத்த ஒரு பேச்சுவார்த்தைக்கால அவகாசத்தை மட்டும் எதிர்நோக்குபவர்களாக இருந்திருந்தால் இன்று அவர்களது இயக்கம் இத்தனை பலமாக இருந்திருக்க முடியாது. ஏனென்றால் ஒவ்வொரு பேச்சுவார்த்தைக் காலமும் சொற்ப நாட்களாகவே இருந்து வந்துள்ளன.

ஆனால், யுத்தம் செய்தபடியே பேச்சுவார்த்தையை வேண்டுமானால் நடாத்தட்டும் என்று கூறும் சக்திகளுக்கு இந்த விடயங்கள் தெளிவாகத் தெரிவதில்லை. தொடர்ச்சியான யுத்தத்தின் மூலமாகப் புலிகளைப் பின்னடையச் செய்து விடலாம். அதன்பின் அவர்களை இராணுவ ரீதியில் வெற்றி கொண்டு விடலாம் என்ற நம்பிக்கையுடன் இவர்கள் யுத்தத்தை தொடர்ந்து நடாத்தக் கோருகின்றனர்.




சமாதானமென்பது புலிகளின் கோரிக்கைகளை-யெல்லாம் கொடுப்பது, சிங்கள மக்களின் உரிமைகளைப் பறித்தெடுப்பது என்ற அர்த்தத்தில் அது சிங்கள மக்களிடையே இனவாதிகளால் பரப்பப்பட்டுள்ளது. ஒரு வகையில் இந்த அரசாங்கமும் எதிர்க்கட்சியும் இத்தகைய கருத்துக்கள் பரவுவதற்குக் காரணமாக இருந்து வந்திருக்கின்றன. ஆளுங்கட்சியின் சமாதான நோக்கங்களை எதிர்க்கட்சிகள் எதிர்ப்பது என்ற கோட்பாடு தான் இந்த நாட்டின் எதிர்க்கட்சிகள் எல்லாக் காலங்களிலும் கடைப்பிடித்து வந்த கொள்கை. தம்முடைய சொந்த அரசியல் மற்றும் தனிப்பட்ட இலாபங்கட்காக இவற்றை அவர்கள் கடைப்பிடித்து வருகின்றார்கள். நாட்டினதும், மக்களதும் விடிவு, முன்னேற்றம் என்பன பற்றி எந்த அரசியல்வாதிக்கும் உண்மையான அக்கறை இருப்பதாகத் தெரியவில்லை. பாராளுமன்றத்தின் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் அனைவரையுமே மந்திரிகளாகவோ அரைமந்திரிகளாகவோ ஆக்கித் தான் ஆட்சியை ஜனாதிபதியால் நடாத்த முடியும் என்ற நிலைக்கு நாடு சீரழிந்து போய் கிடக்கிறது. அரசியல் என்பது பகல் கொள்ளை நடவடிக்கையாக மாறி விட்டது. இதனால் பேச்சுவார்த்தை என்ற பேச்செழுந்தாலே எங்கே தமது கொள்ளைக்குப் பங்கம் வந்துவிடுமோ என்ற அச்சம் பலரிடமும் காணப்படுகின்றது.

எப்படியோ மீண்டும் ஒருமுறை புலிகள் மூன்றாந் தரப்பு மத்தியஸ்தத்துடனான பேச்சுவார்த்தையொன்றில் திறந்த மனதுடன் பங்குபற்றத் தயார் என அறிவித்துள்ளார்கள். நோர்வே அரசின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெயிமை வன்னிக் காட்டுக்கு அழைத்து பிரபாகரன் நேரடியாகவே பேச்சுவார்த்தைக்கு தயார் என்று அறிவித்திருக்கிறார். பிரபாகரனின் இந்த அழைப்பை ஜனாதிபதி உள்ளிட்ட அரச மற்றும் எதிர்க்கட்சிகளின் உயர்மட்ட தலைவர்கள் வரவேற்றிருந்தாலும் இராணுவ மட்டத்திலும் கீழ்மட்ட அரசியல்வாதிகள் மட்டத்திலும் அதற்குப் பெரிய வரவேற்பு இருப்பதாகத் தெரியவில்லை. ஜே.வி.பி.யோ ஒருபடி மேலே போய் தான் அதை எதிர்ப்பதாக வேறு அறிவித்திருக்கிறது! அதற்கு அது சொல்லும் காரணம் பழைய புளித்துப்போன - லக்ஷ்மன் கதிர்காமரால் அடிக்கடி எரிச்சலூட்டும் விதத்தில் திரும்பத் திரும்பச் சொல்லப்பட்ட - "உள்நாட்டுப் பிரச்சினைக்குள் வெளியார் தலையீடு வேண்டாம்" என்பதைத் தான்.

ஜே.வி.பி ஒரு காலத்திலும் மக்களின் உணர்வலைகளின் உண்மையான அடிப்படையை நாடிப்பிடித்துப்பார்த்துத் தன் அரசியலை நடாத்தியதில்லை. எழுந்து வரும் பிரதான அரசியல் அலையை எதிர்த்து நீச்சல் அடித்ததாகவும் இல்லை. மாறாக ஓடுகிற ஓட்டத்துடன் சேர்ந்து இன்று கூக்குரல் இடுவதையே தொடர்ந்து செய்து வந்திருக்கிறது. இந்தியாவை நோக்கி படைகளை வாபஸ் பெறுமாறு பிரேமதாசா சொன்னதையே தாமும் 1989ல் திருப்பிச் சொல்லி தமது அரசியல் தலைமைத்துவத்தை பிரேமதாசாவிடம் கையளித்துவிட்டு அழிந்து போனது. அது இப்போது இனவாதிகளிடம் தலைமையை வழங்கிவிட்டு நிற்கிறது.

உண்மையில் பிரச்சினைக்கு முன் மூன்றாம் தரப்பு சம்பந்தம் இல்லாமல் தீர்வு காணும் சாத்தியமே இல்லை என்பதில் இருந்து தான் இந்த "வெளியார் தலையீடு" வருகிறது என்பதை ஜே.வி.பியால் ஒருபோதும் புரிந்து கொள்ள முடியாது. உரிமைகளை கொடுக்க மறுக்கும் ஒடுக்குமுறையாளர்களுக்கு முண்டு கொடுக்கும் விதத்திலான அரசியலையே



கடந்த காலம் முழுக்க இலங்கை இடதுசாரிகள் பேசிவந்தனர். ஜே.வி.பி.யும் அந்த வரிசையில் இன்று வந்து நிற்கிறது.

ஆனால், இவர்களது எல்லாக் கூச்சல்கலையும் விட நாட்டின் யதார்த்தம் முக்கியமானது. அது திரும்பத் திரும்ப எல்லாவிதமான கூச்சல்களையும் மீறி மக்களை சமாதானத்தினை நோக்கித் தள்ளிக் கொண்டிருக்கின்றது. சொல்ஹெய்மின் ஆரம்பத்தைப் பின்பற்றி அதை வளர்த்தெடுப்பவர்கள் மக்களின் தேவையைப் பெற தலைமை தருபவர்களாக இருப்பர்: மற்றையோருக்கு போக்கிடம் என்ன என்பதற்கு பல வரலாற்று உதாரணங்கள் உண்டு!

அரசும் புலிகளும் இந்த பேச்சுவார்த்தையை சிறப்புற நடத்த ஒத்துழைப்பார்களாயின் இனவாதிகளின் ஆட்டம் பெரிதாக எடுபடப் போவதில்லை என்பது மட்டும் உண்மை!

○

---

# பொறுப்பான அமைச்சரின் பொறுப்பற்ற பதில்!

~ கிறிட்டிகன்

யாழ்.செய்தியாளர் நிமல்ராஜன் ஏன் கொல்லப்பட்டார்? இந்தக் கேள்விக்கான பதில் உங்கள் எல்லோருக்கும் தெளிவாகவே தெரிந்திருக்கும்.

அக்கொலைக்குக் காரணமானவர்கள் ஈ.பி.டி.பியினர் தான் என்ற சந்தேகமும் பொதுவாக ஊடகவியலாளர்கள் மற்றும் விடயமறிந்தவர்கள் மத்தியில் நிலவுகிறது.

அதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. நிமல்ராஜன் உயிருடன் இருக்கும் போதே தனக்கு ஈ.பி.டி.பியினரிடமிருந்து அச்சுறுத்தல் இருப்பதாக தான் கடமையாற்றிய நிறுவனங்களுக்குத் தெரியப்படுத்தி இருந்தார். ஏ.பி.சி. செய்தி நிறுவனமும், ராவயவும் இதனை உறுதிப்படுத்துகின்றன.

இவ்வாறு நிமல்ராஜனுக்கும் ஈ.பி.டி.பியினருக்கும் இடையே இருந்த முறுகல் நிலைமை கொலைக்குக் காரணமானவர்கள் ஈ.பி.டிபியினர் தான் என்ற ஊகத்துக்கு வழிவகுத்து விட்டது. (இந்த ஊகம் முற்றுமுழுக்கத் தவறாகவும் ஈ.பி.டி.பிக்.கு இதில் சம்பந்தமே இல்லாமலும் கூட இருக்கலாம்.)

இந்த ஊகத்திற்கு ஜனநாயக வழிக்கு வந்ததாகக் கூறிக் கொள்ளும் தமிழ்க் குழுக்களின் கடந்த தசாப்த கால நடவடிக்கைகளும் காரணமாக இருந்தன என்பதை மறுப்பதற்கில்லை.

'தமிழ் மக்களுடைய உரிமைகளுக்காக ஆயுதம் ஏந்தித் தான் போராட வேண்டும் என்றில்லை. அது அழிவுகளையே தரும். ஜனநாயக ரீதியில் அழிவுகளற்ற பாதையில் உரிமைகளைப் பெறுவதற்காகப் போராடுவோம்' எனக் கூறி ஆயுதப் போராட்டத்தைக் கை விட்டவர்கள் பின்னரும் ஏன் ஆயுதங்களைக் கைவிடாமல் இருக்கிறார்கள் என்பதை எப்படி விளங்கிக் கொள்வது?

பாதுகாப்புத் தான் பிரச்சினை என்றால் மற்றைய அமைச்சர்களும் பா.உக்களும் அரச படைப் பாதுகாப்பைக் கேட்டுப் பெற்றுக்



கொள்வது போல இவர்களும் அரசாங்கத்திடம் கேட்டு அரச படைகளின் பாதுகாப்பைப் பெற்றுக் கொள்ளலாம் அல்லவா?

(அப்படைகளால் பூரண பாதுகாப்பை வழங்க முடியாது என்ற சந்தேகமா இவர்களுக்கு? - அவ்வாறு சந்தேகம் இருக்குமானால் புலிகளை மட்டும் ஆயுதங்களைக் கைவிட்டு வாருங்கள் என்று இவர்கள் கேட்பது நகைப்பாக இல்லையா?)

அவ்வாறில்லாமல் இத்தமிழ்க் குழுக்கள் ஆயுதங்களைத் தம் வசம் வைத்திருக்கும வரை இவ்வாறான சந்தர்ப்பங்களின் போது மக்கள் அவற்றை நோக்கித் தங்கள் கேள்வியை எழுப்புவது நியாயமானதாகத் தானிருக்கும்.

இவ்வாறான சந்தேகம் தொடர்பாக தினக்குரல் பத்திரிகையாளர் ஒருவர் கேட்ட கேள்விக்கு பொறுப்பு வாய்ந்த அமைச்சரான டக்ளஸ் தேவானந்தா அவர்கள் என்ன சொல்கிறார் என்பதைக் கவனியுங்கள்.

"... இதற்கெல்லாம் அப்பால் நிமல்ராஜனின் மறுபக்கத்தை பத்திரிகை உலகம் மறந்து விட்டது. பத்திரிகையாளர் என்ற போர்வையில் நிமல்ராஜன் ஒரு புலி ஏஜென்டாகவே செயற்பட்டவர் என்பதை யாழ்.மக்கள் நன்கு அறிவார்கள். யாழ்ப்பாணத்தில் கடந்த காலங்களில் இடம் பெற்ற அரசியல் படுகொலைகளான யாழ்.மாநகர சபைக் குண்டு வெடிப்பு, யாழ்.மாநகர சபை மேயர் சரோஜினி யோகேஸ்வரன் படுகொலை, கூட்டணி முக்கியஸ்தர் மதிமுகராசா, யாழ்.வர்த்தகர் சங்கத் தலைவர் நமசிவாயம் மற்றும் ஈ.பி.டி.பியின் பத்து பிரதேச சபை உறுப்பினர் படுகொலை என்பவற்றுடன் நிமல்ராஜனுக்கு நெருங்கிய தொடர்பிருக்கிறது.

⇨16

## பொறுப்பற்ற நிர்வாகமும் வவுனியா தாதியர் போராட்டமும்

- தீபன்

ஆளணி பற்றாக்குறைக்கு மத்தியில் கஸ்டப்பட்டு கடமையாற்றிய போதிலும், வவுனியா ஆதார வைத்தியசாலையில் பணியாற்றுகின்ற தாதியர் தமக்குரிய மேலதிக வேலை நேரக் கொடுப்பனவுகளை காலத்துக்கு காலம் வேலை நிறுத்தப் போராட்டம் நடத்தியே அதிகாரிகளிடமிருந்து பெற வேண்டி இருப்பதாகத் தெரிவிக்கின்றனர்.

ஒவ்வொரு மாதத்திற்கும் உரிய மேலதிக வேலை நேரக் கொடுப்பனவுகளை 30 நாட்களுக்குள் வழங்கி முடிக்க வேண்டும் என்பது சுகாதாரத் திணைக்களத்தின் ஒழுங்குவிதி. ஆனால் வவுனியா வைத்தியசாலை தாதிகளுக்கு மே மாதம் தொடக்கம் கடந்த 6 மாதங்களுக்கு மேலாக மேலதிக வேலை நேரக் கொடுப்பனவுகள் நிலுவையாக உள்ளன. வைத்தியர்கள், சிற்றூழியர்களுக்கான கொடுப்பனவுகளும் இவ்வாறே நிலுவையாக இருக்கின்றன. இருந்த போதிலும், இந்தக் கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொடுப்பதில் வவுனியா பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரும், கணக்காளர் மற்றும் உரிய அதிகாரிகளும் அக்கறையோடு செயற்படுவதில்லை என்று குற்றம் சாட்டப்படுகின்றது.

திருகோணமலை, அனுராதபுரம் போன்ற அயல் மாவட்டங்களிலும், குறிப்பாக வன்னிப் பகுதியைச் சேர்ந்த தாதிகளுக்கு உரிய மேலதிக வேலை நேரக் கொடுப்பனவுகள் உரிய காலத்தில் கிரமமாக வழங்கப்பட்டு வருகின்ற போது, தமக்கு மாத்திரம் ஏன் இந்தக் கதி என்று, வவுனியா ஆதார வைத்தியசாலையைச் சேர்ந்த தாதிகள், வைத்தியர்கள், சிற்றூழியர்கள் கேள்வி எழுப்பியுள்ளார்கள்.

> **படிவங்கள் ஒழுங்காக அடுக்கப்படாததால் மேலதிக வேலை நேரக் கொடுப்பனவு இல்லை!**

கடந்த மாதத்தில் இந்தக் கொடுப்பனவுகள் தொடர்பாக ஏற்பட்ட பிணக்குகளை அடுத்து தாதிகள் வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு ஏற்பாடுகள் செய்தவுடன், பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், வவுனியா மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி பசுபதிராஜா மூலமாக தாதிகள் சங்கத்தினரைச் சந்தித்து கொடுப்பனவுகளை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுப்பதாக உறுதியளித்தார்.

அதன்படி, 4 மாதக் கொடுப்பனவுகளில் 2 மாதத்திற்குரியவற்றை 2 வார காலத்தில் வழங்குவதென்றும், மிகுதி 2 மாதங்களுக்கு உரியவற்றை அடுத்த 2 வார காலத்திலும் வழங்கப்படும் என்று உடன்பாடு ஏற்பட்டு அது எழுத்து மூலமாக பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் உறுதிப் படுத்தப்பட்டிருந்தது.

ஆயினும் 3 வாரங்கள் கடந்த பின்னரும், நிலுவையாக உள்ள மேலதிக வேலை நேரக் கொடுப்பனவுகள் பற்றி எதுவித மூச்சும் விடப்படவில்லை. இதுபற்றி பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் கேட்ட போது கொடுப்பனவுக்குரிய ஒரு மாதத்திற்கான பணமே வடக்கு கிழக்கு மாகாண அமைச்சிலிருந்து தமக்குக் கிடைத்துள்ளதாகவும் அதை மட்டுமே வழங்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டதாம்.

இந்த அக்கறையற்ற போக்கைக் கண்டித்தும், தமக்குரிய கொடுப்பனவுகளை உடன்பாட்டின்படி உடனடியாக வழங்க வேண்டும் என்று கோரியும் கடந்த திங்கட்கிழமை காலை தாதிகள் தமது கடமைகளைப் புறக்கணித்து 3 மணித்தியாலங்கள் வெளிநடப்பு செய்தார்கள்.

இந்த தொழிற்சங்க நடவடிக்கை தொடர்பாக எழுதிய கடிதத்திற்கு உடனடியாகவே வடக்கு கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளருக்கு உரிய பணத்தை அனுப்பி வைக்குமாறு கோரி பதில் அரசாங்க அதிபரும், மேலதிக அரசாங்க அதிபருமாகிய எஸ்.இரகுநாதபிள்ளை பக்ஸ் செய்த கடிதத்தின் நகல் தாதியர் சங்கப் பிரதிநிதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

ஆயினும் அன்று மாலை வரையிலும் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரோ, அல்லது அவருடைய அலுவலகத்தினரோ எதுவிதமான நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவும் இல்லை.

கடமைகளைப் புறக்கணித்து வெளி நடப்பு செய்த தாதியர் சங்கத்தினருடன் தொடர்பு கொள்ளவில்லை. அன்று மாலை அதுவும் அலுவலக நேரம் முடிந்த பின்பு தான் மாவட்ட வைத்திய அதிகாரி மூலமாகப் பேச்சுக்கள் நடத்த வேண்டும் என்று பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அழைப்பு விடுத்திருந்தார் என்றும், தமக்கு வேண்டியது பணக்கொடுப்பனவே அல்லாமல், பேச்சுவார்த்தைகளும் வெறும் உறுதி மொழிகளும் அல்ல என்று அந்த அழைப்பை ஏற்க மறுத்து, மறுநாள் தாங்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டதாகவும் தாதியர் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

செவ்வாயன்று, வன்னி பாராளுமன்ற உறுப்பினர் வினோதலிங்கம் (டெலோ), வவுனியா மேலதிக அரசாங்க அதிபர் ஆகியோரின் அழைப்பின் பேரில், வவுனியா ஆதார வைத்தியசாலையின் நூலகக் கட்டிடத்தில் வேலை நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான கூட்டம் ஒன்று நடைபெற்றது.

தாதியர் கையெழுத்திட்டு அனுப்பியிருந்த மேலதிக வேலை நேரக் கொடுப்பனவு விபரங்கள் அடங்கிய கோரிக்கைப் படிவங்கள் ஒழுங்கின்படி அடுக்கியிருக்கவில்லை என்றும், அதனால் அவற்றை முறையாகப் பரிசீலனை செய்வதற்கு முடியாதிருப்பதாகவும், இவற்றைப் பரிசீலனை செய்வதற்கு தமது அலுவலக எழுதுநருக்குக் கால அவகாசம் தேவை என்றும் பொறுப்பற்ற முறையில் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பதிலளித்தாராம்.

இதேவேளை, மேலதிக வேலை நேரக் கொடுப்பனவுக்குரிய படிவங்களை பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கும் கடமைக்குப் பொறுப்பான எழுதுனர், இக்கூட்டத்தில், அந்தப் படிவங்கள் உரிய ஒழுங்கிலேயே அனுப்பி வைக்கப்படுகின்றன என்பதை எடுத்துக் கூறியபோதும், அதனை ஏற்க அவர் மறுத்து பதிலளித்த பொறுப்பற்ற தன்மையைப் பலரும் அதிருப்தியோடு சுட்டிக் காட்டுகின்றார்கள்.

வவுனியா ஆதார வைத்தியசாலைக்கு வன்னிப்பகுதியில் இருந்தும் வவுனியா மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் நாளாந்தம் நூற்றுக்கணக்கான நோயாளிகள் பல்வேறு வைத்திய சேவைகளுக்காக வருகின்றார்கள். இதனால், வைத்தியசாலையின் விடுதிகளும், வெளிநோயளார் பகுதியும் நோயாளர்களினால் நிரம்பி வழிகின்றது. ஆதார வைத்தியசாலையின் தரத்தில், அதற்குரிய முழுமையான வசதிகளும் அற்ற நிலையில் உள்ள இந்த வைத்தியசாலையின் அனைத்துப் பிரிவுகளிலும், ஆளணிப் பற்றாக்குறை இருக்கின்றது. இந்த நிலையிலேயே அங்கு பணிகள் நடைபெறுகின்றன.

ஆயினும் ஊழியர்களுக்கு உரிய கொடுப்பனவுகள், வழங்கப்பட வேண்டிய சலுகைகள் என்பவற்றில், இதற்கு நேரடியாகப் பொறுப்பாகவுள்ள பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரும் அலுவலகத்தினரும் அலட்சியப் போக்குடனேயே நடந்து கொள்வதாக வைத்தியசாலை பணியாளர்கள் தெரிவிக்கின்றார்கள்.

வடக்கு கிழக்கு மாகாண சுகாதார அமைச்சினரும் சுகாதாரத் திணைக்கள ஊழியர்களின் தேவைகள், உரிமைகள், சலுகைகள் என்பவற்றில் செலுத்தப்பட வேண்டிய உரிய கவனத்தையும் அக்கறையையும் செலுத்தாமல் இருப்பதாகவே தெரிவிக்கின்றது. எனினும் தாய் இரண்டடி என்றால், குட்டி இருபது அடி பாய்கின்றது என்ற நிலையிலேயே வவுனியா பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் செயற்பட்டு வருவதாக வைத்தியசாலை மற்றும் சுகாதாரப் பகுதி ஊழியர்கள், பணியாளர்கள் தெரிவிக்கின்றார்கள்.

◉

## வவுனியா: காணாமல் போகும் இளைஞர்கள்

கடந்த நவம்பர் 06ம் திகதி அன்று ஆறு பேர் காணமல் போயுள்ளனர். இவர்கள் காணாமல் போனது பற்றி உறவினர்கள் மனித உரிமை காரியாலயத்தில் முறையிட்டுள்ளனர். இதன் போது படையினராலேயே இவர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர் என உறவினர்கள் மனித உரிமை காரியாலயத்தில் தெரியப்படுத்தியுள்ளனர். இதனையடுத்து மனித உரிமைக் காரியாலய வன்னி இணைப்பாளர் ஸ்ரீதரன் படை உயர் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது தாம் கைது செய்யவில்லை என படை அதிகாரிகள் மறுத்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் தங்கவேல் கிருஸ்ணகுமார் (23) தவசிகுளத்தை சேர்ந்தவர். வீட்டிலிருந்து நகரக் கடைக்குப் போகும் போது காணாமல் போயுள்ளார். பெரியசாமி சுதர்சன் (18), நடராஜா கடை மகாறம்பைக் குளத்தைச் சேர்ந்தவர், கொக்குவெளி பகுதிக்குச் சென்ற வேளை காணாமல் போயுள்ளாா, காந்திநாதன் திருமகன் (21) கட்டையர்குளம். குமாரசாமி கிருஸ்ணகுமார் (20) கட்டையர்குளம். செங்கமலம் சடையாணி (42) தரணிக்குளம். முத்து கணேசன் (25) வயது கட்டையர்குளம் என்ற விபரமுடைய நால்வரும் பறங்கியாறு பகுதியில் மணல் ஏற்றச் சென்ற வேளை காணாமல் போயுள்ளனர். இந்த ஆறு பேரும் ஒரே நாளில் காணாமல் போயுள்ளனர். உறவினர்களின் தகவலின்படி படைத் தரப்பினரே கைது செய்துள்ளனர் எனத் தெரிய வந்தன் பின்பும் படைத் தரப்பினரால் மறுக்கப்படுகின்றது என மனித உரிமை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதே வேளை கடந்த மாதம் முகமட் ஹனீபா, சுதந்திரபுரத்தைச் சேர்ந்த மங்களகுமார் (20) ஆகியோர் நவம்பர் 3ம் திகதி அன்று தொடக்கம் காணாமல் போயுள்ள்னர். சண்முகலிங்கம் துஸ்யந்தன் (19) பட்டைக்காட்டைச் சேர்ந்தவர் நவம்பர் 07ம் திகதி அன்று தொடக்கம் காணாமல் போயுள்ளார். தர்மலிங்கம் ஸ்ரீரங்கநாதன் (21) பட்டைக்காட்டை சேர்ந்தவர் நவம்பர் 01ம் திகதி அன்று தொடக்கம் காணாமல் போயுள்ளார். இந்த மூவரும் படைத்தரப்பினராலேயே கைது செய்யப்பட்டிருக்கலாம் என உறவினர்களின் தகவலில் இருந்து சந்தேகிக்கப்படுவதாக மனித உரிமை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதைவிட சந்திரசேகர் சங்கர் (16), சுப்பிரமணியம் ரகுநாதன் 16, தர்மலிங்கம் முருகானந்தன் (16), அழகு சிவகுமார் (கண்ணன்) (22), கணேசன் அசோக்காந் (கண்ணா) (15), இராமகிருஸ்ணன் மொசாஸ் (20) நவரட்னம் பிரதீபன் (17), சுப்பையா காங்கேசன் (15), பால்ராஜ் செல்வகுமார் (22) ஆகியோர் பூந்தோட்டம் பகுதியில் உள்ள நலன்புரி நிலையத்திலிருந்தும், இராமலிங்கம் சுதன் (13), பழனியாண்டி மணிவண்ணன் (35) வயது ஆகியோர் சிதம்பரபுரம் நலன்புரி நிலையத்திலிருந்தும் காணாமல் போயுள்ளனர்.

நலன்புரி நிலையத்திலிருந்து காணாமல் போனவர்கள் எப்படி காணாமல் போனார்கள் என்ற விபரங்களை மனித உரிமை காரியாலயத்தில் உறவினர்கள் தெரிவிக்கவில்லை. வவுனியாவில் காணாமல் போவோருடைய விபரங்கள் வெளியாகியதும் பொது மக்களிடையே அச்ச உணர்வொன்று ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக இளையவர்களின் பெற்றோர் பெரிதும் தமது பிள்ளைகளை எண்ணி கவலைப்படுகின்றனர். காணாமல் போகும் விபரங்கள் வெளியாகின்றதே தவிர என்ன ஆனார்கள் என்பது பற்றி எவராலும் கண்டுபிடிக்க முடியவில்லை. வவுனியாவில் காணாமல் போவது ஏற்கனவே பலமாதங்களாக நடந்து வந்துள்ளது. தேர்தல் காலத்தில் சற்று குறைந்திருந்தது தற்பொழுது மீண்டும் அதிகரித்துள்ளது.

## வவுனியா: கைது செய்யப்பட்ட பெண் சித்திரவதை!

கடந்த ஒக்.மாதம் 25 ஆம் திகதி தாண்டிக்குளம், திருநாவற்குளத்தில் உள்ள தம்பதிகள் இருவா' அவர்களின் வீட்டில் இருந்தவேளை, அவர்களுடைய காணியில் கிளமோர் கண்ணிவெடி ஒளித்து வைக்கப்பட்டிருந்தது என்ற சந்தேகத்தின் பேரில் கணவன் மனைவி இருவரும் கைது செய்யப்பட்டு விசாரணைக்காகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். கணவனாகிய செல்வன் இராசதுரை (47), அவருடைய மனைவியாகிய் இராசதுரை வசந்தமாலா (40) ஆகிய இருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

கைது செய்யப்பட்ட கணவன் வவுனியா கிளர்ச்சித் தடுப்பு பொலிஸ் பிரிவிலும், மனைவி வவுனியா பொலிஸ் நிலையத்திலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். மனைவியாகிய வசந்தமாலா பொலிஸ் நிலையத்தில் இருந்து விசாரணைக்காக கிளர்ச்சித் தடுப்பு பொலிசாரினால் விசாரணைக்காக 26 ஆம் திகதி கொண்டு செல்லப்பட்டு திரும்பவும் கொண்டுவந்து பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

தனது வீட்டில் இருந்த போது கைது செய்யப்பட்டதும், தான் தாக்கப்பட்டதாகவும், அதேபோல, பொலிஸ் நிலையத்தில் இருந்து கொண்டு சென்று விசாரணை செய்யப்பட்டபோதும் தான் தாக்கப்பட்டதாக இவரைப் பொலிஸ் நிலையத்தில் சென்று கடந்த முதலாம் திகதி மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் சென்று பார்வையிட்டபோது முறையிட்டுள்ளார்.
முழங்கைக்கும் தோள் மூட்டுக்கும் இடைப்பட்ட மேல் கை பகுதியில் கண்டல் காயமும், வீக்கமும் இருப்பதை அவர் மனித உரிமைகள் குழுவினருக்குக் காட்டியுள்ளார். அத்துடன், முதுகில் தான் தாக்கப்பட்டதனால், முள்ளந்தண்டில் நோ இருப்பது பற்றியும் அவர் மனித உரிமைகள் ஆணைக்குழுவினருக்குத் தெரிவித்துள்ளார்.


⇨19

# ஈழத்தமிழர் பற்றிய பேச்சுக்கு பலத்த வரவேற்பு இருந்தது!

## ஓர நிகழ்வுகள்~6

**தமிழ் இனி 2000 மாநாட்டின் போது இடம்பெற்ற மைய நிகழ்வுகளோடு சமாந்தரமாக இடம்பெற்ற ஓர நிகழ்வுகள் இன்னும் சுவையானவை. இது பல்வகைப்பட்ட மன ஓட்டங்களையும், அதன் நிறப்பிரிகைகளையும் காட்டுவனவாக அமைந்தன. எனது பார்வைக்கு அகப்பட்டவற்றின் பதிவே இது.**

**- மு.பொ.**




தமிழ் நாட்டில் உள்ளது போல் இலக்கியக் குழுவாதங்கள் இலங்கையில் இல்லை என்றே கூறவேண்டும். இலங்கையில் இருப்பதெல்லாம் முற்போக்கு எழுத்தாளர் அணியும், அதைச் சேராத எழுத்தாளர்களுமே. இன்று முற்போக்கு எழுத்தாளர் சங்கம் என்பதோ "இறந்து பிரேதமாகி வெகுகாலமாகியும் அடக்கஞ் செய்யப்படுவதற்கு யாரும் இல்லாது நாறுவதாக" அதைச் சேர்ந்த முக்கிய பிரமுகர் ஒருவர் கூறியுள்ளார். இந்நிலையில் அதன் முக்கியத்துவம் இன்று வெறும் பெயரளவிலேயே உள்ளது என்பது புலனாகும்.

ஆனால், தமிழ் நாட்டில் இவ்வாறு இல்லை என்றே கூறவேண்டும். இலங்கையில் காணப்படுவது போல் கொள்கை ரீதியாக அணிபிரியாது தமது புத்திஜீவித்தனங்களைக் காட்டுவதற்காக ஏற்படுத்தப்பட்ட குழுக்களே ஏராளம் எனலாம். அஃ, கசடதபற, யாத்ரா என்று தொடங்கிய குழுவாதங்கள் இன்னும் ஓயவில்லை என்றே சொல்லலாம். அன்று தருமு சிவராமுவோடு ஒரு குழுவென்றும், வெ.சாவோடு இன்னொரு குழுவென்றும் இயங்க, தமிழவன் ஆகியோர் வேறாக இன்னொரு புறத்தில் இயங்க, இப்போ நிறப்பிரிகை, ராஜ்கௌதமன், எஸ்.வி.ஆர். என்று ஒரே கருத்தில் வெவ்வேறு பார்வை விழுமியங்கள். இவற்றோடு, பிரேம் ரமேஷ், சாருநிவேதிதா வட்டச் சச்சரவுகள்....

நான் அம்பையிடம் சாருநிவேதிதாவின் சீரோ டிகிரி விவகாரங்கள் பற்றிப் பிரஸ்தாபித்த போது அம்பை தனக்கே உரிய நகைச்சுவைப் பாணியில் பின்வருமாறு குறிப்பிட்டார்.

"O டிகிரியை தாம் தான் எழுதிக் கொடுத்ததாக பிரேம் ரமேஷ் சொல்கிறார்கள். அதேநேரம் அது நல்ல நாவல் அல்ல என்றும் சொல்கிறார்கள். அப்படியென்றால் கூடாத நாவலை எழுதியவர்கள் பிரேம் ரமேஷ் தான். சாருநிவேதிதா அல்ல" என்று கூறிவிட்டு அம்பை சிரித்தார்.

சிரிக்காமல் வேறென்ன செய்வது?

இத்தகைய குழுவாதங்கள் தமிழ்நாட்டில் நிறையவே உண்டு. அதனால் தான் ராஜ்கௌதமன் நறுக்குத் தெறித்தாற் போல் "நான் யாரோடும் சேர்வதில்லை" என்று கூறினார் போலும்.

ஆனால், இதற்காக இலங்கை எழுத்தாளர்கள் பெரிய உயர்த்தி என்று சொல்வதற்கில்லை.

இலங்கை முற்போக்கு எழுத்தாளர்கள் என்பவர்கள் ஆரம்ப காலத்திலிருந்தே தமிழ்த் தேசியத்துக்கு எதிராகவும், துரோகம் இழைப்பவர்களாகவுமே இருந்து வந்துள்ளனர். ஆனால், அவர்களின் பிதாமகர்கள் எனச் சொல்லப்படுபவர்கள் தமது கடைசிக் காலத்தில் ஞானோதயம் பெற்று 'தமிழ்த் தேசியப் பிரச்சினையில் பிழைசெய்து விட்டோம்' என்று கூறியதற்குப் பின்னரும், சோவியத் யூனியன் உடைவுக்குப் பின்னரும் தம்மை மாற்றிக் கொண்ட சிலர் போக ஏனையவர்கள் எல்லாருமே இன்றும் அதே கோணல் நெஞ்சங்களோடு தான் வாழ்கின்றனர்.

என்முன்னே என்னோடு பல்கலைக்கழகத்தில் படித்த தீவிர மார்க்சீயவாதிகளின் முகங்கள் மிதந்தன. இவர்கள் தாம் பிறந்து வளர்ந்த சூழலின் காரணமாக மார்க்சியம் பேசியவர்கள். பின்னர் பட்டம்பெற்று நல்ல பதவிகள் வாய்க்கப் பெற்றதும், தாம் காதலித்த பெண்களுக்கே 'கல்தா' கொடுத்துவிட்டு நல்ல சீதனம் வாங்கிக் கலியாணம் முடித்ததோடு மார்க்சீயத்துக்கே பிரியா விடை கூறியவர்கள்.

அனேகமான மார்க்சீயவாதிகள் சந்தர்ப்பவாதிகளாகவே மார்க்சீயத்தையும் தம் சந்தர்ப்பவாத அரசியலுக்கு முண்டு கொடுக்கப் பாவிப்பவர்களாகவே இருக்கின்றனர். இன்று தமிழ் தேசியத்துக்கு எதிராக அவர்களால் குரல்கொடுக்க முடியாதளவு நிலைமை மாறிவிட்டாலும் 'யாழ்ப்பாணத்தான் - மட்டக்களப்பான்' என்கிற குறுகிய வாதங்களையும் அத்தகைய கவலைக்குரிய சிறுமைகளையும் பல்கலைக்கழக மட்டங்களிலும் செய்பவர்களாக இன்றைய பல்கலைக்கழகப் புத்திஜீவிகள் சிலர் உள்ளனர்.

தமிழ் இனி 2000 முதல்நாள் அமர்வுகள் முடிவுக்கு வருந்தறுவாயில் எனது நண்பர் ஒருவர் என்னிடம் வந்து "பொன்னம்பலமும் வில்வரத்தினமும் எல்லாத்தையும் தூக்கி எறிஞ்சிற்றாங்களே' என்று ஒருகதை அடிபடுகுதே, அப்படி நீங்கள் என்ன செய்தீர்கள்?" என்று கேட்டார்.

"அப்படி உங்களுக்கு சொன்னது யார்?"

"ஒரு பல்கலைக்கழக முற்போக்கு புத்திசீவி" என்று நண்பர் கூறினார்.

"யாம் ஒன்றும் அறியோம் பராபரமே" என்று எனக்குள் முணுமுணுத்துக் கொண்ட நான், எனது மோப்பசக்தியை தொடர்ந்த போது நந்தினிசேவியர் கைகொடுத்தார். இவர் வில்வரத்தினத்தின் றூம்மேற். இப்போ விஷயம் விளங்கிற்று.

முதல்நாள் தமிழக புதுமைப்பித்தன் அரங்கின் இணைப்பாளராக சு.வில்வரத்தினம் கடமையாற்றினார். அவரது குரல் வளம் அதற்குப் பொருத்தமாகவே இருந்தது.

முதல்நாள் அமர்வில் பேசிய தமிழக ஆய்வாளர் ஒருவரால் தமிழக மார்க்சீய முற்போக்குவாதிகளின் சில தமிழ் விரோத போக்குகளைச் சாடினார். அவர் தனது பேச்சை முடித்ததும் இணைப்பாளராக இருந்த சு.வி., இலங்கையில் உள்ள தமிழ் முற்போக்குவாதிகளும் இந்த விதத் துரோகங்களைத் தான் செய்கிறார்கள்.


அம்பை

1961 தமிழரசுக் கட்சியினர் கச்சேரியில் தமிழர்களின் உரிமைக்காகப் போராடிக் கொண்டிருந்த காலத்தில் தமிழகத்தில் இருந்து ராமமூர்த்தி என்ற முற்போக்காளரை அழைத்து எமது உரிமைப் போராட்டத்தை பிற்போக்குவாதிகளின் போராட்டம் என்று பேசவைத்த 'பெருமை'க்குரியவர்கள். இன்றைக்கும் இதே துரோகம் தான் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது" என்று கருத்துப்பட அவர் பேசினார்.

சு.வியின் குறிப்பு அவருக்குக் கொடுக்கப்பட்ட கடமைக்கு அப்பால் பட்டதாக இருந்தாலும் அத்தனையும் சரியே.

இதுதான் பல்கலைக்கழக முற்போக்கு புத்திஜீவிகளுக்கு 'எல்லாவற்றையும் தூக்கி எறிஞ்சிற்றாங்களே' என்று சொல்ல வைத்ததா?

இரண்டாம் நாள் சேவியரின் ஆய்வுரை முடிந்ததும் மீண்டும் ஒரு சலசலப்பு எழுந்தது.

பார்வையாளர்களில் ஒருவராக இருந்த கிழக்குப் பல்கலைகழக விரிவுரையாளர் ஒருவர் எழுந்து "கைலாசபதியின் பெருமை பேசிவிட்டு இறுதியாக "மு.தளையசிங்கமும், மு.பொன்னம்பலமும் காழ்ப்புக் கொண்டு கைலாசபதியை விமர்சித்தனர்" என்று பேசி முடித்தார். இதைக் கேட்டு விட்டு அங்கிருந்த வில்வரத்தினம் எழுந்து அமைதியாக யாழ்ப் பல்கலைக்கழகத்துள் பொதுவுடமை அமைப்பொன்றை நிறுவுமாறு கைலாசபதி மாணவர் ஒருவரை கேட்டதும், அதற்கு அம்மாணவர் முதலில் கொம்யூனிஸ்ட் கட்சியை, தமிழர் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக் கொள்ளச் செய்யுமாறு கைலாசபதியைக் கேட்டதும் அதை கைலாசபதியால் செய்ய முடியாமல் போனது பற்றியும், உலகத் தமிழாராய்ச்சி மாநாடு யாழ்ப்பாணத்தில் நடந்தபோது க.கைலாசபதி போன்றவர்கள் நடந்த விதம் பற்றியும் ஆதாரங்களோடு பேசினார். கைதட்டல் எழுந்தது.

பொதுவாக தமிழ் இனி 2000 அமர்வுகளின் போது ஈழத்தமிழர் பிரச்சினை பற்றிப் பேசப்படும் போதெல்லாம் தமிழக அன்பர்கள் பெரும் ஆதரவு காட்டி கைதட்டி வரவேற்றதையே காணக்கூடியதாக இருந்தது.

**'ஐயா, உங்க நாடுகளில் நடக்கிற விஷயங்களை விட்டிட்டு, இங்க நடக்கிறதைப் பாருங்கையா, இங்கே தமிழ் நாட்டு அகதி முகாம்களில் ஒரு நேரச்சோற்றுக்கு வழியில்லாமல் கஷ்டப்படுகிற ஈழத்தவரைப் பாருங்கையா' என்றார்.**

ஈழத்து வரலாறு பற்றி வி.ரி.தமிழ்மாறன் பேசிய போது அங்கிருந்தோர் யாவரும் உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருந்தனர். அதற்கேற்றவாறு அவரது ஆய்வுரையும் மிகச் சிறப்பாக அமைந்திருந்தது.

புலம்பெயர் எழுத்தாளர்களின் ஒன்றுகூடலை சுசீந்திரன் நடத்திக் கொண்டிருந்த போது, ஒரு தமிழக அன்பர் பலமாகப் பின்வருமாறு கத்தினார்.

"ஐயா, உங்க நாடுகளில் நடக்கிற விஷயங்களை விட்டிட்டு, இங்க நடக்கிறதைப் பாருங்கையா, இங்கே தமிழ்நாட்டு அகதி முகாம்களில் ஒரு நேரச் சோற்றுக்கு வழியில்லாமல் கஷ்டப்படுகிற ஈழத்தவரைப் பாருங்கையா" என்றார்.

**(இன்னும் வரும்)**

## "மீண்டுமோர் பௌர்ணமியில்"

ஆறு கழிவியோடும்
என் கிராமம் -

சொற்கள்,
உயிர்த்துகிலிழந்து
எழுத்துப் பிரேதங்களான
ஒரு
ஆரம்பகாலக் கவிதையைப் போல் -

மீண்டுமொருமுறை
தோண்டப்பட்ட நகரைப்போல்
தீக்குளித்த
ஓலைக் கூரைகள்
உருக்குலைந்த சுவர்கள் -

தலைமுறை இழப்பின் சாட்சியாய்
வசமிழந்த வயல் வெளிகளில்
தொலைந்து போன வாழ்க்கையை
ஏர்முனையால் தேடும்
ஏழை விவசாயிகள் -

எலும்புகள் இடறும்
இடம் பெயர்ந்த
இராணுவ முகாமொன்றின் எச்சம் -

போரின் அறுவடையாய்
விஷநீலத் தீற்றலுடன்
நிராதரவான
விதவை முகங்கள் -

தெருவோர விருட்சங்களில்
வீரவணக்கத்தில் என்றோ
கனவுகளுடன் சிரித்த
இளைய தலைமுறையின்
நிழல்கள் -

சுவரையும் ஊடுருவிக் கசிந்து
காற்றில் கலந்து வெளியேறும்
வறுமையைச் சபித்த
குரல்கள் -

உயிரின் இருப்பை யாசித்துப்
பசிபோக
இராப்பொழுதைத் தமக்குள்
பேசிக்கழிக்கும்
முதிர்வுகள் - என
ஓய்வொழிச்சலற்ற
ஒவ்வொரு நாளையும் தின்றுவிட்டு
காலங் கழிந்தோடும்
மாற்றமின்றி

மீண்டுமோர் பௌர்ணமி
நிலவின்
ஜலக் கிரீடைக்குள் மூழ்க எத்தனித்த
கிராமத்தைச் சுற்றி,
வைரத்தில் குளித்த
விகாரங்(ரை)களிலிருந்து
புடம் போட்டுப் புறப்பட்ட
காக்கிச் சட்டைகள் -

நாளையப் பொழுது
யார் தலையில் விடியுமென்று
நேரந் தவறிக்கூவும்
சாமத்துக் கோழிகள் -

உச்சியிலே...
அணில்கள் புணர்ந்து விளையாட,
இராக்குருவிகள்
எச்சமிட
ஊரின் எல்லையிலே
காளி தெய்வம்
காவல் தெய்வம் -

இராணுவம்
சந்தேகத்தில் உடைத்துக் கொண்டுபோன
சூலாயுதத்தையுமிழந்து,
ஊர்ப்படையலை
உண்டுகளித்தின்னும்
பயமுறுத்திக் கொண்டிருக்கும்
பக்தர்களை மட்டும் -

இன்னும்
ஆறு கழுவியோடும்
என் கிராமம்.

~ அ.ச.பாய்வா

# நோபல் பரிசு
# சீனாவிற்கா அல்லது இலக்கியத்திற்கா?

புதிய நூற்றாண்டின் முதலாவது நோபல் பரிசு இம்முறை யாருக்குக் கிடைத்திருக்கிறதென்று தெரியும் தானே? சீனத் தேசத்தவருக்கு.....! என்றாலும் அவர் தற்போது பிரான்சியப் பிரஜை. இவரின் பெயரை அறிவித்த பின்னர் தான் இவர் யாரென்ற தேடலில் பலர் இறங்கத் தொடங்கியிருக்கிறார்கள். உண்மையிலேயே இவர் இலக்கிய உலகில் "பிரபலமில்லாதவராம்" சிலர், - சிலரென்றால் சர்வதேச இலக்கிய உலகில் சஞ்சரிப்பவர்கள் கூட - இப்போது தான் இவரின் பெயரை முதற் தடவையாகக் கேட்கிறார்களாம்.

இங்கு வெளியாகும் அரபுப் பத்திரிகைகளின் இலக்கியப் பக்கங்கள் இவரைப் பற்றி நிறையவே எழுதித் தள்ளிக் கொண்டிருக்கின்றன. அரபுலகில் இதுவரை இலக்கியத்திற்கான நோபல் பரிசு நஜீப் மஃபூஸ் என்கிற ஒரேயொருவருக்குத் தான் வழங்கப்பட்டிருக்கிறது. இவர் பற்றி முன்னம் எழுதினேன் தானே?

அதற்கு முதல் இன்னொன்று. நான் கொஞ்ச நாட்களாக மத்திய கிழக்கு "சைக்கி"யில் எழுதுவதற்காக ஒன்றும் நினைக்காதே. மத்திய கிழக்குத்தான் இப்போது சர்வதேச அரசியலுலகில் சூடுபிடித்துப் போயிருக்கும் பிரதேசம். அடுத்தது சைக்கி என்பது ஏதோ ஒரு வகையில் நம் தமிழெழுத்துக்களில் வெளிப்பட்டுக் கொண்டும், சில போதுகளில் ஆதிக்கம் செலுத்திக் கொண்டும் தானே வருகிறது. சரி சரி அதை விடு.

பொதுவாகவே நம்மால் சீனப்பெயர்களை ஆங்கிலத்தில் எழுதினாலேயே வாசிக்கக் கஷ்டப்படுவோம். அவ்வாறான பெயரை அரபு மொழியில் வாசிப்பதென்றால் சும்மாவா? சத்தியமாய் இதை எழுதிக் கொண்டிருக்கும் இந்நேரம் வரை அவரின் பெயரின் சரியான உச்சரிப்பை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. சீவ் சீங்யான் என்பது தான் அவரது பெயராக இருக்குமென்று கஷ்டப்பட்டுக் கண்டு பிடித்துள்ளேன். அங்கு தமிழ் பத்திரிகைகளில் எப்படி வந்திருந்தது?

இவர் பற்றிய ஒரு சிறு குறிப்பு இதோ: 1940ல் சீனாவின் கிழக்குப் பிராந்தியத்திலுள்ள யாத்ஸ்காவ் என்ற இடத்தில் பிறந்திருக்கிறார். தந்தை ஒரு வங்கித் தொழிலாளி, தாய் ஒரு நடிகை. சீனத் தலைநகரில் பிறமொழிகள் கற்பிக்கும் கல்லூரியொன்றில் சேர்ந்து பிரெஞ்சு மொழி கற்றுள்ளார். அரங்கியல் பிரதிகள் தான் இவரது பிரதான எழுத்து வெளிப்பாடு. எண்பதுகளில் இவரது முதலாவது நாடக நூலான "பேருந்துத் தரிப்பிடம்" வெளியானது. 1989ல் "ஆத்மா என்கிற மலை" என அரபியில் இருந்து தமிழ்ப்படுத்த முடிகிற நூலை வெளியிட்டுள்ளார். இந்நூலுக்கான உழைப்பு ஏழு வருடங்களாம். 1982ல் இதை எழுதத் தொடங்கினாராம்! பின்னர் இந்த நூல் பிரெஞ்சில் மொழிமாற்றம் செய்யப்படுகிறது. இந்த நாவல் வெளிவந்த ஆண்டே இவர் பிரான்சில் தஞ்சம் புகுந்துள்ளார். அங்கு மேடையேற்றிய "என் பக்க உரையாடல்" என்ற நாடகம் பலத்த வரவேற்பைப் பெற்றதாகக் குறிப்பிடப்படுகிறது.

"'காலத்தை, இடத்தைத் தாண்டி மனித உணர்வுகளின் ஆழங்களை ஊடுருவி அசைத்து விடுகிற, சீனநாடக, கதையிலக்கியத்தில் புதிய பரிமாணங்களைத் தோற்றுவிக்கிறதாக, செழுமைமிகு மொழியைக் கொண்டதாக இவரது படைப்புகள் உள்ளன" என நோபல் பரிசுத் தெரிவுக் குழு இவரின் எழுத்துக்கள் பற்றிச் சொல்லியிருக்கிறது.

"வழமை போல இம்முறையும் நோபல் பரிசுக்குழு ஆச்சரியத்திலாழ்த்தியிருக்கிறது" என ஒரு கட்டுரை தொடங்குகிறது. உண்மை தான் நிறையப் பேருக்கு ஆச்சரியந் தான். அத்துடன் நோபல்பரிசு கடந்த பல வருடங்களாக ஒரு மொழியை அல்லது ஒரு தேசத்தை, தேசியத்தை பிரதானப்படுத்த வேண்டுமென்பதற்காக வழங்கப்பட்டு வருவதாகவும் சில இலக்கிய விமர்சகர்கள் குறிப்பிடுகிறார்கள். கடந்த வருடம் ஜேர்மன் இலக்கியவாதி குந்தர் கிராசுக்குக் கொடுத்தார்கள். 1991லிருந்து இன்று வரையான நோபல் பரிசு பெற்றவர்களின் பட்டியலைப் பார்த்தால் நான்கு பேர் தான் (நடின் கோடிமர்-1991, டொனி மோரிசன்-1993, விஸ்லாவோ சிம்பார்ஸ்கோ-1996, குந்தர் கிராஸ்-1999) சர்வதேச அளவில் (சர்வதேச அளவென்றால் நமது காதிலும் கண்ணிலும் பட்டதை வைத்துத் தான் சொல்கிறேன்) பரவலாக அறியப்பட்டவர்களாகவுள்ளார்கள்.

நோபல் பரிசு தொடங்கப்பட்டதற்கு இம்முறை தான் முதன் முறையாக சீனாவுக்குக் கிடைக்கிறது என்பது ஆச்சரியமான உண்மையாம். இவரின் பெயர் அறிவிக்கப்பட்டதும் "இம்முறையாவது கொடுக்க முன்வந்தார்களே" என்ற தனது நீண்ட கால ஏமாற்றத்தின் ஆதங்கத்தை வெளியிட்டாராம் ஒருவர். என்றாலும் பலர் இவரை எதிர்பார்க்கவில்லையாம். ஓர் அரபு இலக்கியவாதி, இவரை விட சீனாவை விட்டும் வெளியேறாத, கடந்த ஆண்டே நூல்களை சீனாவிலேயே வெளியிட அனுமதி பெற்ற பாத்ஷீன் என்பவருக்கு அல்லது கவிஞர் பீதோவ் என்பவருக்குக் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்று நீண்ட கால அவதானத்தை வைத்து தனது அபிப்பிராயத்தைச் சொல்லியுள்ளார். என்றாலும் எல்லோரையும் ஆச்சரியத்திலாழ்த்த வேண்டும் என்ற தனது பண்பை இவரின் தெரிவின் மூலம் நோபல் பரிசுக் குழு காட்டியுள்ளது.

சீனாவில் இதன் பிரதிபலிப்பு எப்படியிருக்கிறதென்று பார்த்தால் யாருமே இவர் பற்றி பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லையாம். இவர் சீனாவின் உயிர்த்துடிப்பையே கொன்று விடுகிறார் என அங்கு பரவலான விமர்சனங்களுக்கு உட்படுகிறாராம். இவரது இறுதியான இரண்டு நூல்களும் (ஆத்மா என்கிற மலை, ஒரு தனித்த மனிதனின் புத்தகம்) இந்தக் 'கொலை'யைச் செய்வதாகச் சொல்கிறார்கள். என்றாலும் இன்னொரு விடயம் என்னவென்றால் உலகில் அதிகம் பேசப்படும் மொழிகளில் முதலிடத்திலிருக்கும் சீனமொழியில் இவர் அதிகம் வாசிக்கப்படாதவராம்! இவ்வாறு வாசிக்கப்படாமலிருப்பதற்கும், நோபல் பரிசுத் தெரிவுக்குமிடையில் 'அரசியல்' இருக்கலாம் என்பதே பலரது அபிப்பிராயம்.

இன்னொரு அரபுப் பத்தியாளர், நல்ல பல இலக்கியங்களைக் கொண்டிருக்கும் சீன இந்தியத் தரப்பிலிருந்து நாம் எதுவுமே தேடிப் பெறுவதில்லையென்றும், எப்போதும் நாம் மேற்கையே பிரதி பண்ணி அவர்களுக்குப் பின்னாலேயே சென்று கொண்டிருப்பதாகவும் சாடுகிறார். இது தமிழுக்கும் பெரிதும் பொருந்துமென நினைக்கிறேன். புவியியல் ரீதியாகவும், எம் உணர்வுகளுடன் ஒன்றிச் செல்கிற ஒன்றாய் இருக்கிற காரணத்துக்காகவும் நாம் சக கீழைத்தேய எழுத்துக்களுடன் பிணைப்பேற்படுத்திக் கொள்ள வேண்டும் என்பது இப்பத்தியாளரின் ஆதங்கம், ஆவல். அதுமட்டுமில்லாமல் நோபல் பரிசின் பின் பல அரசியல், தனிநபர் செல்வாக்குகள், தில்லுமுல்லுகள் இருப்பதாகவும் குறிப்பிடும் இப்பத்தியாளர், முன்னாள் ஸ்வீடிஷ் அகெடமிச் செலாளர் Stewart Alan என்பவரின் நினைவுக் குறிப்புகள் அடங்கிய நூலைக் குறிப்பிட்டு அது பல உள்ளார்ந்த விடயங்களைச் சொல்வதாகவும் தொட்டுக் காட்டியுள்ளார்.

கொஞ்ச நாட்களின் பிறகாவது நமக்கு இவரின் எழுத்துக்கள் தமிழில் கிடைக்கலாம் என்ற நம்பிக்கை வைத்து முடிக்கிறேன். (இதற்கு மேல் என்னிடமும் சரக்கில்லை) அண்மையில் கூட சீன இலக்கியத்திலிருந்து பல கவிதைகள் தமிழுக்குக் கிடைத்தன தானே!?

[illegible]

## பதினொராவது மீட்பு

என்னை மீட்டெடுப்பதாகவானம் திறந்து
இயேசு, புத்தர், காந்தி வந்தனர்.
இயேசு தலையில் சிலுவை சுமந்து
ஒருகுழுவும்
புத்தர் தலையில் மொட்டை போட்டு
ஒருகுழுவும்
காந்திய தலைமையில் கச்சைகட்டி ஒருகுழுவுமாய்
தனித்தனியே என் வாசல் வரைக்கும்
வந்து சென்றனர்.

எனக்காக முற்றம் துறந்ததாகவும்
எனக்காக பாடுகள் ஏற்பதாகவும் மரணிப்பதாகவும்
குருதிகொப்பளிக்க, கண்ணீர் கசிய
என் மயிர்க்காவல்குத்தி நிற்கும்படியாய்
போதனை செய்தனர்.

"நானே நல்லாயன்
என் பின்னே வாருங்கள்' என்று
அரிதாரம்பூசி பல்லைக்காட்டி
கைகளை உயர்த்தி
வீதிகள் எங்கும் தொங்கி நின்றனர்.

இன்னும்
"உண்மை மீட்பர் நாமே" என்று
தமக்குள்ளாகவே வெட்டியும்குத்தியும் கொண்டனர்.

என் இறுதிக் காலத்தின் ஆன்மாவின்
நிசப்தம் கலைத்து சாத்தான்கள் வேதம் ஓத, ஓத
செவிப்பறை வெடித்துச் சிதைந்து
சீழ் கொட்டுகிறது.
என்னை மீட்டெடுப்பதாக
வானம் திறந்து சாத்தான்கள் வந்தனர்
தங்களையே மீட்டு திரும்பவும் வானகம் சென்றனர்.

எஸ்.கஸ்ரோ, கல்முனை -02

◎

## அவர்கள்

கருமேகம் திரளாகி நீர் சிந்தும் வேளை
குடிசை ஒழுகி நீர் வழிந்து வாசல்
படியிலிருக்கும் சிறுவனின் முதுகுதொடும்...
காலைதின்ற நேற்றைய பாணை
ஒட்டகம்போல் சேமித்து மீண்டும் அசைபோட்டபடி

வீதிகூட்டச் சென்ற தாயின் வரவுதேடி
வாசலில் காத்திருப்பான் ஒரு எலும்புக்கூடு நாயுடன்....
கிழிசல் காற்சட்டை அரைமானமும் மறைக்காது
குளிரில் உறைவான் சிறுவன்...

மணிமணியாய்க் கரையும் நாலிலிருந்து ஆறுவரை
தாய்கூடச் சென்ற சகோதரரோ அங்கு
சாலையோரக் கிளுவையின் கீழ்
குளிரோடும், நீர்வடியும் தலைமுடியோடும்...

கூட்டும் வீடுகளில் தந்த பழஞ்சோறை
கண்மூடி உண்ணும் அவர்கள்....

காத்திருக்கும் மகனின் நினைவு ஒருபுறம் - குளிரில்
சோர்ந்திருக்கும் மகன்களின் முகங்கள் ஒரு புறம்
துன்புறுத்த ஈரச்சேலையால் தலைமூடி
அமர்ந்திருக்கும் குச்சிபோன்ற அன்னை....

நாலுபேராய் வீதியில் சென்ற ஒரு
மாணவனின் கால்சற்று இடித்தும்
மரக்கட்டைபோல் மௌனிக்கும் அவர்கள்....

இவர்களைப்பற்றி
இவர்களின் 'மோர்ட்டன்' இல்லாத இரவுகளைப் பற்றி-
நீங்கள்
பள்ளிப் படிப்பின் போதோ,
பட்டமளிப்பு விழாவின் போதோ,
கடைகடையாய் உடைவாங்க ஏறும் போதோ
வருங்காலத் துணைக்காய்க் காத்திருக்கும் போதோ
என்றேனும் ஓர் நாள்
சிந்தித்ததுண்டா?

அம்பிகா எஸ்.யாழ்ப்பாணம்

◎

# ஒரு போராளியின் கதை - 4

### இயக்கத்தினருக்கு மக்கள் மத்தியில் புனித ஸ்தானம்

இந்தக் காலகட்டத்தில் மக்கள் மத்தியில் இயக்கத்திற்கு வேலை செய்பவர்களைப் புனிதமாகப் பார்க்கும் நிலை இருந்தது. இதன் விளைவாக எப்போது எனது தொடர்புகளை இயக்கத்துடன் வைத்துக் கொண்டேனோ அன்றிலிருந்து பாடசாலை பஸ்களின் பின்னால் செல்லும் பழக்கம், நண்பர்களுடன் கும்மாளம் அடிப்பது போன்றவற்றை விட்டு விட்டேன். எனது வாழ்க்கையில் புதுவித அர்த்தம் இருப்பதாகவே உணர்ந்தேன்.

உதாரணமாக, நான் எந்தப் பெண்ணுடன் பழக வேண்டும் என்றிருந்தேனோ அதே பெண் என்னுடன் பழகிய போது, என்னுடைய பழக்கம் அந்தப் பெண்ணிற்கு ஆபத்தாக வந்து விடும் என்று எண்ணி விலகியே விட்டேன். எனது வயதுக் கோளாறு பலமுறை வந்து போய்க் கொண்டிருந்தாலும் ஸ்தாபனத்தின் பெயர் கெடாமல் எல்லாவற்றையும் தவிர்த்துக் கொண்டேன்.

மக்கள் தமது பிரச்சினைகள் எல்லாம் எம்மால் தீர்க்கப்பட வேண்டும் என்றே விரும்பினர். காணிப் பிரச்சினை, வேலிப் பிரச்சினை, குடும்பப் பிரச்சினை என்று பலவற்றையும் தீர்க்குமாறு கேட்டனர். நான் அதற்கு மறுத்து அந்தப் பிரச்சினைகளை அவர்களையே தீர்க்குமாறு கேட்ட போது மற்ற இயக்கங்கள் எல்லாம் தீர்க்கின்றன. ஏன் உங்களால் தீர்க்க முடியாதா எனக் கேட்டார்கள்.

விசேடமாக, விடுதலைப் புலிகளுக்கு ஆயுதமுனையில் பிரச்சினைகளைத் தீர்ப்பது கைவந்த கலை. எனது அயல் கிராமத்திற்கு ரெலோவின் கலண்டர்களை விற்கச் சென்றோம். அந்தக் கிராமம் முழுவதும் புளொட் ஆதரவாளர்களாகவே காணப்பட்டனர். எனினும் பலர் எமது கலண்டர்களை வாங்கி ஆதரவு செலுத்தினார்கள். இதன் மூலம் பல மக்களை ரெலோவினது வேலைப்பாடுகளுள் இணைக்கக் கூடியதாக இருந்தது. ஒருவர் என்னிடம் கலண்டர் ஒன்றை வாங்கினார். தான் பல விடயங்கள் கதைக்க வேண்டும் என்றும் என்னை எமது தோழர்களுடன் வருமாறும் கூறினார்.

நாம் அவர் வீட்டிற்குச் சென்று அவரது பிரச்சினைகளைச் சொல்லச் சொன்ன போது நாம் எதிர் பார்த்தது என்னவோ அவர் சொன்னது என்னவோவாக இருந்தது. வேலிப் பிரச்சினையைத் தனது அயலவருடன் (அவரின் தம்பி) தீர்த்து வைக்குமாறும் இதைச் செய்தால் பணம் தருவதாகவும் கூறினார். குறைந்தது ஒருநாள் துவக்குடன் வந்து தனக்காகக் கதைக்கும்படி கூறினார்.

நானோ துவக்கைப் பார்த்தது கிடையாது. இதற்குள் இவரது பிரச்சினைக்கு துவக்கைத் தூக்கிக் கொண்டு வரவேண்டுமாம்! இப்பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்றும் எமக்கு அனுபவம் காணாது என்றும் நீங்கள் கிராம மட்டத்துப் பெரியவர்களுடன் பேசித் தீர்த்துக் கொள்ளுங்கள் என்றும் கூறினேன்.

ஒரு வாரத்தின் பின் அந்த நபர் எனது வீடு தேடி வந்து விட்டார். அப்போது தான் எனக்கு நிலைமை விளங்கியது. இனிமேலும் நான் வீட்டில் இருந்து கொண்டு வேலை செய்ய முடியாது என்று. இந்த நிலையில் எனது வீட்டிலும் எனது அரசியல் வேலை தொடர்பாகப் பிரச்சினைகள் எழுந்தன. இதன் விளைவாக எனது பிரதேசத்தை விட்டு விலகி கிழக்கு மாகாணத்திற்கு வேலை செய்வதற்குரிய ஆயத்தங்கள் செய்தேன்.


அதே நேரத்தில் வீட்டில் இருந்தால் பிரச்சினை. எனவே எனது அண்ணனிடம் செல்வதாகக் கூறிக் கொண்டு கிழக்கு மாகாணத்திற்குச் சென்றேன். எனது அண்ணன் கிழக்கு மாகாணத்தில் வேலை செய்தமையால் இது பிரச்சினையாகவே அமையவில்லை.

### காத்தான்குடி வங்கிக் கொள்ளை

எனது கிழக்கு மாகாணப் பயணம் எதிர்பார்த்தது போல் அமையவில்லை. தம்பாப்பிள்ளை மகேஸ்வரன் குழுவினரின் காத்தான்குடி வங்கிக் கொள்ளையினால் கிழக்கு மாகாணம் சோதனை இடப்பட்டுக் கொண்டிருந்த வேளை அது விசேடமாக, யாழ்ப்பாணத்து மக்களின் வீடுகள் சோதனைக்காளாயின.

வட மாகாணத்திலிருந்து கிழக்கு மாகாணத்திற்கு வந்த பல இளைஞர்களும் கைது செய்யப்பட்டார்கள். இந்தக் கால கட்டத்தில் எனது பயணம் எனது அண்ணனைப் பயமடையச் செய்தது. அவருக்கே பாதுகாப்பு பிரச்சினையாக இருந்தது. அதனால் அவர் என்னை வேறெங்காவது போகுமாறு சொன்னார்.

ஒருவ்ாரத்தின் பின்னர் தப்பினேன் பிழைத்தேன் என்று ஊர் வந்து சேர்ந்தேன். வீட்டில் நான் நிற்பது பலருக்கும் பிரச்சினையாக அமைந்ததால் வீட்டில் படுப்பதைத் தவிர்த்துக்




கொண்டேன்.

இராணுவத்தின் சோதனைக் கால கட்டத்தில் உயிரைக் கையில் பிடித்த வண்ணம் எனது அரசியல் வேலைகளைச் செய்தேன். எமது ஊரில் இராணுவ சோதனை நடைபெற்றுக் கொண்டிருந்த நேரம் பல இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். எவரைச் சித்திரவதை செய்தாலும் எவருமே என்னையோ மற்றைய விடுதலை இயக்க உறுப்பினர்களையோ காட்டிக் கொடுக்கவில்லை. பலருக்கும் ஊரில் இயக்க வேலை செய்பவர்களைத் தெரிந்திருந்தாலும் எவருமே எமது பெயரைச் சொல்லவில்லை.

## ஒரு நாளாவது துவக்குடன் வந்து கதைக்கும்படி கேட்டார்!

உதாரணமாக, எமது ஊர்ச் சந்தியில் நின்ற இளைஞர்கள், கடைக்காரர்கள் எல்லோரையும் இராணுவம் பிடித்து, அடித்துச் சித்திரவதை செய்து நாம் ஒட்டியிருந்த போஸ்ரர்களைக் கிழிக்கப் பண்ணியது. அந்த நேரத்தில் நான் அவர்களின் சோதனைகளுக்கூடாக சைக்கிளை உருட்டிக் கொண்டு சென்றேன். எவருமே என்னைக் காட்டிக் கொடுக்கவில்லை.

**எமது ஊர்ச் சந்தியில் நின்ற இளைஞர்கள், கடைக்காரர்கள் எல்லோரையும் இராணுவம் பிடித்து, அடித்துச் சித்திரவதை செய்து நாம் ஒட்டியிருந்த போஸ்ரர்களைக் கிழிக்கப் பண்ணியது. அந்த நேரத்தில் நான் அவர்களின் சோதனைகளுக்கூடாக சைக்கிளை உருட்டிக் கொண்டு சென்றேன். எவருமே என்னைக் காட்டிக் கொடுக்கவில்லை.**

மக்கள் தான் உண்மையில் தியாகம் செய்கின்றனர். ஒருமாத இடைவெளியின் பின்னர் விடுதலைப் புலிகளின் பத்திரிகைகள், கலண்டர்களை வைத்திருந்த நண்பர்கள் கைது செய்யப்பட்டவுடன் அவர்களால் காட்டிக் கொடுக்கப்பட்டவர்கள் நானும் என்னுடன் வேலை செய்த தோழர்களும் ஈ.பி.ஆர்.எல்.எவ் ஐச் சேர்ந்தவர்களும் தான். அதனால் தலைமறைவாக வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. தலைமறைவாக விரும்பாத தோழர்கள் கைது செய்யப்பட்டனர்.

இந்நிலையில் ரெலோவினர் அரசியல் வகுப்புக்களை நடத்தத் திட்டமிட்டிருந்தனர். எனவே, ரெலோவின் அரசியல் பிரிவில் சேருவதற்காக எனது விருப்பத்தினை எனது பொறுப்பாளரிடம் தெரிவித்த போது இந்தியா போவதற்கு ஏற்பாடுகள் செய்வதாகக் கூறினார்.

### இந்தியப் பயணமும் தொல்லைகளும்

இந்த நிலையில் அவரிடம் இந்தியா சென்று எப்போது மற்ற நாட்டிற்குச் செல்வது என்று கேட்டேன். இந்தியாவை விட எமக்கு வேறு நாடு இல்லை என்று அவர் சொன்னார்: எனக்கு மிகவும் அதிர்ச்சியாக இருந்தது. ஏனெனில் பலர் எம்மைக் கேட்ட கேள்வி: நீங்கள் இந்தியாவை நம்புகிறீர்கள். இந்தியா ஒரு போதும் எமது பிரச்சினை தீர்வதற்கு உதவப் போவதில்லை. இன்னும் பிரச்சினை நியாயமாகத் தீர்வதற்கு எதிராகவே இருக்கும். அதற்கு என்ன சொல்லப் போகிறீர்கள் என்பது தான்.

அதற்கு நமது பொறுப்பாளர் சொன்ன பதில்: நாம் சோசலிசத்தை அணுகிக் கொண்டிருக்கின்ற ஒரு நாட்டில் தான் பயிற்சி எடுக்கின்றோம். இந்தியாவைத் தளமாகத் தான் பயன்படுத்துகின்றோம்.

நான் எனக்குள் நினைத்தேன்: இந்தியா சோசலிசத்தை அணுகவில்லை. ஆகவே சோசலிசத்தை அணுகுகின்ற நாடு என்றால் ரஷ்யாவாகத் தான் இருக்கும் என்று. எனக்கு மிகவும் அதிர்ச்சியாக இருந்தது: நா!ு சொன்னது என்னவோ செய்கிறது என்னவோ என்று. எனினும் எனது பாதுகாப்பற்ற நிலைமை என்னை இந்தியா போக வைத்தது.

இந்த நேரத்தில் நான் வெளிநாட்டிற்குப் போவதற்கான பயணமும் தயாரான நிலையிலிருந்தது. ஆயினும், என்னை முழுமையாக இயக்கத்திற்கு அர்ப்பணித்து இந்தியா போக முடிவு செய்தேன்.

இந்தியாவிற்கான எனது பயணம் எதிர்பார்த்தது போலச் சுலபமாக அமையவில்லை. கடற்படையினரின் கெடுபிடிகள், இராணுவத்தின் சோதனைகள் பலவற்றிலும் பார்க்க மிகவும் கொடுமையானது இயக்கத்தின் பயண நடவடிக்கை. எந்தவிதமான தலைமையுமற்ற சுமார் நாற்பது பேர்கள் பயணத்தைத் தொடங்கினோம்.

குறிப்பிட்ட தொகை பணத்திற்காக எம்மைக் கொண்டு போய்ச் சேர்க்கும் இந்நபர்களுக்கும் இயக்கத்திற்கும் எந்த விதமான தொடர்பும் இல்லை. சிறிய வள்ளத்தில் புறப்பட்ட நாம் இதில் தான் இந்தியா போகப் போகிறோம் என்ற நினைப்பில் பிரச்சினைப் பட்டோம்.

வள்ளத்தின் ஓட்டிகள் சொன்னார்கள்: இன்றிலிருந்து உங்களுக்கு பயிற்சி. இதற்குப் பயப்பட்டீர்கள் என்றால் என்னென்று தமிழீழம் காண்பது? எல்லோரும் அமைதியாகி விட்டோம். நடுக்கடலில் நின்ற றோளருக்குப் (Trawler) போய் றோளரில் ஏறி மிகுதிப் பயணத்தைத் தொடர்ந்தோம். பலருக்கு றோளரின் வேகம் இவ்வளவு குறைவானது என்று தெரியாது. பல மணி நேரமாகப் பிரயாணம் செய்தும் மண்டைதீவு றேடியோ ஒலிபரப்பு நிலையத்தின் வெளிச்சம் தெரிந்து கொண்டே இருந்தது. றோளரின் வேகத்தைப் பற்றிக் கேட்ட போது வேகமாகப் போனால் சத்தம் கேட்கும். சத்தம் கேட்டால் நேவி வரும். ஆகவே தான் நாம் குறைவான வேகத்தில் செல்லுகின்றோம் என்றனர்.

இது பற்றி ஏன் முதலில் சொல்லவில்லை என்று கேட்ட போது உங்களுடைய இயக்கத்தைக் கேட்காதது உங்கள் பிழை என்றனர். நீங்கள் இயக்கம் இல்லையோ என்று கேட்டபோது தாம் பணத்திற்காக ஓடுவதாகக் கூறினர். எமக்குள் பலர் கோபப்பட்டாலும் எதுவுமே செய்யமுடியாத நிலையில் தூங்கி விட்டனர். எனக்கும் மண்டைதீவு வெளிச்சத்தைப் பல மணித்தியாலங்களாக பார்த்துக் கொண்டிருந்ததில் தூக்கம் வந்து விட்டது.

எது நடந்தாலும் பரவாயில்லை. ஊரில் நிற்க முடியாத சூழ்நிலை. எல்லாவற்றையும் கூட்டிக் கழித்துப் பார்த்து விட்டு நானும் தூங்கி விட்டேன். சுமார் நாலு மணியளவில் எம்மை எழுப்பி இறங்கச் சொன்னார்கள். நாம் எழும்பிப் பார்த்த போது சுற்றிவரக் கடல். இதற்கு மேலாக றோளர் போகாது. நீங்கள் நீந்தித் தான் கரைக்குக் போக வேண்டும் என்று அவர்கள் சொன்னார்கள்.

பலருக்கு நீந்தத் தெரியாததால் எவருமே இறங்க மறுத்தனர். எதுகரை. எந்த இடம். எங்கே காம்ப் என்று பல கேள்விகள். எதற்கும் பதில் கிடைக்கவில்லை. எவரும் இறங்க மறுத்தபடியால் ஓட்டி நீரில் குதித்துக் காட்டி கடல் ஆழம் இல்லை. கழுத்து வரை தான் தண்ணீர் என்று சொல்லிக் கரையைக் காட்டினார்.

**தொடரும்**

தேவமகன்

# மலையக தமிழரை விழிப்புறச் செய்யும் பேரினவாதம்!

~ இடையன்

பாராளுமன்ற ஆசனங்களைக் கைப்பற்றுவதாலும், பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதாலும் மலையக மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு கிட்டப் போவதில்லை என இக் கட்டுரையாளர் இதற்கு முந்திய சரிநிகர் பத்தியில் குறிப்பிட்டது இன்று நிதர்சனமாகி உள்ளது. பாராளுமன்ற உறுப்பினர்களால் மலையக மக்களின் அடிப்படைப் பாதுகாப்பிற்குக் கூட உத்தரவாதமளிக்க முடியாத நிலையில் மலையக இளைஞர்கள் அரசாங்க பாதுகாப்பு பிரிவினரால் நடு றோட்டில் சுட்டுக் கொல்லப்பட்டு, தமிழரின் உடமைகள், சூறையாடப்பட்ட சம்பவங்கள் கடந்த வாரங்களில் அரங்கேறின. ஜனநாயக ரீதியில் எதிர்ப்புக் காட்டுவோரும் கொடூரமாக அடக்கப்படுவர் என்பதற்கான ஒரு முன் எச்சரிக்கையே குறித்த சம்பவங்களாகும்.

பிந்துனுவெவ - நேரடித் தமிழ் மொழி பெயர்ப்பை பெறுவதாயின் உடைந்த/ வெடித்த குளம். மலையகத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் வெடித்த குளத்திலிருந்து பெருக்கெடுத்த வெள்ளம் போன்றே அமைந்திருந்தன. மலையக மக்களின் உணர்வுகள், அனைத்து தடைகளையும் மீறி பீறிட்டெழுந்துள்ளன. பொறுப்பற்ற, ஏமாற்று தலைமைகளுக்கு தகுந்த பாடத்தைப் புகட்டியுள்ளனர். தாங்கள் தொடர்ந்து ஏமாறத் தயாராக இல்லை. தங்கள் உரிமைகளுக்காக தாங்கள் போராடத் தயார் என உலகிற்கு எடுத்துரைத்துள்ளனர்.

### முதல் அடி!

மலையகத்தில் தீபாவளி வெகு விமரிசையாகக் கொண்டாடப்படும் பண்டிகைகளில் ஒன்று. இம்முறையும் அவ்வாறே கொண்டாட எண்ணியிருந்த வேளையில் முதல் அடி கடந்த செப்டெம்பர் மாதத்தில் வீழ்ந்தது. தேர்தல் வெற்றிக்காக இலங்கை தொழிலாளர் காங்கிரசினால் (இ.தொ.கா) மலையக மக்கள் ஏமாற்றப்பட்டனர். ரூபா 400/- சம்பள உயர்விற்காக (இது ஒரு தேர்தல் கால இ.தொ.காவின் மோசடி) தொழிலாளர் வேலை நிறுத்தப் போராட்டத்தில் இறக்கப்பட்டனர். தொழிலாளர்களின் வாக்குகளைக் கொள்ளையடிப்பதற்காக அனுபவமற்ற தலைமைகளால் சுய நலனுக்காக வழிநடாத்தப்பட்ட இவ் வேலை நிறுத்தப் போராட்டத்தின் இறுதியில் கிடைத்தது தொழிலாளர்கள் செப்டெம்பர் மாதத்தில்




மட்டும் 14 நாள் ஊதியத்தை இழந்ததே!

தேர்தல் முடிவுகளுடன் சம்பள அதிகரிப்பு பற்றிய விடயமும் மறக்கப்பட்டுவிட்டது. இதனால் செப்டெம்பர். மாதச் சம்பளத்தைக் கொண்டு ஒக்டோபரில் தீபாவளி கொண்டாட எண்ணிய மக்களுக்கு முதல் அடி அன்றே இடப்பட்டது. (ஒக்டோபர் மாதச் சம்பளம் நவம்பர் ஆரம்பத்திலேயே வழங்கப்படுவது வழமை.)

இருப்பினும் கிடைத்ததைக் கொண்டு ஒக்டோபர் 26ம் திகதி தீபாவளி கொண்டாட எண்ணிய மக்களின் இதயங்களின் ஒக். 25ம் திகதி மேலுமொரு இடி வீழ்ந்தது. அது தான் பிந்துனுவெவ சம்பவம். மலையக மண்ணிலேயே தமிழ் இளைஞர்கள் படுமோசமாக கொலை செய்யப்பட்டனர்.

### ஜே.வி.பிக்காக அமைக்கப்பட்ட முகாம்

பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாம் பண்டாரவளைக்கு மிக அருகில் பதுளை வீதியில் அமைந்துள்ளது. இது சர்வதேச ரீதியில் கிடைக்கப் பெறும் நிதி ஆதாரங்களைக் கொண்டு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் நிர்வகிக்கப்படும் ஒரு புனர்வாழ்வு முகாமாகும். இது ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் போது மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) இளைஞர்களின் புனர்வாழ்விற்காக உருவாக்கப்பட்ட முகாம் ஆகும். புனர்வாழ்வு என்ற காரணத்தின் பேரில் இம் முகாமிற்காக வெளிநாடுகளிலிருந்து அரசாங்கத்திற்கு பெருமளவு நிதி கிடைக்கப் பெற்றது. இம்முகாமில் எத்தனை தமிழ் இளைஞர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்



என்பது அரசாங்கத்துக்கு மட்டுமே வெளிச்சம்!

இந்நிலையிலேயே கடந்த 25ம் திகதி அதிகாலையில் இம்முகாமில் அந்தக் கோரச் சம்பவம் இடம் பெற்றது. அரசாங்க அறிவித்தல்களின்படி விடுதலைப் புலிகள் அங்கத்தவர் ஒருவர் இம் முகாமிற்கு வந்த பிறகே அயல் கிராமத்தவர்களுடன் முகாம் இளைஞர்களின் உறவு நிலை பாதிக்கப்பட்டதாகவும், இந்நிலையைப் பயன்படுத்தி. அரசாங்கத்திற்கு அபகீர்த்தியை ஏற்படுத்த எண்ணிய கும்பலினால் அவ் இளைஞர்கள் கொல்லப்பட்டதாகவும் கூறுகிறது.

### நடந்த உண்மை

ஆனாலும் உண்மையில் நடந்தது இதுவே. அந்த முகாமிலிருந்த இளைஞர்கள் ஊர் மக்களுடன் சுமுகமான உறவையே பேணி வந்துள்ளனர். வெளியில் சென்று தொழில் புரிந்துள்ளனர். இவ்வாறு வெளியில் இரவு வேலைக்குச் சென்ற இரு இளைஞர்கள் மட்டுமே தாக்குதல் சம்பவத்திலிருந்து தப்பியவர்களாவர். குறித்த சம்பவமானது ஒரு திட்டமிட்ட செயல் என்பது வெளிப்படை! ஏனெனில், குறித்த சில நிமிடங்களில் கொலை வெறியூட்டுவது இயலாத காரியமாகும். இது நீண்ட நாட்களாக திட்டமிடப்பட்டு வெறியூட்டப்பட்டு வந்துள்ளது. குறித்த சம்பவ தினத்திற்கு முன் புனர்வாழ்வு முகாம் இளைஞர்களுக்கு வரும் கடிதங்களை முகாம் அதிகாரிகள் கொடுக்காது கிழித்தெறிந்து விடுவதாகவும் அவ்வாறு கிழித்தெறியப்பட்ட கடித உறை ஒன்று முகவரியாளரிடம் கிடைக்கவே அதனுள் இருந்த கடிதம் எங்கே? என்று அதிகாரிகளிடம் கேட்கவே பிரச்சினை ஆரம்பித்துள்ளது. பின் புனர்வாழ்வு முகாம் இளைஞர்கள் தங்கள் விடுதலை கோரி ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர். இதனை பயன்படுத்திக் கொண்ட காவலர்கள் திட்டமிட்டபடி ஊர் ஜனங்களைக் கொண்டு தாக்கியும், வெட்டியும், எரியூட்டியும் கொலை வெறியாட்டம் புரிந்துள்ளனர்.

இத்தாக்குதலில் பலத்த காயங்களுக்கு உள்ளானவர்கள் எழுந்து நடக்கக் கூட முடியாத நிலையில் தங்கள் கைகள் வைத்தியசாலை கட்டிலுடன் சங்கிலியால் பிணைக்கப்பட்ட நிலையில் தியத்தலாவை இராணுவ வைத்தியசாலையில் இருக்கக் காணப்பட்டுள்ளனர். உண்மையில் புனர்வாழ்வு முகாமில் இருந்தவர்களின் எண்ணிக்கை அரசாங்கத்தைத் தவிர வேறு யாருக்கும் தெரியாத நிலையில் 27 பேர் கொல்லப்பட்டுள்ளனர். (இதில் 11 பேர் இன்னும் அடையாளம் காணப்படவில்லை) 14 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதன்போது அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா, ஆறுமுகம் தொண்டமான் ஆகியோர் உண்மைச் சம்பவத்தை மறைத்து அரசாங்கத்திற்கு சார்பான கருத்துக்களை வெளியிட்ட வேளையில், மலையக மக்கள் முன்னணி தலைவர் பெரியசாமி சந்திரசேகரன் நேரில் சென்று காயப்பட்டவர்களை பார்வையிட்டு உரையாடி பல உண்மை விபரங்களை வெளிக்கொணர்ந்தார். இந்நிலையில் அரசாங்கமும், இ.தொ.கா. தலைமையும், சந்தர்ப்பம் ஒன்றிற்காய் காத்திருந்தன.

### ஹர்த்தாலுக்கு தயாரிப்பு

இந்நிலையிலேயே மலையக வரலாற்றில் முதல் தடவையாக மக்கள் அனைவரும் தங்கள் தலைமைகளையும் மீறி ஒன்றுபட்டு எதிர்ப்புக் காட்ட முற்பட்டனர். பலர் சிறப்பாகக் கொண்டாட நினைத்த தீபாவளியை பலர் கொண்டாடவில்லை. கொண்டாடியவர்களும் எளிமையாகக் கொண்டாடினர். தமிழர்கள் அதுவும் நம் சொந்த மலையக மண்ணிலேயே ஈவிரக்கமின்றி கொலை செய்யப்பட்டுள்ளனர் என்ற வேதனை, ஆதங்கம், மலையகத் தமிழரை கட்சி வேறுபாடுகளைக் கடந்து ஒன்றுபட வைத்தது.

கடந்த ஒக்.29ம் திகதி பூரண ஹர்த்தலுக்கு மக்கள் தயாராகினர். நுவரெலியா மாவட்டத்தில் நுவரெலியா நகரில் மட்டுமே தமிழர்களின் கடைகள் திறந்திருந்தன. பதுளை மாவட்டத்திலும், மக்கள் தங்கள் எதிர்ப்பைக் காட்டினர். ஊர்வலங்கள் சகல இடங்களிலும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. தோட்ட மக்களின் வீடுகள் தோறும் கறுப்புக் கொடிகள் பறந்தன. வீதிகள் தோறும் கறுப்பு வெள்ளை தோரணங்களும் பதாகைகளும் தொங்கின.

*"கோழைகளின் இரத்த வெறிக்கு இரையான தியாகிகளுக்கு எங்கள் கண்ணீர் அஞ்சலி!""*

*"நேற்று வேவல்வத்தை!*
*இன்று பண்டாரவளை!!*
*நாளை .....!?"*

*"நாம் இழந்தது உங்கள் உயிர்களையே இலட்சியங்களை அல்ல""*

*"பேரினவாதிகளையும் இனத் துரோகிகளையும் எதிர்ப்போம். இன ஐக்கியத்தைக் கட்டியெழுப்புவோம்"* போன்றன பதாகைகளில் (காணப்பட்ட வாசகங்கள்) சில. அவை மக்களின் மன உணர்வை, ஆதங்கத்தை தெளிவாக வெளிப்படுத்துகின்றன. அன்றைய தினம் மலையகமெங்கும் சோகமே காட்சி தந்தது.

மலையக தாய் பெற்றெடுத்த புதல்வன் ஒருவரும் பண்டாரவளை சம்பவத்தில் கொல்லப்பட்டமை மக்களை மேலும் அதிர்ச்சியில் ஆழ்த்தியது. இதுவரை மலையகத்திற்கு வெளியே இத்தகைய சம்பவங்கள் பற்றிக் கேள்விப்பட்டவர்களுக்கு மலையகத்திலேயே தங்களுடன் ஒன்றாக இருந்த ஒருவரும் கொல்லப்பட்டது அவர்களை கிளர்ந்தெழச் செய்தது.

ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்ட ஒக்.29ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மலையக இளைஞரின் இறுதிச்சடங்கு கொட்டகலையில் இடம்பெற்றது. இதில் கொல்லப்பட்ட இளைஞன் சந்தனம் செல்வராஜாவின் உடலை ஊர்வலமாக எடுத்துச் செல்ல எத்தனித்த போதும், இராணுவமும், அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானும் அதைச் செய்வதற்கு மறுத்துள்ளனர். இதனால் ஆத்திரமடைந்த மக்கள் இராணுவ வாகனம் ஒன்றைத் தாக்கியுள்ளனர். பத்தனை பொலிஸ் பொறுப்பதிகாரியின் வாகனமும் தாக்குதலுக்கு உள்ளாகி உள்ளது. இதனைத் தொடர்ந்து அன்றைய தினம் மாலை தலவாக்கலை நகரில் மாபெரும் எதிர்ப்பு ஊர்வலமும், வீதி மறியல் போராட்டமும் இடம்பெற்றது. அரசாங்கம் ஊரடங்குச் சட்டத்தைப் பிறப்பித்திருந்த போதிலும் அதையும் மீறி இவை இடம் பெற்றன. இதில் பல அமைப்புக்கள் கலந்து கொண்ட போதிலும், மலையக மக்கள் முன்னணி தலைவர் சந்திரசேகரனே பிரதான பாத்திரமேற்றிருந்தார். இதில் புதிய ஜனநாயகக் கட்சிச் செயலாளர் செந்தில்வேல், அமைப்பாளர் இளையதம்பி தம்பையா, இ.தொ.கா தலவாக்கலை நகர அமைப்பாளர் பாரதி மற்றும், அகில இலங்கை சமாதான நீதிவான் சுப்ரமணியம் ஆகியோரும் உரையாற்றினர்.

### கூட்டத்தைக் குழப்பினர்

இந்நிலையிலேயே மற்றுமொரு எதிர்பாராத சம்பவம் இடம்பெற்றுள்ளது. வீதிமறியல் போராட்டம் முடிவடையும் தறுவாயில் சந்திரசேகரன் உரையாற்றிக் கொண்டிருந்த வேளையில் பி.ப. 1.35 மணியளவில் அதைக் குழப்பும் நோக்குடன் சில சிங்கள இளைஞர்கள் மோட்டார் சைக்கிளில் வந்து பல முறை கூட்டத்தைக் குழப்ப முயற்சித்தனர். இந்நிலையிலேயே மலையகத்தின் மற்றுமொரு பிரதான தொழிற்சங்கம் என்று கூறிக்கொள்ளும் அமைப்பின் ஆதரவாளர்கள் அருகிலுள்ள கடைகளைத் தாக்கியுள்ளனர். இந்நிலையில் நிலைமையைக் கட்டுப்படுத்தவென பொலிசாரும், இராணுவத்தினரும் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் நான்கு அப்பாவி தமிழர்கள் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டுள்ளனர். நிலைமை மோசமடையவே சந்திரசேகரன் ஸ்தலத்தை விட்டு ஆதரவாளர்களினால் வெளியேற்றப்பட்டுள்ளார்.

அதன் பின்னர் இடம்பெற்ற சம்பவங்களைக் கட்டுப்படுத்த பொலிசார் எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லையென அறிய முடிகிறது. நிலைமையைக் கட்டுப்படுத்த பிறபகுதிகளிலிருந்து பொலிசாரும், இராணுவமும், கொழும்பிலிருந்து வான் படையினரும் அழைக்கப்பட்டனர். ஊரடங்கு வேளையில் பாதுகாப்புப் படையினரின் ஆசியுடன்



தலவாக்கலை, கினிகெத்தேன. பகுதிகளில் தமிழர்களின் பல கடைகள் எரிக்கப்பட்டும், சூறையாடப்பட்டும் உள்ளன. தலவாக்கலை பகுதியில் ஒரு பௌத்த மதகுருவே இவற்றை முன்னின்று நடத்தியாக நேரில் கண்டவர்கள் தெரிவிக்கிறார்கள். தலவாக்கலை, கினிகத்தேன பகுதியில் இடம் பெற்ற சம்பவங்களில் மட்டும் மொத்தம் 72 கடைகளும், 15 வீடுகளும், சேதமாக்கப்பட்டதுடன் சிறுவர்கள் அடங்கலாக சுமார் 560 பேர் அகதிகளாக்கப்பட்டனர்.

தலவாக்கலை சம்பவங்களைத் தொடர்ந்து மொத்தம் ஏழு தமிழர்கள் மலையகப் பகுதிகளில் அரசாங்கப் படைகளால் கொல்லப்பட்டுள்ளனர். இதில் நான்கு பேர் தலவாக்கலையிலும், ஒருவர் மடக்கும்பர பகுதியிலும், மணி என்ற இளைஞர் ட்ரூப் தோட்டத்திலும், கொல்லப்பட்டனர். கொல்லப்பட்ட மற்றையவர் நுவரெலியா பீட்றூ தோட்டத்தைச் சேர்ந்தவர். இதில் நுவரெலியா பீட்றூத் தோட்ட இளைஞரின் சடலம் கண்டி வைத்தியசாலையிலிருந்து நுவரெலியாவுக்கு எடுத்து வருவதற்கும் அனுமதி மறுக்கப்பட்ட நிலையில் கண்டியியிலேயே புதைக்கப்பட்டுள்ளது. அத்துடன் மடக்கும்புர தோட்டப்பகுதியில் இரு பெண்கள் வெறியர்களால் பாலியல் வல்லுறவுக்கும் உட்படுத்தப்பட்டுள்ளனர்.

**சந்திரசேகரன் கைது?**

இந்நிலையிலேயே மலையகத் தமிழர் தங்கள் எதிர்காலம் பற்றி தீவிரமாக சிந்திக்கத் தலைப்பட்டுள்ளனர். இன்று நுவரெலியா மாவட்டத்தின் நகரங்கள் உட்பட தமிழர்கள் வாழும் அனைத்துப் பகுதிகளிலும் பொலிசாரும் விமானப் படையினரும் காவலுக்கு நிறுத்தப்பட்டுள்ளனர்.

இவற்றுக்கு மத்தியிலேயே மலையக மக்கள் முன்னணி தலைவர் சந்திரசேகரன் கடந்த ஒக்.30ம் திகதி அதிகாலை 1.30 மணியளவில் புலனாய்வுப் பிரிவினரால் விசாரணைக்கென பொலிஸ் தலைமையக நான்காவது மாடிக்கு அழைத்து வரப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார். தலவாக்கலை சம்பவங்கள் தொடர்பில் விசாரிக்கவெனவே அவர் கைது செய்யப்பட்டார். ஜனாதிபதியின் உத்தரவின் பேரிலேயே அவர் கைது செய்யப்பட்டதாக அரசாங்க விஷேட ஊடக தகவல் மையம் அறிவித்துள்ளது. ஆனால், இதன் பின்னணியில் மலையகத்தின் இன்னொரு பிரதான தொழிற்சங்கத்தின் செயற்பாடு குறித்தும் சந்தேகம் எழுப்பப்பட்டுள்ளது.

மலையக மக்களை ஒன்று திரட்டி முன்னர் நடந்திராத ஆர்ப்பாட்டத்தை ஒரு இக்கட்டான நிலையில் நடத்தி பல உண்மை நிகழ்வுகளை சர்வதேச அரங்கிற்கு வெளிப்படுத்திய அவரின் துணிச்சல் பாராட்டுக்குரியதே. ஆனால், குறித்த சம்பவத்திற்கு பிறகு எழக்கூடிய / எழுந்த நிகழ்வுகளுக்கு மக்களை எவ்வாறு முகங் கொடுக்கச் செய்வது, புற விளைவுகள் பற்றி கருத்தில் கொள்ளாமை, அவர் கைது செய்யப்பட்ட பின் ம.ம.முவின் ஏனைய தலைவர்களால் பெரிதாக ஒன்றும் செய்ய முடியாமை, அவரைத் தொடர்ந்து மலையகத்தில் தொடர்ந்து இடம் பெற்று வரும் பல கைதுகள் அவரின் தலைமையின் உறுதி இன்மையைக் காட்டுகின்றது. (ம.ம.மு. பெற்ற போனஸ் பாராளுமன்ற ஆசனத்திற்கான இழுபறி தலைவரின்

**இந்நிலையிலேயே மற்றுமொரு எதிர்பாராத சம்பவம் இடம்பெற்றுள்ளது. வீதிமறியல் போராட்டம் முடிவடையும் தறுவாயில் சந்திரசேகரன் உரையாற்றிக் கொண்டிருந்த வேளையில் பி.ப. 1.35 மணியளவில் அதைக் குழப்பும் நோக்குடன் சில சிங்கள இளைஞர்கள் மோட்டார் சைக்கிளில் வந்து பல முறை கூட்டத்தைக் குழப்ப முயற்சித்தனர். இந்நிலையிலேயே மலையகத்தின் மற்றுமொரு பிரதான தொழிற்சங்கம் என்று கூறிக்கொள்ளும் அமைப்பின் ஆதரவாளர்கள் அருகிலுள்ள கடைகளைத் தாக்கியுள்ளனர். இந்நிலையில் நிலைமையைக் கட்டுப்படுத்தவென பொலிசாரும், இராணுவத்தினரும் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் நான்கு அப்பாவி தமிழர்கள் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டுள்ளனர். நிலைமை மோசமடையவே சந்திரசேகரன் ஸ்தலத்தை விட்டு ஆதரவாளர்களினால் வெளியேற்றப்பட்டுள்ளார்.**

கைதை அடுத்து தற்காலிகமாக பின்னடைவைக் கண்டுள்ள போதிலும், எதிர்காலத்தில் அது பல பிரச்சினைகளை கட்சிக்குள் ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை) அவர் இல்லாத நிலையில் கட்சியின் நிலை என்ன? என்ற வினா எழுகிறது. சந்திரசேகரன் கைது செய்யப்படுவது இது மூன்றாவது முறை. முதல் முறை பிரேமதாச ஜனாதிபதியாக இருந்த போது தலவாக்கலையில் மலையகத் தமிழர்களின் இந்திய கடவுச் சீட்டுகளை எரித்தார் என்ற காரணத்திற்காக இரு தினங்கள் நுவரெலியாவில் தடுத்து வைக்கப்பட்டார். இவரின் விடுதலைக்காக அன்று வட - கிழக்கு முழுவதும் ஒரு நாள் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. இரண்டாவது முறையாக முன்னாள் பாதுகாப்பு பிரதியமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன கொலையின் சூத்திரதாரியான வரதனுக்கு கொட்டகலையில் புகலிடம் கொடுத்த காரணத்திற்காகக் கைது செய்யப்பட்டு கிட்டதட்ட இரண்டு வருடங்கள் பல சித்திரவதைகளுக்கு முகம் கொடுத்து சிறைத் தண்டனை அனுபவித்தார். இவருடன் கட்சி முக்கியஸ்தர்களான பாவா அப்துல் காதர், வி.டி தர்மலிங்கம் ஆகியோரும் அன்று சிறை சென்றனர். இன்று தர்மலிங்கம், உயிருடன் இல்லை. காதர் கருத்து முரண்பாடு காரணமாக பிரிந்து சென்று விட்டார்.

இந்நிலையிலேயே மூன்றாவது முறையாக சந்திரசேகரன் கைது செய்யப்பட்டுள்ளார். அவருடன் கட்சியின் உடபுஸ்ஸலாவை



அமைப்பாளர் கோவிந்தராஜ் உட்பட பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்திரசேகரனுக்கு நான்காவது மாடி ஆறாவது மாடி என்பன புதியனவல்ல என்றாலும், இன்று அவரின் தலைமை மலையகத்திற்கு தேவை என்பது உணரப்படுகிறது. ஏனெனில், எதிர்காலம் பற்றி தெளிவான நோக்கோ, அல்லது செயற்திட்டங்களோ இல்லாவிடினும், ஒரு பொருத்தமான மாற்றுத் தலைமை வளர்ந்து மலையகத்தின் எதிர்காலத் தலைமையை ஏற்கும் வரை இன்றைய இ.தொ.காவின் பொறுப்பற்ற காட்டிக் கொடுப்பு அரசியல் தலைமைக்கு மாற்றாக மக்களை வழிநடத்தக் கூடிய சக்தி ஓரளவுக்கேனும் சந்திரசேகரன் தலைமையிலான ம.ம.முவுக்கே உள்ளது என்பது பலருடைய அபிப்பிராயம். அதற்காக ம.ம.முதான் ஒரே மாற்று என்று பொருள் படாது. இந்நிலையிலேயே சந்திரசேகரன் நவ.06. திங்கட்கிழமை விடுதலை செய்யப்பட்ட போதிலும், அக்கட்சியின் செயலாளர் உட்பட ஏனையோர் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

**இ.தொ.காவின் சுயரூபம்**

மறுபுறத்தில் இச்சம்பவங்களின் போது இ.தொ.காவானது மீண்டும் தனது சுயரூபத்தை வெளிக் காட்டியுள்ளது. பிந்துனுவெவ சம்பவங்களின் உண்மை நிலையை மறைத்து சர்வதேச அரங்கில் அரசு மேற்கொண்ட பொய்ப் பிரச்சத்திற்கு இ.தொ.கா தலைமை துணை போனமை மற்றும், மலையக மக்களின் எழுச்சிகர உணர்வுகளை மழுங்கடித்தல், மக்களை பயமுறுத்தல், தங்கள் உறுப்பினர்களைக் கைவிடல் (அதாவது அரசாங்கத்திற்கு எதிராக இ.தொ.கா உறுப்பினர் எவராவது ஈடுபட்டால் சட்ட உதவி வழங்கப்படாது என அறிவித்தமை) என தொடர்ந்தன. தலவாக்கலையில் நடந்த அசம்பாவிதங்களுக்கு இ.தொ.காவும், காரணமென இன்று வெகுவாகப் பேசப்படுகிறது. அரசாங்கத்தில் அமைச்சர் பதவிகளைப் பெற்றுக் கொண்டு முட்டுக் கொடுக்கிறார்கள் என்பதற்காக இவ்வாறு சொந்த மக்களையே பணயம் வைக்கக் கூடாது.

இ.தொ.கா தலைமை மீது இன்று மக்கள் சந்தேகம் கொள்ளத் தொடங்கியுள்ளனர். ஆரம்பம் முதல் இன்று வரை இ.தொ.காவை தங்கள் குடும்பச் சொத்தாகப் பேண முற்படும் தொண்டமான் குடும்பத்தினரின் தலைவர்கள் மலையகத்தில் ஏதாவது ஒரு முக்கிய சம்பவம் இடம் பெற்றால், அந்த நிகழ்விற்கு முன்னரோ, அல்லது சம்பவத்தின் பின் உடனடியாகவோ இ.தொ.கா. தலைமை அனைத்து சந்தர்ப்பங்களிலும் இந்தியாவிற்கு சென்று விடுவது வழமை. இது மக்கள் மத்தியில் பல சந்தேகங்களைத் தூண்டியுள்ளது. இ.தொ.கா. இந்தியாவை மையப்படுத்தி தங்கள் அரசியலை மேற்கொள்கிறதா? இ.தொ.காவை இந்தியாவில் யாராவது ஆட்டுவிக்கிறார்களா? அதற்கான பலிக்கடாக்களாக மலையகத் தமிழர்கள் பயன்படுத்தப் படுகின்றனரா? என்பன போன்ற பல வினாக்களை மலையக மக்கள் இன்று தொடுக்கின்றனர்.

இ.தொ.கா. உண்மையில் மலையக மக்கள் மீது கருணை கொண்டுள்ளது, அவர்களின் உண்மையான தலைமையாக செயற்பட விரும்புகின்றனர் என்றால், இவ்வாறான வினாக்களுக்கு விடையளிக்க வேண்டிய கடப்பாடு அதற்கு உள்ளது. சில எடுத்துக் காட்டுகளையும் இவ்விடயத்தில் குறிப்பிடல் பொருத்தமாகும்.

1983 ஜூலைக் கலவரத்தில் இங்கு மக்கள் பாதிக்கப்பட்ட போது சௌமியமூர்த்தி தொண்டமான் தொடர்ந்து இந்தியாவில் இருந்தார். 1996ஆம் ஆண்டு வேலை நிறுத்தப் போராட்டம் உச்சக்கட்டத்தில் இருந்தபோதும் தொண்டமான் இந்தியாவிலேயே இருந்தார். இம்முறை தலவாக்கலை சம்பவங்களை அடுத்து மலையகத் தமிழர்கள் பாதுகாப்பு குறித்து எவ்வித உத்தரவாதமும் இல்லாதிருந்த வேளையில், மலையகத் தமிழரின் ஏக தலைவர்களாகக் கூறிக்கொள்ளும் இ.தொ.கா தலைவரும், அமைச்சருமான ஆறுமுகம் தொண்டமான் இலங்கை - ஈஸ்வரன் பிரதர்ஸ்க்கு சொந்தமான சென்னையிலுள்ள பிரிஸ் ஹோட்டலில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார்.

இவை இ.தொ.காவுக்கு தனது சொந்த மக்கள் மீது எதுவித அக்கறையுமில்லை எனக் காட்டுவதுடன், அண்மைய மலையக நிகழ்வுகள் மலையக மக்கள் இ.தொ.கா மீதும் அதன் தலைமை மீதும் நம்பிக்கை இழந்துள்ளதையும் மாற்றுத் தலைமையின் தேவையை உணர்ந்துள்ளதையுமே காட்டுகிறது.

இதேவேளை சந்திரசேகரனின் கைதானது அந்த மாற்றுத் தலைமையாக அவர் உருவெடுத்துவிடக் கூடாது என்பதிலும் மக்களின் உணர்வுகள், சிந்தனைகள் ஆரம்பத்திலேயே கிள்ளியெறியப்பட வேண்டும் என்பதில் இன்றைய அரசாங்கமும் அதன் கூட்டாளிகளான இ.தொ.காவும் மிகவும் கடுமையாக இருக்கின்றன என்பதையே காட்டுகின்றன. இதை முழுமையாக ஆதரிப்பதாகவே ஐ.தே.கவின் செயற்பாடுகளும் அசமந்த போக்கும் எமக்கு தெளிவுபட உணர்த்துகின்றன. ஆனால், மக்களை என்றும், ஏமாற்றவோ நசுக்கவோ முடியாது என்பதையே அண்மைய மலையக சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன. இதை மேற்குறித்த சக்திகள் உணர்ந்தால் நன்மையே.

**மாற்று அமைப்பின் தேவை**

இதேவேளை பேரினவாதிகளின் தொடர்ச்சியான தாக்குதல்களும், பயமுறுத்தல்களும் அதற்கு ஈடுகொடுக்க முடியாத மலையகத் தலைமைகளின் நிலையும் மலையகத் தமிழர்களை விழிப்புறச் செய்துள்ளதுடன் ஒரு பொருத்தமான உறுதியான மாற்று அமைப்பினதும் தலைமையினதும் தேவைபற்றிச் சிந்திக்கத் தூண்டியுள்ளது.

இது பற்றி மலையக படித்த புத்திஜீவிகளும், அனுபவசாலிகளும் சிந்தித்து செயலாற்றுவது வரவேற்கத்தக்கது. மாற்று அரசியல் தலைமையானது பல இடர்பாடுகளுக்கும், தடைகளுக்கும் முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும். அத்தகைய தடைகள் சமூகத்தின் உள்ளேயும், வெளியேயும் இருந்து ஏற்படும். வெளிப்புற காரணிகளை விட உட்புற காரணிகளே அபாயமானது. இவற்றை ஏற்படுத்தக் கூடிய சக்திகளாக பின்வருவன விளங்குகின்றன.

- அரசியல் கட்சிகள்
- தொழிற்சங்கங்கள்
- அரச சார்பற்ற நிறுவனங்கள்
- மதப்பிரச்சார அமைப்புகள்
- சாதி சங்கள் / சாதி கட்மைப்புகள்

ஏலவே குறிப்பிட்டது போன்று பாராளுமன்ற அரசியலில் இன்றைய தலைமைகள் தோல்வி அடைந்துள்ள அந்த சபை ஊடாக மக்களுக்கு எந்த நன்மையும் நடந்திராத நிலையில் மேற்குறிப்பிட்ட தடைகளுக்கான காரணிகளையும் தெளிவாக விளங்கி மாற்று அரசியல் தன்மை வளர்த்தல் காலத்தின் அவசியத் தேவையாகும்.

◎

# வேலியிடப்பட்ட 'காற்றுக்கென்ன வேலி'

- இயக்குநர் புகழேந்தி

சந்திப்பு: த.சந்திரா
படங்கள்: ஜெயராணி

படைப்பாளிகளின் படைப்புச் சுதந்திரத்தில் தணிக்கை அதிகாரிகள் தமக்கேயுரிய அரசியல் திமிர்த்தனத்துடன் தலையிடுவது ஒன்றும் புதிய விடயமல்ல.

இந்தியாவில் சர்ச்சைக்குரிய திரைப்படங்கள் என்று பல அருமையான படங்கள் தடை செய்யப்படுவதும் ஒன்றும் புதிய விடயமல்ல.

அந்த வரிசையில் இப்போது தடை செய்யப்பட்டிருப்பது புகழேந்தி இயக்கிய "காற்றுக்கென்ன வேலி".

பிரசன்ன விதானகேயின் "புரஹந்த களுவர" தடைசெய்யப்பட்டது பற்றி சரிநிகரில் எழுதியிருக்கிறோம். அரசும் அதிகாரிகளும் தேசங் கடந்தும் ஒரே விதமாகத்தான் சிந்திக்கிறார்கள் என்பதற்கு இன்னொரு உதாரணம் "காற்றுக்கென்ன வேலி" ஆ -ர்

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலையை மையமாக வைத்து ஆர்.கே.செல்வமணி இயக்கிய 'குற்றப் பத்திரிகை' திரைப் படத்துக்குத் தணிக்கைச் சான்றிதழ் வழங்காததால் இன்று வரை அந்தத் திரைப்படம் வெளிவர வில்லை. அதே மாதிரியான ஒரு நிலை புகழேந்தி இயக்கியிருக்கும் 'காற்றுக்கென்ன வேலி' திரைப்படத்திற்கும் நேர்ந்திருக்கிறது. திரைப் படத்தின் படப்பிடிப்பு வேலைகள் அனைத்தும் முடிந்து ஐந்து மாதங்கள் கடந்து விட்ட நிலையிலும் தணிக்கைக் குழுவிடமிருந்து சான்றிதழ் கிடைத்தபாடில்லை.பொறுத்துப் பார்த்த இயக்குநர் வீதியில் இறங்கிப் போராடத் துணிந்தார். 'தென்னிந்தியத் திரைப்பட வர்த்தக சபை' வளாகத்தில் அக். 23- ஆம் தேதி காலை 7 மணி முதல் காலவரையறையற்ற உண்ணா விரதத்தை மேற்கொண்டார்.

'தினமணி' நாளிதழில் பணியாற்றிக் கொண்டே கலைமணி, வி.சி.குகநாதன், பாரதிராஜா மற்றும் பார்த்திபன் ஆகியோரிடம் திரைப்படத் தொழிலைக் கற்றுக் கொண்டவர் இவர். 'மைந்தன்' இவர் இயக்கிய முதல் திரைப்படம். நெப்போலியன், செல்வா அந்தப் படத்தில் முக்கியக் கதாபாத்திரமேற்று நடித்திருந்தனர். 'காற்றுக்கென்ன வேலி' இவருடைய இரண்டாவது திரைப்படம்.

இந்தப் படம் குறித்து இயக்குநர் புகழேந்தியிடம் பேசியபோது,

'காற்றுக்கென்ன வேலி' திரைப்படத்தின் படப்பிடிப்பு பிப்ரவரியில் ஆரம்பித்து மே மாதம் முடிந்து விட்டது. சுஜிதா, குஷ்பு, ஸ்ரீமான்,



புகழேந்தி நாசருடன்

அருண் பாண்டியன் ஆகியோர் நடித்திருக்கின்றனர். படத்தின் உயிர்நாடி இளையராஜாவின் இசை. படத்தில் குஷ்பு பாட்டு டீச்சர். பாடல்கள் அனைத்தும் பாரதியார் பாடல்கள். மிக அருமையாக இசையமைத்திருக்கிறார் இசைஞானி.

ஜூன் பனிரெண்டாம் தேதி தணிக்கைக் குழுவின் ஐந்து மண்டல உறுப்பினர்கள் 'காற்றுக்கென்ன வேலி' படத்தைப் பார்த்தனர். அவர்களில் பா.ஜ.க. மகளிரணியைச் சேர்ந்த லலிதா சுபாஷ், படத்துக்குக் கடுமையான எதிர்ப்புத் தெரிவித்தார். 'இப் படத்தை இலங்கையில் வெளியிட வேண்டியது தானே' என்று கன்னாபின்னாவென்று கத்த ஆரம்பித்துவிட்டார். அங்கே எழுத்தாளர் இந்துமதி, நாடகக் காவலர் ஆர். எஸ். மனோகர் போன்றோரெல்லாம் இருந்தார்கள். ஆனால், அவர்கள் அழைத்தும் விவாதத்திற்கு கூட வராமல் லலிதா சுபாஷ் கிளம்பிப் போய்விட்டார். அப்புறம் ரிவைசிங் கமிட்டியில் தணிக்கைக் குழு அதிகாரி ராஜூ, 'கவனமாகப் படத்தைப் பாருங்கள்' என்று டெல்லி ட்ரிப்யூனலுக்கு எழுதி அனுப்பியிருக்கிறார்.

இப்போது அது மூலையில் தூங்கிக் கொண்டிருக்கிறது. என்னுடைய படைப்பு கோமா நிலையில் இருப்பதை என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. படத்தின் தயாரிப்பாளர்கள் தமிழ்நாடு வணிகர் சங்கத்தைச் சேர்ந்த 200 பேர். இவர்கள் அத்தனை பேரின் உணர்வையும், திரைப்படத் துறையைச் சேர்ந்த 100 பேரின் உழைப்பையும் தணிக்கைக் குழுவினர் புரிந்து கொள்ள வேண்டும்.


தணிக்கைக் குழுவைச் சேர்ந்த 83 நபர்களில் எத்தனை பேருக்கு சினிமாவைப் பற்றித் தெரியும். தணிக்கைக் குழுவில் மண்டல உறுப்பினர்களாக இருக்கக் கூடியவர்களுக்கு உண்மையிலேயே திரைப் படம் குறித்த அறிவு இருக்கிறதா, அவர்களை உறுப்பினர்களாக நியமிக்கலாமா என்பதை திரைத் துறையைச் சேர்ந்தவர்கள் தீர்மானிக்கட்டும். ஏதாவது ஒரு கட்சி ஆட்சிக்கு வந்தவுடன் அவர்களின் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களுக்குப் பதவி கொடுக்க வேண்டும் என்பதற்காகத் தணிக்கைக் குழு உறுப்பினர் பதவியைக் கொடுத்திறார்கள்.



புகழேந்தி உண்ணா விரதத்தின் போது

அதுவும் அந்த உறுப்பினர் தொலை பேசி இலாகாவில் பதவி கேட்டிருப்பார் அது கிடைக்காத பட்சத்தில் தணிக்கைக் குழுவிலாவது கொடுங்கள் என்று தணிக்கைக் குழு உறுப்பினர் பதவியைக் கேட்டு வாங்கியிருப்பார். அவ்வளவு கேவலமாகப் போய்விட்டதா தணிக்கைக் குழு?

காயம்பட்ட நிலையில் துப்பாக்கி-யோடு வருகின்ற ஒரு பெண்ணுக்கும், அவளைக் காப்பாற்றுகின்ற மருத்துவருக்-கும் இடையே நடக்கின்ற கதைதான் படம்.



புகழேந்தி ராஜேந்திரனுடன்

இதில் நான் எந்த இடத்திலும் அந்தப் பெண், விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவள் என்பதைக் குறிப்பிடவில்லை.

இங்கு தடை செய்யப்பட்டுள்ள இயக்கம் அது மட்டும்தான். அங்கு அதைத் தவிர ஏராளமான போராட்டக் குழுக்கள் உள்ளன. இவர்களாக அந்தப் பெண் விடுதலைப்புலி என்று கற்பனை செய்து கொண்டால் நான் என்ன செய்ய முடியும்? படத்தில் போராளி ஒருவர் சயனைடு சாப்பிட்டு இறந்து போகும் காட்சி வரும். இப்படி சயனைடு சாப்பிட்டுச் செத்து போற கலாசாரம் விடுதலைப் புலிகளுடையது என்று சொல்கிறார்கள்.

"ஆனால் 1932 இல் இந்தியாவின் சுதந்திரப் போராட்டக் காலத்தில் ப்ரீதிலதா வதேதார் என்ற வேதியியல் துறை மாணவி சயனைடு சாப்பிட்டுத் தற்கொலை செய்து கொள்கிறார். அப்படிப் பார்த்தால் இந்திய சுதந்திரப் போராட்டம் தான் சயனைடு கலாசாரத்தை ஆரம்பித்து வைத்தது."

சுஜிதாவைத் (படத்தில் போராளியாக நடித்திருக்கும் நடிகை) தேடி ராணுவ உடையில் ஒருவர் வருகிறார். ஆனால் சுஜிதா ஒளிந்து கொள்கிறார். அடுத்த காட்சியில் குஷ்பு அமைதியாக அமர்ந்திருக்கிறார். 'உனக்கு ஒன்னும் ஆகலையே' என்று குஷ்பு சுஜிதாவைப் பார்த்துக் கேட்கிறார். 'இந்தக் காட்சியில் இலங்கை ராணுவத்தினரைப் பாலியல் வன்முறையில் ஈடுபடுபவர்களாகச் சித்திரித்திருக்கிறீர்கள்' என்று தணிக்கைக் குழுவினர் கூறுகின்றனர். இப்படி படத்தில் இல்லாத விசயத்தையும் இருப்பதாகச் சொல்கிறார்கள்.

என்னுடைய கோரிக்கைகள் இவைதான்:

1. தமிழ்ப் படங்களுக்கு உரிய அங்கீகாரம்.

2. தணிக்கைக் குழு உறுப்பினர்கள் திரைப்படம் பற்றித் தெரிந்தவர்களாக, தகுதி படைத்தவர்களாக இருக்க வேண்டும்.

3. எல்லாப் படைப்பாளிகளுக்கும் முழு படைப்புச் சுதந்திரம் வேண்டும்.

4. துணைக் கோரிக்கையாய் என்னுடைய 'காற்றுக்கென்ன வேலி' திரைப்படத்துக்குத் தணிக்கை சான்றிதழ் வழங்க வேண்டும்.

இதில் எந்த கோரிக்கையும் நிறைவேற்றப்படவில்லை என்றாலும் உண்ணாவிரதத்தைத் திரும்பப் பெற மாட்டேன்' என பசி மயக்கத்திலும் உறுதியாகக் கூறுகிறார் புகழேந்தி.

பின்குறிப்பு: உண்ணாவிரதம் மேற்கொண்ட புகழேந்தியை காவல்துறையினர் 25.10.2000. அன்று கைது செய்து மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கும் தொடர்ந்து உண்ணாவிரதத்தை மேற்கொண்ட அவர், மருத்துவர்கள் சிகிச்சை அளிக்க அனுமதிக்கவில்லை. இந்நிலையில் சென்னை வந்திருந்த இயக்குநர் தாசரி நாராயணராவ், புகழேந்தியின் நிலைமையை நேரில் பார்த்து, உடனே மத்திய செய்தித்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜுக்கு ஃபேக்ஸ் மூலம் கடிதம் அனுப்பினார். நவம்பர் 12 ம் தேதி படத்தை ட்ரிப்யூனலில் பார்ப்பதாக அமைச்சரிடமிருந்து செய்தி வந்துள்ளது. அதைத் தொடர்ந்து புகழேந்தி அக். 27 ஆம் தேதி இரவு உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டார்.

படத்தில் போராளி ஒருவர் சயனைடு சாப்பிட்டு இறந்து போகும் காட்சி வரும். இப்படி சயனைடு சாப்பிட்டுச் செத்து போற கலாசாரம் விடுதலைப் புலிகளுடையது என்று சொல்கிறார்கள்.

"ஆனால் 1932 இல் இந்தியாவின் சுதந்திரப் போராட்டக் காலத்தில் ப்ரீதிலதா வதேதார் என்ற வேதியியல் துறை மாணவி சயனைடு சாப்பிட்டுத் தற்கொலை செய்து கொள்கிறார். அப்படிப் பார்த்தால் இந்திய சுதந்திரப் போராட்டம் தான் சயனைடு கலாசாரத்தை ஆரம்பித்து வைத்தது."

நன்றி: ஆறாம்திணை

## நினைவுக் குறிப்புகள் – 7

இப்போது நாங்கள் பேசிக் கொண்டிருக்கும் இடத்திலிருந்து கொஞ்சம் வேகமாக முன்னோக்கிப் போனால் (இந்தப் பீற்றர் கெனமனின் முத்தாய்ப்பு விடயம் எனக்குத் தெரியவந்தது எப்படி) நடந்தது என்ன என்று சொல்லி விட்டு மேலே போகலாம். நெருக்கமாகப் கலந்துரையாடலின் போது கூறியது போன்ற சில தந்திரங்களைத் தன் விவாதங்களின் போது அவிழ்த்து விட்டு விடுவார்.

இங்கிலாந்திலிருந்து வந்ததும் பீற்றர் கெனமன் லேக் ஹவுசில் சேர்ந்துகொண்டார். சண்டே ஒப்சேவர் பத்திரிகையில் சிலகாலம் அவர் ஒரு நட்சத்திரமாக விளங்கினார். ஒரு ஞாயிறன்று வெளியான ஒப்சேவரில் "உலகின் மிக மோசமான புத்தகம்" என்ற பெருமைக்கு உள்ளாக்கியிருக்கிறார்! நான் ஐம்பதுகளின் பின்னரைக் காலப் பகுதியில் டெய்லி நியூஸ் பத்திரிகையின் பாராளுமன்ற செய்தி-யாளராக இருந்தபோது ஒருநாள் எனது பத்தியை இவ்வாறு ஆரம்பித்திருந்தேன்." உணவு விவசாயத்துறை அமைச்சர் (பிலிப் குணவர்த்தன) அரசாங்கத்தின் முன்வாங்கில் அமைதியாக உட்கார்ந்திருக்கும் விதத்தைப் பார்த்தால் அவரை ஒரு அணைந்து போன எரிமலை என்று யாராவது எண்ணக் கூடும். ஆனால் உண்மையில் தீ உள்ளே கனன்று கொண்டிருக்கிறது.." பின்னாளில் பீற்றர் இறந்த போது ஒரு பத்திரிகையாளர் பொழுதில் அவர் சொன்ன ஒரே ஒரு விடயம் மட்டும் எனக்கு ஞாபகம் இருக்கிறது.

அவர் சொன்னார் "**சிட்னியும் பீற்றீஸ் வெப்** உம் சோவியத் தொடர்பான தமது புத்தகத்திற்கு 'சோவியத் கொம்யூனிசம்' - ஒரு புதிய நாகரிக வளர்ச்சி?' என்று பெயரிட்டிருந்தனர். ஆனால் அதன் இரண்டாம் பதிப்பில் அவர்கள் அந்தக் கேள்விக் குறியை எடுத்து விட்டனர்!'

# ஆனந்தாக் கல்லூரி மர்மமான முறையில் தீப்பற்றிக் கொண்டது!

பழகத் தொடங்கியதற்குப் பிறகு எனக்குப் மிகவும் பிரியமானவராகி விட்ட பொ.கந்தையாவிடமிருந்து ஒருநாள் ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. 1958இல் மொஸ்கோவுக்குப் பயணம் ஒன்றை மேற்கொண்டு திரும்பி வந்திருந்த அவர் அந்தத் தொலைபேசி அழைப்பின் போது சொன்னார்: "றெஜி, மொஸ்கோவிலிருந்து நான் கொஞ்ச ஆவணங்களைக் கொண்டு வந்திருக்கிறேன். அவை ரொம்பவும் பழைய ஆவணங்கள்தானென்றாலும் இப்போதுதான் முதன்முதலாகப் பிரசுரமாகியிருக்கின்றன. உமக்கு அவை ஆவலூட்டக் கூடியவையாக இருக்கும்.நான் அவற்றை அனுப்பி வைக்கிறேன்" சொன்னபடியே அவர் ஆவணங்களை அவர் அனுப்பி வைத்தார்.

அவற்றைப் பார்த்த போதுதான் பீற்றர் கெனமன் திரிபுபடுத்திக் கூறிய, லெனின் கட்சிக்கெழுதிய கடைசிக் (பின்னாளில் **இருட்டடிப்புச் செய்யப்பட்ட மரண சாசனம்**' என்று அறியப்பட்ட) கடிதம் என் கண்ணிற் பட்டது. கந்தையாவுக்கு அது புது விடயம் தான் என்றாலும் என்னைப் பொறுத்தவரை ட்ரொஸ்கிய இலக்கியங்கள் மூலமாக நான் அது பற்றி பல வருடங்களுக்கு முன்பே கேள்விப் பட்டிருந்தேன்.


நான் கந்தையாவைப் பெரிதும் விரும்பினேன். அவரின் படாடோபமில்லாத தன்மையும் அவரிடம் காணப்பட்ட வசீகரமும் உண்மைத்தன்மையும் எனக்கு அவர் பால் மதிப்பை ஏற்படுத்தியிருந்தன. ஆனால் பீற்றர் கெனமன்மீது எனக்கு ஒருபோதும் மதிப்பு வளரவில்லை.

கெனமன் மிகுந்த கெட்டிக்காரர். மிகச்சிறந்த முறையில் பாராளுமன்றத்தில் விவாதங்களை நடாத்தக் கூடியவர். பாராளுமன்ற பத்திரிகையாளர் கலரியில் இருக்கும் போது பல தடவை அவரது விவாதங்களைக் கவனித்திருக்கிறன். அவரது விவாதத்திறமை என்னைக் கவர்ந்திருக்கிறது.

ஆனால் அவருடைய இயற்கையான கெட்டிக்காரத்தனத்தால் பல காலங்களுக்கு முன் கந்தையாவின் அறையில் நடந்த ஒரு சர்ச்சை நடைபெற்றது. பீற்றருக்கு இரண்டு தெரிவுகள் இருந்தன. ஒன்று '**ட்ரொட்ஸ்கியின்' இரஷ்சியப் புரட்சியின் வரலாறு**'. மற்றது பல்கிரேவின் '**தங்கப் புதையல்**'.

இரண்டாவது பற்றி அவர் சொன்னார்: '**அது கவிதையை ஒரு பீடத்தில் ஏற்றிவைக்க முயல்கிறது என்ற போதும் புத்தக அலுமாரிக்குள் அதனைத் தூங்க வைப்பதில்தான் அது வெற்றி பெறுகிறகிறது!**' இந்தப் புத்திசாதுரியமான கிண்டற்குறிப்பு நேரடியாக **டபிள்யூ .எச்.ஓடென்,ஜோன் கெரெட்** ஆகியோர் தங்களது"கவிஞரின் நாக்கு"என்ற பாமாலைக்கு எழுதிய அறிமுகத்திலிருந்து எடுக்கப்பட்டது.

ஆயினும் இது எங்கிருந்து எடுக்கப்பட்டதென்று சொல்லப்படவில்லை. நான் பல்கலைக்கழகத்தில் மாணவனாக இருந்தபோது லெனினின் மறைவுதின நினைவு நாள் நிகழ்ச்சியில் அவரைப்பற்றிய சொற்பொழிவொன்றை ஆற்றுவதற்காக பீற்றர் கெனமன் அழைக்கப்பட்டிருந்தார்.




**தலைமறைவு வாழ்க்கை**

றெஜி சிறிவர்த்தன

அவரது திறமைமிக்க பார்ாளுமன்ற குத்தல் கதைகளில் சிலவற்றைத் தொகுத்திருந்தார்.

> ''சிட்னியும் பீற்றீஸ் வெப் உம் சோவியத் தொடர்பான தமது புத்தகத்திற்கு 'சோவியத் கொம்யூ னிசம்' - ஒரு புதிய நாகரிக வளர்ச்சி?'' என்று பெயரிட்டிருந்தனர். ஆனால் அதன் இரண்டாம பதிப்பில் அவர்கள் அந்தக் கேள்விக்குறியை எடுத்து விட்டனர்!'

பீற்றர் தொடங்கினார்.'**லெனின் மறைந்து விட்டார்! பெருமலைகள் சமுத்திரத்தில் வீழ்வது போல் இந்தச் சொற்கள் வந்து வீழ்ந்தன!**'

திரும்பவும் எங்கிருந்து எடுக்கப்பட்ட மேற்கோள் என்று சொல்லாமலே!. இவை நேரடியாக பீற்றரால் பெருமளவுக்கு வெறுக்கப்பட்ட வரும் அவரால் இகழப்பட்டவருமான ட்ரொட்ஸ்கியின் வார்த்தைகள் !.

பீற்றர் என்னிடமிருந்தும் ஒரு சொற்றொடரை கடன்வாங்குவதன் மூலம் என்னையும் இவர்களின் வரிசையில் வரும் அப்போதுதான் நான் சொன்னதற்குச் சில ஆண்டுகட்குப் பிறகு பீற்றர், பிலிப்பை 'அணைந்து போன எரிமலை' என்று குறிப்பிட்டிருப்பதைக் கவனித்தேன்!.

இந்த அத்தியாயத்தில் நான் முன்னுக்கும் பின்னுக்குமாக பாய்ந்து பாய்ந்து எழுதிக் கொண்டிருப்பதால் கந்தையாவின் அறையில் அன்று வந்திருந்த மூன்றாவது பாத்திரமான ஏ.பீ. பெரேரா பற்றிய அனுபவங்களையும் பதிவு செய்யலாம் என்று நினைக்கிறேன். அவர் அப்போது ஒரு கொம்யூனிஸட் அனுதாபி.... அந்த மாலைப்

ஆனால் நான் பட்டம்பெற்றதும் எனது பழைய பாடசாலையான ஆனந்தாக் கல்லூரியில் ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பித்தேன் அப்போது அங்கு புதிதாக நியமிக்கப்பட்ட அதிபராக இருந்த ஏ.பீ. பெரேரா என்னிடம் நேர்முகப் பரீட்சையின் போது கேட்டார்:

"நீ ஒரு சமசமாஜிஸட் என்று சொல்கிறார்களே"

"ஆம் " என்றேன் நான்.

"நல்லது. ஆனால் நான் உன்னை நியமிக்க வேண்டுமென்றால் நீ உனது நிலைப்பாடு அரசியல் ரீதியாக மாணவர்கள் மீது செல்வாக்குச் செலுத்த அனுமதிக்கக் கூடாது"

"அதற்கு நான் உறுதி தருகிறேன்"

" அது சரி ஆனால் நீ உனது அரசியல் நிலைப்பாட்டை மறுபரிசீலனை செய்ய வேண்டும். நான் நினைக்கிறேன், உலகின் எதிர்காலம் தேசிய சோசலிச்த்தில் தான் தங்கியிருக்கிறது "

அவ ர் இந்தக் கோட்பாட்டை விளக்கத் தொடங்கினார். இது 1943இன் நடுப்பகுதி.. ஏ.பி.பெரேரா அன்றைய இராணுவ வெற்றிகளால் இழுத்துச் செல்லப்பட்டிருக்க வேண்டும்.

அவர் தன்னை பாசிஸடுக்களின் மேலாதிக்கம் நிறைந்த உலகில், இலங்கையின் சர்வாதிகாரியாகக் கருதினாரோ என்னவோ எனக்குத் தெரியாது. ஆனால் அவர் விரைவலைலேயே பௌத்த பாடசாலைகளை கட்டுப்படுத்தி வந்த பௌத்த பிரமஞான சபைக்குள் ஒரு உடைவை ஏற்படுத்தினார். இது அதற்குள். ஒரு உள்ளமைப்பு வன்முறைப் போராட்டத்திற்கு இட்டுச் சென்றது. பெரேராவுக்கு விசுவாசமான ஒரு அடியாள் கூட்டம் அதற்குள் இருந்தது. இது எதிரணிக் குழுவை பயமுறுத்தியது.அவர்கள் ஆதரித்த குழு இறுதியில் தோல்விகண்டபோது யுத்த சூழ்நிலை காரணமாக தற்காலிகமாக ஆனந்தாக் கல்லூரி இயங்கிவந்த கிடுகு வேய்ந்த கட்டிடங்கள் மர்மமான முறையில் தீப்பற்றி எரிந்தது சாம்பராகின.

**(இன்னும் வரும்)**

---

அவர்களுக்கென்று ஒரு குடில்

## ''தமிழ் இலக்கிய விஸ்தரிப்புக்கான இன்னுமோர் பங்களிப்பு!''

வெள்ளிக்கிழமைகள் தோறும் கொழும்பு தமிழ்ச் சங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள நூல் நயம் காண்போம் நிகழ்ச்சியில் கடந்த வெள்ளிக்கிழமை (03.11.2000) புலம் பெயர் எழுத்தாளரான பொ.கருணாகரமூர்த்தியின் "அவர்களுக்கென்று ஒரு குடில்" சிறுகதைத் தொகுதி நயத்திற்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.

"கிழக்கு நோக்கிச் செல்லும் சில மேகங்கள்" (சிறுகதைத் தொகுதி) "வாழ்வு வசப்படும்" (நாவலை) "ஒரு அகதி உருவாகும் நேரம்" , "மாற்றம்" (குறுநாவல்கள்) இவரது ஏனைய படைப்புக்களாகும். நயம் கண்ட யோதிலிங்கம், ஆரம்பத்திலேயே தான் ஒரு இலக்கிய விமர்சகன் அல்ல என்று குறிப்பிட்ட போதும், தொகுப்பிலுள்ள பதின்மூன்று ("அமீகோ" சிறுகதை தவிர்ந்த) சிறுகதைகள் பற்றிய கருத்துக்கள், விமர்சனங்களை தொகுத்து வழங்கிய முறைமையானது அவர் சிறந்த இலக்கிய விமர்சகனும் கூட என்பதைக் காட்டியது.

இனத்துவம், சாதீயம், பெண்ணியம், முதியவர்களின் துன்பங்கள், புலம் பெயர் நாடுகளில் நம்மவரின் வாழ்க்கை, சிறுவர் துஷ்பிரயோகம், நிலப் பிரபுத்துவம், தனிமனிதப் பிரச்சினைகள் போன்றன சிறுகதைகளின் கருப்பொருள்களாக அமைந்துள்ளன.

ஆசிரியர் பொதுவாக எழுத்தாளர்களிடம் காணப்படும் ஒற்றைப் பரிமாணச் சிந்தனை முறையிலிருந்து விலகி ஒரு பன்முகப்பார்வையை அனேகமான கதைகளில் பரவவிட்டுள்ளார். இதைவிட இவரது கதைகளில் பெரும்பாலும் விசிற்றா (மையத்தை நேரடியாக தொடாமல் அங்கு இங்கு சென்று இறுதியில் மையத்தை தொடும் முறையேயாகும்) எழுத்து நடை கையாளப்பட்டுள்ளது. மையத்தோடு தொடர்பற்ற விடயங்களைப் பற்றிப் பேசும் போது விசிற்றா நடை எல்லை மீறிச் செல்வதாகவும் உள்ளது என்றும் சில கதைகள் வலிந்து எழுதப்பட்டுள்ளது என்றும், வெவ்வேறு அணுகுமுறைகளை கூட்டாகவும் தனியாகவும் பயன்படுத்தியுள்ளார் என்றும், பெண் விடுதலையை அங்கீகரித்தாலும் கதைகளில் ஆண் ஆதிக்கக்கூறுகள் ஆங்காங்கே தென்படுகின்றன என்றும், (போர்களும் ரணங்களும், வண்ணத்துப்பூச்சியுடன் வாழ முற்படுதல்) கற்பனைக் கதைகள், அனுபவிப்புக் கதைகள் போல உச்சத்தை எட்டவில்லை என்றும் குறிப்பிட்டதோடு, இன்னொரு பக்கமாக இக்கதைகளின் மூலம் கருணாகரமூர்த்தி தமிழ் இலக்கியப் பரப்பினதும், புலம்பெயர் தமிழ் இலக்கியப் பரப்பும் விஸ்தரிக்கப்படுவதற்கு கணிசமான பங்களிப்பு செய்துள்ளார் என்றும் கலந்துரையாடலில் குறிப்பிடப்பட்டது.

நூல் பற்றிய விமர்சனத்தை தொகுத்து வழங்கிய முறையானது, தொகுதியை வாசிக்காதோர் மனதில் எப்படியாவது வாசிக்க வேண்டும் எனும் ஆர்வத்தையும் தூண்டியது எனலாம்.


---

## சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தின் புத்தகக் கண்காட்சி

மட்டு. நகர் சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம் எதிர்வரும் 10ம், 11ம் திகதிகளில் புத்தகக் கண்காட்சி ஒன்றை நடாத்தவுள்ளது.

பழைய வாடி வீட்டுத் தெருவில் உள்ள அவர்களது அலுவலகக் கட்டடத்தில் இக்கண்காட்சி காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை நடைபெறும்.

சூரியா அபிவிருத்தி நிலையத்தின் வெளியீடுகளான புத்தகங்கள், சஞ்சிகைகள், ஒலி ஒளிப் பேழைகள் என்பன அங்கு காட்சிக்கு வைக்கப்படுவதுடன் பெண்கள் தொடர்பான விபரண வீடியோப் படங்களும் காண்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.



அம்மன் கோயில் குளத்துக் குள்ளிருந்த ஐந்து தலை நாகம், பள்ளிக்கூட விளையாட்டில் தடிக்கொய்யாப் பற்றைக்குள்ளிருந்த "முள்ளுப்பன்றி" - இவை யெல்லாம் இப்போது எங்கே போயினவோ. தெரியவில்லை. இவைகளுடன் செல்லர் வளவுப் "பாண்கிணற்றடி" நெல்லி மரத்தில் ஒரு முனியும் அந்த நாட்களில் இருந்தது. இந்தப் பாண்கிணற்று முனியிலும் பார்க்க, அதற் குள்ளிருந்த பாம்புகள் தான் எங்களை அதிகம் பயமுறுத்தியிருந்தன. பள்ளிக்கூடப் பிள்ளை களை வாத்தியார், கோயிலுக்கும், விளையாட்டு இடத்துக்கும் என்று தங்களுடன் அழைத்துக் கொண்டு போகிற நேரங்களைத் தவிர்த்து மற்ற நேரங்களில் - அதிலும் முக்கியமாக மத்தியானம் பன்னிரெண்டு மணிக்குப் பிறகு மேலே சொன்ன இந்தப் பயங்கரங்களெல்லாம் உலாவ வெளிக்கிட்டு விடுமென்றும் சின்னப் பிள்ளைகளைத்தான் அவை தேடித் திரியு மென்றும் அநேகமாக எங்களெல் லோருக்கும் வீடுகளில் சொல்லியிருந்தார்கள். பள்ளிக்கூடம், மத்தியானம் ஒரு மணிக்குத்தான் அப்போது விடுவது வழக்கம் என்பதை நினைத்துப் பார்க்கையில், இந்தப பிராணிகளெல்லாம் ஏன் பன்னிரெண்டு மணிக்கும் பிற்பட்ட நேரத்தைத் தமது வாலாய வேலையாகக் கொண்டிருந்தன என்று இப்போது புரிகிறது - என்றாலும், மூன்றாம் வகுப்புத்தாண்டிய கையிலிருந்தே இந்தப் புரிதல் மெல்ல மெல்ல ஆரம்பித்திருக்க வேண்டும்.

எப்படியிருந்தாலும், பெரிய விக்கினி - இரண்டு 'விக்கினி'கள் எங்களோடு ஐந்தாம் வகுப்பு வரை படித்தார்கள்: 'பெரிய விக்கினி' என்ற விக்கினராசாவும், 'சின்ன விக்கினி' என்ற விக்கினேசுரவனும் துணிச்சல்காரன்தான். மூன்றாம் வகுப்பில் படித்தபோதே, ஒரு நாள், அந்தப் பாண்கிணற்றுக்குள் நீர்மட்டத்தில், சுவர்க்கரையோடு நீந்திக்கொண்டு கிடந்த பெரிய பாம்பு ஒன்றை நிலத்தில் நின்றே குறிதவறாமல் கல்லால் எறிந்து கொன்றான். அதிலிருந்து எங்களுக்குள் அவனை ஒரு விண்ணணாக நாங்கள் ஒப்புக் கொண்டோம்.

எங்கள் பள்ளிக்கூடத்துப் பெயர், கல்விக்கந்தோரிலும், முன்சுவரிலும் வாசலுக்கு மேலும், 'பாரதி வித்தியாசாலை', ஆனால், அந்தப் பெயரை ஊருக்குள் யாராவது சொல்லி நான் கேட்டதில்லை.

'தம்பி எங்கே படிக்கிறாய்?' என்றால்,

'பொன்னையா பள்ளிக்கூடத்திலே...' என்றுதான் மறுமொழி வரும். பொன்னையா தான் பாரதி வித்தியாசாலையை நிறுவியவர்: எப்போதோ செத்துப்போய்விட்டவர். எங்கள் ஊரக்காரர்கள் நன்றி மறவாதவர்களாய் இருந்தார்கள்.

## இரண்டு

இராசலிங்கம் வாத்தியார் சிரித்ததை, அவரிடம் படித்த ஐந்து வருட காலத்திலும், ஒரேயொரு முறைதான் பார்த்ததாக ஞாபக மிருக்கிறது. இதைச்சாதித்தவன் கனகநாதன். இராசலிங்க வாத்தியார் நாலாம் வகுப்பில் எங்களுக்கு இங்கிலீஷ் எடுத்தார். ஸ்பெல்லிங் முடிந்து, புத்தகங்கள் வாசிக்கிற கட்டம். வாத்தியார், எங்களின் உச்சரிப்பில் அதிக அக்கறை காட்டினார். ஒரு நாள் சொல்லித்தந்த மூன்று வசனங்கள்:

I am a boy

I am a girl

This is my book

-இதை ஒவ்வொருவராக எழுந்து சொல்ல வேண்டும். 'கலவன்' பாடசாலையில் கலவன் வகுப்பு. ஆதலால் ஆட்களுக்கேற்றபடி Boyயும், Girlலும் முதல் இரண்டு வசனங் களிலும் இடம் மாறும். கனகநாதனின் முறை வந்த போது, அவன் இவ்வசனங்களை, லீலாவதியைப் பார்த்துச் சொல்ல வேண்டி யிருந்தது. கனகநாதன் வண்டுறுட்டி போலக் கட்டைக் கறுத்தப் பொடியன். லீலாவதி நெடுத்த பெரிய பெட்டை. அவன் பயப்படாமல் எழுந்து நின்று உசாராகச் சொன்னான்.

I am a boy

You are my girl

-இதற்கு மேல் அவனைச் சொல்லவிட வில்லை. வாத்தியார், 'போதும்...! இருடா மடையா!' என்றவர்.

விழுந்து விழுந்து சிரிக்கத் தொடங்கினார். ஒரு சின்னப் பிழை விட்டால் கூட, கையிலுள்ள கொய்யாத்தடியால் வெளுத்து வாங்குகிற இராசலிங்க வாத்தியார் சிரிப்பதைக்கண்ட மகிழ்ச்சியிலேயே அன்று, எங்களில் பலர் பகடி என்னவென்று விளங்காவிட்டாலும் கூட, சேர்ந்து சிரித்தோம் என்று நினைக்கிறேன்.

பள்ளிக்கூடத்தில், இராசலிங்க வாத்தியார் இரண்டாவது பெரியவர். முதல் வாத்தியாருக்கு அடுத்தவராக இருந்தார்.

## மூன்று

என்றாலும் கூட, இராசலிங்க வாத்தி யாரின் அடிக்கொடுமை தாங்காமல் நாங்க ளெல்லோரும் ஒரு நாள் கூடி ஆலோசிக்க நேர்ந்தது. 'சிங்கமும், முயலும்' கதையில் காட்டு



மிருகங்கள் கூடி ஆலோசித்தது போல். ஆனால், நாங்கள் 'பெட்டை'களைச் சேர்க்க வில்லை. அவர்களை நம்பவும் முடியாது. அதோடு இராசலிங்க வாத்தியார் பெட்டை களுக்குக் கை நீட்டுவதில்லை.

பெரிய விக்கினிதான் ஒரு யோசனை சொன்னான். 'அவருக்கு ஒரு நல்ல வேலை செய்யலாம்...'

'சொல்லேண்டா?'

'கிட்ட வாங்கோ...'

தலைகளை நீட்டினோம்.

'என்ன?'

'ஒரு செய்வினை செய்யலாம்'

'செய்வினையோ...' எங்களுக்குப் பயம் முளைத்தது.

'பயப்படாதீங்கோடா...' என்ற பெரிய விக்கினி எல்லாம் விளக்கமாகச் சொன்னான்.

வாத்தியாருடைய காலடி மணலைக் கவனமாக அள்ளுவதுதான் முக்கியமான வேலை. அதை அள்ளி மண் சட்டியொன்றில் போட்டு வறுத்து, அந்த மணலைப் பாண் கிணறொன்றில் கொட்டிவிடவேண்டும். அவ்வளவுதான்! அடுத்த நாள் ஆள் பள்ளிக்கு வர இயலாது! கால் இரண்டு பாதமும் தோல் வெடிச்சுப் புண்ணாய்ப் போகும்!

மணலை இரகசியமாக வறுத்துக்கொண்டு வருவது தன்னால் முடியுமென்று பெரிய விக்கினி சொன்னான். பாண் கிணறு தேடத் தேவையில்லை. அது எங்களருகிலேயே இருக் கிறது. தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

எங்களுடைய வகுப்பு அப்போது நாலு. 'பள்ளி கூட்டுகிற' முறைதான். செவ்வாய்க் கிழமை. பெட்டைகள் தும்புக்கட்டோடு வகுப்புகளெல்லாம் கூட்டுவார்கள். பெடி யன்கள், விளக்குமாறும் கடகமுமாய் முற்றம், பக்கம், கோடி எல்லாம் கூட்டுவோம். பெரிய விக்கினியின் திட்டத்தின் பிறகு அடுத்த செவ்வாய்க்குக் காத்திருந்தோம்.

வழமைக்கு மாறாக, முற்றத்திலிருந்து கோடிவரை போகாமல் கோடி பக்கமெல்லாம் முடித்துவிட்டு, பிறகு வாசலடிக்கு வந்தோம். இராசலிங்க வாத்தியார் வருகிற நேரத்திற்குக் கொஞ்சம் முன்னால் முற்றம் கூட்டப்பட வேண்டும். பெரிய விக்கினி, ஒரு பெரிய கடுதாசித் துண்டைத் தன் கழுசான் பொக் கற்றுக்குள் ஆயத்தமாய் வைத்திருந்தான்.

நாங்கள் கூட்டிக் குவிக்கவும், வாத்தியார் பள்ளிக்கேற்றடியில் சைக்கிளில் இறங்கவும் சரியாயிருந்தது. பின்னி நெளிந்திருந்த சைக்கிள் சில்லு அடையாளத்தினருகில் செருப்புப் போடாத வாத்தியாரின் காலடிகள் பளிச்சென்று பதிந்திருந்தன. பெரிய விக்கினி, ஒன்றுக்கு இரண்டு பாதமாக அள்ளிக்கொண்டான். அள்ளின அடையாளம் தெரியாமல் இருக்க, தேவராயன் விளக்கு மாற்றை அதன் மேல் போட்டு இழுத்தபடி போனான்.

மத்தியானம் பள்ளிவிட்டதும், எல்லாப் பொடி பெட்டைகளும் கலையுமட்டும் பேய்க்காட்டிவிட்டு, பெரிய விக்கினி மண்சரை வைத்திருந்த இடத்திற்கு மெல்லப் போனோம்.

'போச்சடா!' என்று பெரிய விக்கினி கத்தினான். மதில் ஓட்டைக்குள் மறைவாய் அவன் ஒளித்து வைத்திருந்த சரையில் கடுதாசி மட்டும் கிழித்து ஓட்டையாகிக் கீழே கிடந்தது.

'சனியன் காகம்...!'

'மூதேசி...!'

வயிற்றெரிச்சலுடன் மீண்டும் அடுத்த செவ்வாயை எதிர்பார்க்கலானோம்.

## நான்கு

முதல் வாத்தியாருடைய அறை எப்போதும் பூட்டித் தானிருக்கும். அவர் அந்த அறைக்குள்ளிருப்பது வழக்கமில்லை. மண்டபத்து நடுவில் மேசையைப் போட்டு விட்டு, எல்லா வகுப்புகளும் - அல்லது எல்லா வகுப்புகளுக்கும் - கண்ணில் படுகிற மாதிரி இருந்துகொள்வார். அறைக்குள், ஒரு அலுமாரி. கால் உடைந்த பெரிய மேசை ஒன்று. ஒன்றின் மேலொன்றாய் கொஞ்ச வாங்குகள் இப்படிச் சில சாமான்களிருந்த. மேசையின் மேல் ஒரு பெரிய சரஸ்வதி படமும் இலேசாக மங்கிப்போன ஒரு பூகோள உருண்டையும், அலமாரியின் மேல் தேசப்பட மொன்றும், உலகப் படமொன்றும் சுருட்டப் பட்டுக் கிடக்கும். இவை தவிர, இன்னொரு கிழித்துப்போன இலங்கைப் படம், சுவரில் தொங்கிக் கொண்டு கிடந்தது. அலமாரிக்குள், சோக்கட்டிப் பெட்டிகள், டாப்பு இப்படி....

இவ்வளவற்றையும் பார்க்கிற சந்தர்ப்பம், அந்த அறையைத் துரப்பரவு செய்யச் சொல்லி எங்களில் கொஞ்சம் பேரை முதல் வாத்தியார் பிடித்து விட்டபோது கிடைத்தது.

பின்பக்கம் போனால், கக்கூஸ், ஒரு பக்கம் பெடியன். மற்றப்பக்கம் பெட்டைகள், பள்ளிக்கூடத்தின் பாதி தாண்ட முதலே தன் இருப்பை உணர்த்திக்கொள்ள சக்தி வாய்ந்த கக்கூஸ் அது.

அதற்கு முன்னால் பெரிய பெரிய இலைகளை விரித்தபடி பரந்து நிற்கும் ஈரப்பலா மரம். ஒவ்வொரு நாளும் காலையில் பள்ளிக்குப் போய் புத்தகங்களை வாங்கில் வைத்த கையோடு முதல் காரியமாய் இந்த ஈரப்பலாவடிக்கு ஓடிவந்து , விழுந்து கிடக்கிற பழுத்த இலைகளைப் பொறுக்கிக் காம்பை முறிப்போம். பென்சில் எழுத்தை 'அழிரப்பர்' அழிப்பது போல், இந்த இலைக்காம்பு சிலேட்டை அழிக்கப் பெரிதும் உதவியா யிருந்ததை யாரோ ஒரு முன்னோன் எங்க ளுக்காகக் கண்டுபிடித்து வைத்திருந்தான்.

ஈரப்பலாவில் இல்லாத நாட்களில் கிணற்றடிப் பள்ளத்து இடுக்கில் சணைத்துக் கொழுத்திருந்த 'தண்ணிப்புல்லு' எங்களுக்குக் பயன்பட்டது. இவ் விரண்டும் இருந்தும் கூட, அதிக சிறுவர்களின் சிலேட்டில் எச்சில் மணத்தது.

இந்த இலைக்காம்பு பொறுக்கிற

சண்டையால், மூன்றாம் வகுப்புக் கடைசித் தவணையில் ஒரு நாள் நான் இராசலிங்க வாத்தியாரிடம் அடி வாங்கினேன்.

ஐந்து

எங்கள் வீட்டிலிருந்து பள்ளிக்குப் போவதென்றால் ரோட்டுக்குப் போகத் தேவையில்லை. ஒழுங்கையாலேயே போய் விடலாம். மழைக்காலங்களில் வெள்ளம் ஓடி, வாரடிக்கிற வெள்ளை மணல் ஒழுங்கை, வளவுகளும், வடலிகளும் பனங்காணிகளும், பற்றைகளும் மாறி மாறி வரும். பற்றை களுக்குள், ஒன்றில் காண்டை நிற்கும். அல்லது கொய்யா நிற்கும், அல்லது இரண்டுமே நிற்கும். உள்ளே நுழைந்தால், தின்னுவதற்கு எப்போதும் ஏதாவது தரக்கூடிய பற்றைகள், கொய்யாப் பழமோ காண்டைப் பழமோ, இல்லாவிட்டால் கொய்யாக்குருத்து அல்லது காண்டைக்காய் இருக்கும். காண்டை நித்திய கல்யாணி. காய் இல்லாத காலமே கிடையாது.

இந்தக் கொய்யாவுக்கும், காண்டைக்கும் அப்பால் தேவராயன் இன்னொரு சாமானை எங்களுக்குக் காட்டித் தந்தான். பாக்குவெட்டிச் செடியின் குருத்தைப் பனங்குருத்தோடு சேர்த்துச் சப்பினால், வெற்றிலை மாதிரி வாய் சிவக்குமாம். இந்த ஆசையில் பாக்கு வெட்டிக் குருத்து கிள்ளப்போன கனகநாதனுக்கு ஒரு நாள் பிசுங்கான் ஓடு வெட்டிப் பெருகிய இரத்தம். இன்னமும் நினைவில் சிவப் பாயிருக்கிறது.

கனகநாதன் ஏழெட்டு நாள் பள்ளிக்குக் கள்ளம்போட்டது. பற்றிய விசாரணை, தேவராயன் இராசலிங்க வாத்தியாரிடம் பிரம்பம்பழம் தின்றதில் முடிவடைந்தது.

ஆறு

காலையில் ஒரு கும்பல் சேரும். என்னோடும் எனக்குக் கீழும் படிக்கிற அயலட்டைக் குஞ்சு குருமனெல்லாம் ஒன்றா கப் போவோம். இந்தப் பட்டாளத்திற்கு நான் பல நாட்கள் தலைவனாயிருந்திருக் கிறேன். நான் கனகநாதன், அவன் தம்பி தருமநாதன், தேவராயன், சிவலிங்கம், ராஜேஸ்வரி, செல்வராணி இப்படி....

போகப்போகப் பட்டாளம் பெருகும். படலைக்குப் படலை கூப்பிடுவதும் உண்டு.

இந்தத் தினசரிப் பயணத்தில் முக்கிய இடம்வகித்தது கதிரவேலர் வீட்டு நாய், சரியான கடியன். ஒவ்வொரு நாளும் எங்க ளைத் துரத்தி அதற்கு அலுப்பதில்லை. துரத்துவ தென்றால், வேலிக்கு அந்தப்பக்கம் தான். கதிரவேலர் நல்ல மனுஷன். புத்திக்காரனும், பெடியன் பள்ளிக்குப் போகிற நேரத்தில் தன்னுடைய வீமன் சொறி தேய்க்கும் என்று உணர்ந்தவர். நாயை உள்ளேவிட்டு படலை யைப் பூட்டித்தான் வைப்பார். வேலியின் கீழ் வரிச்சு நல்ல பதிவு. பொட்டுகளும் இல்லை. எனவே நாய்ப்பிள்ளை வெளியெ வரமுடியா மல், நாங்கள் ஒழுங்கையால் நடக்கும் போது தான் வளவுக்குள் குரைத்தபடி வேலி நீளம் ஓடிவரும் 'எப்படி என்றாலும், வெளியாலை வந்துதண்டா?' என்ற பயம் எங்களுக்கு நித்திய கண்டமாயிருந்தது.

நாய்க்குப் பயந்து நாங்கள் பேச்சை நிறுத்தி நடந்தாலும் எங்களோடு வருகிற பெட்டை களின் 'தையல் பெட்டிகள்',கிலுக்குக் கிலுக்' கென்று கிலுங்கி எங்கள் வரவை நாய்க்கு அறிவிக்கும். இந்தத் தையல்பெட்டி இல்லாத பெட்டையை நான் அப்போது கண்டதில்லை. ஒவ்வொருத்தியும் மூடி நெளிந்த, கிறுக்குப்பட்ட ரொஃபிப் பெட்டி ஒன்று வைத்திருப்பாள். அது இல்லாதவனிடம் வெறும் பவுடர் ரின்னாவது இருக்கும். இதற்குள் நூல்பந்து, அதில் குத்தப் பட்ட ஒன்றிரண்டு தையல் ஊசி, 'கிளிப்பர்'கள் ஆட்டுப்பிழுக்கைப் பென்சில் துண்டுகள்., அழிரப்பர், காப்புகள், முட்டை ஊசிகள், தடிதண்டுகள், காண்டைப் பழங்கள் என்று என்னென்னவோ போட்டு வைத்திருப்பார்கள்.

இவர்களுக்கு, தையல்பாடம் என்று தனியாக ஒரு பாடமிருந்தது. தையலம்மா டீச்சர் ஒரு கதிரையிலிருந்து ஏதோ தைக்க இதுகளும், சுத்தி நின்று குத்திப்பிடுங்குகிற வேலைகளில், நாங்கள், பெடியன் 'பன்ன வேலை' செய்வோம். தையல்லம்மாவுக்குப் பெயரே அதுதானோ வென்று, கனகாலம் ஐமிச்சப்பட்டேன். ஆனால், பிறகு 'தையலக்கா' என்று இன்னொரு டீச்சர் (கொஞ்சம் வயது குறைவு) வந்ததும் என் ஐயம் தீர்ந்தது.

இரண்டு மூன்று வருடம் படித்த பன்ன வேலையில், உருப்படியாக ஒரு பெட்டிகூட நான் இழைக்கவில்லை. 'மூலை திருப்புகிற' வேலை எனக்குப் பிடிபடாமலே இருந்தது. இந்தச் சிக்கல் பெரிய விக்கினிக்கும் இருந்தது. எனக்குத் தெரியும். மூன்றாம் வகுப்புக் கடைசியில் வகுப்பேற்றச் சோதனைக்குப் பெரிய விக்கினி மூலை திருப்ப முடியாமல் கனகபூசணி - எப்போதும் ஒரு சாம்பல் பூசணிக்காயை நினைவுபடுத்துகிறவள், கனகநாதனின்



தமக்கை - எங்களுக்கு ஒரு வகுப்பு மேலே படித்தவளிடம் இரகசியமாகக் கொடுத்து 'மூலை திருப்பிக் காட்ட'த் தெண்டித்தபோது, அநியாயமாய் இராசலிங்க வாத்தியாரிடம் அகப்பட்டுக் கொண்டான். சவிள் அடி விழுந்தது.

ஏழு

காலையில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வகுப்புக்குச் சங்கீதம் முதற்பாடமாயிருக்கும். தன்னைச் சூழ எல்லோரையும் வட்டமாக நிற்க வைத்துவிட்டு ஐயர் வாத்தியார், 'சரிகமபதநிச' சொல்லிக் கொடுப்பார். பிந்தி வருகிற வேளைகளில் பள்ளிக்குக் கால் கட்டை தள்ளி யிருக்கிற மதவடியில் வரும்போது இந்தச் சங்கீதம் காதில் விழும்.

## சாந்தன்

நேரம் பிந்தியதை ஞாபகப்படுத்தி, இராசலிங்கம் வாத்தியாரின் கொய்யாத் தடியை நினைவுக்குக் கொண்டு வருவதால், இந்த 'சரிகமபதநிச' இன்றும் கூட சிலவேளைகளில் எனக்கு ஒரு பயத்தையும், பதட்டத்தையும் தருகிறது.

கனகநாதன் இந்த விஷயத்தில் பல நாட்கள் இராசலிங்க வாத்தியாரின் வாடிக்கையாளனாக இருந்தான்.

தனது ஞானத்தை உணர்ந்தோ, அல்லது தன் சீடப்பிள்ளைகளின் ஞானத்தை அறிந்தோ, ஐயர் வாத்தியார் இந்தச் சங்கீதப் பாடத்தை, நல்ல காலமாக சரிகமபதநிசவுக்கு மேலே போகவிடவில்லை. நான் கூட இரண்டு வருஷம் அவரிடம் இந்தக் கலையைப் பயின்றேன். பள்ளிக்கு நேரத்துக்குப் போன நாட்களில்.

'சரிகமபதநிச'வில், 'நிச'வை இழுத்து இழுத்து 'நிசா..'வாக அழுத்தி, வாத்தியாரைப் பார்த்தபடி ரொம்ப உற்சாகமாக நாங்கள் பாடுவோம்.

எட்டு

அணில், ஆடு, இலை, ஈ, உறி, ஊசி, எலி, ஏணி, ஐயா, ஒட்டகம், ஓலை, ஔவை இதுகளெல்லாம் எப்படி இன்னமும் சிலையி லெழுத்தாக இருக்கின்றன?

அ, ஆ, படிப்பித்த தையலம்மாவின் முகமும், படம் என்ற பெயரில் புத்தகத்தில் கறுப்புக் கறுப்பாக அச்சுமை, அப்பிக்கிடந்த திட்டுக்களும் கூட, இன்னமும் இந்த அணில், ஆட்டுடனும், கொக்கு, சங்கு, பூச்சி, குஞ்சு டனும் நினைவுக்கு வருகின்றன. இதற்குப் பிறகு நெஞ்சில் முளைப்பது, 'கரடி, காட்டு மிருகம்...' என்று கரடி புராணம் முடிகிறபோது, இராசலிங்க வாத்தியார் திரும்பவும் நினைவுக்கு வருகிறார்.

'கந்தசாமி நல்ல சிறுவன்' என்று தொடங்கி பிள்ளைகளே, நீங்களும் கந்தசாமியைப் போல நல்ல பிள்ளைகளாயிருக்க வேண்டும்' என்று முடிகிற பாடத்தைப் படிப்பித்தவர், முதல் வாத்தியார். அவர் படிப்பதற்கென்றே எழுதப் பட்டது போல அமைந்திருந்த பாடம், அது 'பிள்ளையள்... பெடியள்' என்று ஒவ்வொரு தரமும் எங்களை அழைக்கும் முதல் வாத்தியார், ஒரு தட்வை அப்படி அழைத்தது இன்னமும் இந்தக் கந்தசாமியைப் போல் நினைவில் நிற்கிறது. அந்த அழைப்புடன் கந்தசாமியும் முதல் வாத்தியாரும் மட்டு மில்லை. இராசலிங்க வாத்தியாரும் பெரிய விக்கினியும் கூட, நினைவுக்கு வருகிறார்கள். எல்லோருக்குள்ளும் பெரிய விக்கினிதான் பெரியதாய் நினைவுக்கு வருகிறான்.

'பிள்ளையள்..' என்று முதல் வாத்தியார் எங்கள் வகுப்புக்கு வந்து எங்களைக் கூப்பிட்டார். அது அவர் பாடவேளை அல்ல. ஒரு வியாழக்கிழமை. நாங்கள் மண் அள்ளிய செவ்வாயை அடுத்து வந்த வியாழன். முதலாம் பாடம் தேவாரம் முடிந்து, 'அரஹர மஹா தேவா' சொல்லிவிட்டு, 'வேரூ இங்கிலீஷ்' ஐயும் இராசலிங்க வாத்தியாரையும் எதிர்பார்த்து நெஞ்சு படபடக்க, மூத்திரம் முட்ட, அந்தரித்துக் கொண்டிருந்த வேளை.

முதல் வாத்தியார் கூப்பிட்டதும், நிமிர்ந்து பார்த்தோம். இராசலிங்க வாத்தியாருக்குப் பதில் முதல் வாத்தியாரே இங்கிலீஷ் எடுப்பதில் எங்களுக்கு ரொம்ப விருப்பந்தான். ஆனால், அவர் பாடமெடுக்க வரவில்லை. சொன்னார்.

'சத்தம் போடாமை இருந்து படியுங்கோ. இன்றைக்கு இராசலிங்க வாத்தியார் வரமாட்டார்.'

எங்களுக்கு அவர் சொன்னது மண்டை யில் உறைக்கும் முன்னரே முதல் வாத்தியார் மிச்சத்தையும் சொன்னார். 'நேற்றுப் பின்னேரம் அவரைக் கார் தட்டிப்போட்டுது... தோட்ட வெளி ரோட்டிலை சைக்கிளில் போகையில் அவரை யாரோ காரில் அடிச்சுக் கையை முறிச்சுப் போட்டான்.. வாத்தியாரை இப்ப பெரிய ஆஸ்பத்திரியில் வைச்சிருக்காங்க'

முதல் வாத்தியார் சொல்லி முடிக்கும் முன்னரே யாரோ விக்கி விக்கி அழத் தொடங்கிய சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தோம்.

பெரிய விக்கினி.

**வாசகர்களுக்காக சாந்தனின் 'ஒரு பிடி மண்' தொகுப்பிலிருந்து இக்கதையைத் தருகிறோம். இக்கதை மல்லிகையில் 1976ம் ஆண்டு (நவம்பர்) வெளிவந்திருந்தது.**

**தவறுக்கு வருந்துகிறோம்**

சென்ற இதழில் வெளிவந்திருந்த அசதி சிறுகதை லண்டனில் வசிக்கும் விமல் குழந்தைவேல் என்பவரால் எழுதப்பட்டது. மலர்ச் செல்வனுடையதல்ல. தவறுதலாக இடம்பெற்ற இப்பெயர் மாற்றத்தினைத் திருத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

ஆ - ர்

## தடை முகாம்

காற்றின் இன்பக்
கைகள் தலைசீவ
வீதியோடு கொண்ட உறவில்
சைக்கிள் மெலிதாய்
சங்கீதம் இசைக்க
ஒரு பாடல்போல் ஓடிவந்த பயணம்
முறிந்தது காண்!

சைக்கிளில் வந்தவன்
சைக்கிளைத் தள்ளுகிறேன்!

அதிகாரம் மினுங்க
அதட்டும் பார்வையில்
எறும்பாய் சுருங்கி,
சோதனை தணிய
மற்றோர் ஜென்மத்தில்
மறு உயிர்ப்பெடுத்து,
நடந்து,
பின் த்ள்ளி
ஒற்றைக்காலால் எத்தி எத்தி
ஏறி அமர்ந்து,
சமநிலை வென்று
மீண்டும் ஒரு முறை
முதலில் இருந்து
ஒவ்வொரு மிதியாய்
உன்னி மிதித்து
உன்னி மிதித்து
இலேசாய் வேகம்
துளிர்த்து வருகையில்
தொலைவில் எதிர்ப்படும்
அடுத்த தடை முகாம்.....
என்று தான் போய்ச் சேருவதோ
என் முச்சந்திக்கு!

- வாசுதேவன்

எனது பத்திரிகை உலக அனுபவங்கள்

# ஜே. ஆரால் கடைசி வரை சொன்னதை நிறைவேற்ற முடியவில்லை!

"பீக்கிங் மணியம்" என்றால் யாழ்ப்பாணத்தில் இலங்கையில் பொதுவாக அரசியல் வட்டாரங்களிலும் பொலிஸ் வட்டாரங்களிலும் கூட நன்கு தெரியும். இடது சாரியிலும் இடது சாரியாகப் பெயர் பெற்றவர் கடைசிவரை சீனச்சார்பாக கம்யூனிஸ்டாகவே இருந்தவர். இடது சாரியாகப் போராட்டங்கள் பலவற்றுக்குத் தலைமை தாங்கி நடத்தியவர்.

யாழ்ப்பாணத்திற்கு அமெரிக்கத் தூதுவர் வருகை தந்திருந்த போது பலத்த பொலிஸ் பாதுகாப்பின் மத்தியிலும் கூட அமெரிக்காவிற்கு எதிராக கோஷங்கள் எழுப்பி கூழ் முட்டைகள் எறிந்தவர்களில் மணியம் முதன்மையானவர்.

" இழிசனர் வழக்கு" எதிர்ப்பிலும் கூழ் முட்டை வீசி எதிர்ப்புக் காட்டியவர்களில் மணியமும் ஒருவர். மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் ஆலயம் பிரவேசப் போராட்டத்தில் பெரியார் சுந்தரலிங்கத்திற்கு எதிராகப் போராடியவர்களில் மணியமும் செயற்பட்டார்.

சுண்ணாகத்தில் பொலிஸாரின் தடையை மீறி ஊர்வலத்திற்குத் தலைமை தாங்கி நடத்தி உதவிப் பொலிஸ் சுப்ரின்டென் லியனகே ஊர்வலத்தைத் தடுத்து நிறுத்திய போது கையிலிருந்த கொடிக் கம்பத்தினால் லியனகேயின் தாடையை அடித்து வீழ்த்தியவர் மணியம். (பொலிஸாரினால் நையப்புடைக்கப்பட்டு சிங்கள நாட்டு வைத்தியரிடம் வைத்தியம் செய்தது வேறு விஷயம் )

யாழ்ப்பாணத்தில் மேதின ஊர்வலம் நடத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது. தடையை மீறி ஊர்வலம் நடத்தப்படும் என்று மணியமும் அறிவித்தார். ஊர்வலம் நடக்காமல் தடுப்பதற்கு வடபகுதி பொலிஸ் அதிபராக இருந்த ஆர்.சுந்தரலிங்கம் சகல நடவடிக்கைகளையும் எடுத்திருந்தார். எனக்கும் மணியத்திற்குமுள்ள நட்பு எஸ்.பி. சுந்தரலிங்த்திற்குத் தெரியும். ஊர்வலம் பற்றி என்னுடன் அடிக்கடி தொடர்பு கொண்டு கேட்டுக் கொண்டிருந்தார். மணியம் மற்றொரு நண்பர் மூலம் தொடர்பு கொண்டு எஸ்.பி. என்ன சொல்கிறார் என அடிக்கடி கேட்டுக்கொண்டிருந்தார். ஊர்வலம் நடைபெறும் என்று தெரிவித்துக் கொண்டிருந்தார். ஆனால் இடத்தைச் சொல்லவில்லை. ஊர்வலம் எங்கே தொடங்கும் என்பதை அறிவதற்கு எஸ்.பி. என்னுடன் தொடர்பு கொண்டிருந்தார்.

அன்று மாலை ஐந்தரை மணிக்குச் சற்று முன்பதாக மணியத்தின் "கொண் டோடி" என்னுடன் தொடர்பு கொண்டு இன்னும் சில நிமிடங்களுக்குள் நீங்கள் வின்சன்ட் தியேட்டர் சந்திக்கு வர வேண்டும் என்று மணியம் சொல்லச் சொன்னார் என்று தெரிவித்தார்.

வின்சன்ட் தியேட்டர் சந்திக்குப் புறப்பட்டுச் சென்றேன். நீளக்கம்பத்தில் செங்கொடியைக் கையில் ஏந்தியபடி மணியம் தலைமை தாங்கிச் செல்ல பின்னர் தோழர்கள் ஓடியோடித் தொடர இரண்டு தியேட்டர்களிலுமிருந்து வெளியே வந்த தோழர்கள் ஓடி ஓடி மணியத்தின் பின்னே செல்லும் தோழர்களுடன் இணைந்து கொண்டார்கள். ஊர்வலம் வீதிகளில் வளைந்து நெளிந்து கொண்டிருக்க பொலிஸார் ஊர்வலத்தைத் தடுப்பதற்காக ஓடிச் செல்வர். உடனே குறுக்கு வீதிகளில் மணியம் நுழைவார். தோழர்கள் தொடர வந்த இப்படி சுமார் ஒரு மணி நேரத்திற்கு மேல் பொலிஸாருக்கு மணியம் போக்குக் காட்டி தடையை மீறி ஊர்வலம் நடத்தினர்.

இறுதியில் மணியமும் மற்றும் சிலரும் ஊர்வலத்தை நிறுத்தினர். ஊர்வலத்தினர் மீது தாக்குதல் நடத்தக் கூடாதென்று எஸ்.பி. சுந்தரலிங்கம் கண்டிப்பான உத்தரவு போட்டிருந்தார்.

மணியத்தின் தலைமைக்கு இன்னொரு சம்பவம். ஜே.ஆர். ஜெயவர்த்தனா யாழ்ப்பாணத்துக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ்ப்பாண கிளையின் அழைப்பின் மீது வந்திருந்தனர். யாழ்ப்பாணக் கிளையின் அமைப்பாளராக இருந்த எம்.இராஜேந்திரம் தமது கட்சி வேலைகள் அனைத்தையும் பாம் கோர்ட் ஹோட்டலில் காலையில் வந்து நண்பர்களைத் தொலைபேசியில் அழைத்துப் பேசி மதியம் உணவருந்திய பின் அல்லது அருந்தாமலேயே முடித்துவிடுவார்.

ஜே.ஆருக்கு யாழ்ப்பாணத்தில் வரவேற்பு ஏற்பாடும் இப்படித்தான் திட்டமிடப்பட்டிருந்தது. யாழ்.முற்றவெளி மைதானத்தில் பெரிய மேடை அமைக்கப்பட்டு, பெரிய சிகரமும் கட்டப்பட்டிருந்தது. மின்சார பல்புகளும் பூட்டப்பட்டு ஜோராக இருந்தது. கூட்டம் தொடங்குவதற்கு முன் பலரும் பல கட்சிகளைச் சேர்ந்தவர்களும் வழமை போல் முற்றவெளிக்கு வந்து பார்த்துச் சென்றனர். யாழ் எம்.பியான (தமிழ் அரசுக் கட்சி) வி.தர்மலிங்கமும் எங்கோ போகிற வழியில் முற்றவெளிக்கு வந்து நண்பர்கள் சிலருடன் பேசிவிட்டுச் சென்றார்.

மாலையில் ஜே.ஆர். ஊர்வலமாக அழைத்துவரப்பட்டார். மேடையில் வந்து ஏறியதும் யாழ்ப்பாண அமைப்பாளர் ராஜேந்திரமும் மற்றும் கிளைகளைச் சேர்ந்தவர்களுக்கும் ஜே.ஆரின் கண்களில்

> மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் ஆலயம் பிரவேசப் போராட்டத்தில் பெரியார் சுந்தரலிங்கத்திற்கு எதிராகப் போராடியவர்களில் மணியமும் செயற்பட்டார். சுண்ணாகத்தில் பொலிஸாரின் தடையை மீறி ஊர்வலத்திற்குத் தலைமை தாங்கி நடத்தி உதவிப் பொலிஸ் சுப்ரின்டென்லியனகே ஊர்வலத்தைத் தடுத்து நிறுத்திய போது கையிலிருந்த கொடிக் கம்பத்தினால் லியனகேயின் தாடையை அடித்து வீழ்த்தியவர் மணியம்.

படும் படியாக மேடையில் ஏறி அமர்ந்து கொண்டனர். பலரும் ஜே.ஆரின் சாணக்கியம் பற்றி சிலாகித்துப் பேசி விட்டு அமர்ந்தனர்.


ஜே.ஆர் . பேசத்தொடங்கினார். எஸ்.ஜே.வி.செல்வநாயகத்துடன் ஒரு முழு நாள் இருந்தேன். அவருடன் சென்றேன். இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு தடவை கூட அவர் என்னுடன் தமிழரசு பற்றியோ சமஷ்டி பற்றியோ பேசவில்லை என்று ஜே.ஆர். சொன்னார். இதைச் சொன்னது தான் தாமதம் "தந்தையைப் பற்றி பேசாதே, தந்தை செல்வாவைப் பற்றி பேசாதே" என்று ஒரு குரல் ஒலித்தது. இது மணியத்தின் குரல். இந்தக் குரலைத் தொடர்ந்து "தந்தையின் பெயரைச் சொல்லாதே, வாயை மூடு" பல குரல்கள் ஒலித்தன. வாயை மூடடா என்றும் பல குரல்கள் ஒலித்தன. தொடர்ந்து செருப்புக்கள் மேடையை நோக்கிப் பறந்தன. மேடையின் முன்பாக கட்டப்பட்டிருந்த சிகரம் ஆடத்தொடங்கியது. மேடையில் ஜே.ஆரின். கண் பார்வைக்காக காத்து அமர்ந்திருந்த உள்ளூர் ஐக்கிய தேசியக் கட்சிப் பிரமுகர்கள் சிலர் எழுந்து நின்று கோஷங்கள் வந்த திசையில் கையைக் காட்டி அமைதி அமைதி என்று கூச்சலிட்டனர். பயனில்லை. மற்றையவர்கள் மெதுவாக மேடையிலிருந்து இறங்கி குழுவினர் ராஜேந்திரமும், மற்றும் இரண்டொருவரும் ஜே.ஆருடன் கூட வந்தவர்களும் எழுந்து ஜே.ஆரைச் சேர்ந்து நின்றனர். பேச்சை நிறுத்தி கூட்டத்தை முடித்து வைப்போம் என்று சிலர் ஜே.ஆரிடம் யோசனை சொன்னார்கள். முற்றவெளியில் திரண்டிருந்த கூட்டம் கலையத் தொடங்கியது. மேடைக்குச் சற்று தூரத்தில் நின்றிருந்த நான் மெதுவாக மேடையையும் கூட்டத்தையும் நோட்டம் விட்டபடி காங்கேசன்துறை விதிக்கு முற்ற வெளியிலிருந்து சேர்ந்தேன்.

ஜே.ஆர். தமது பேச்சை தொடர முடியாத நிலையில் தாம் மீண்டும் யாழ்ப்பாணம் வந்து கூட்டத்தை தொடர்ந்து நடத்தி தமது பேச்சை முடித்து வைப்பதாக உறுதியளித்தார்.

சிகரம் அறுந்து விழுகிறது. மின்சார அலங்காரங்கள் சிதறின. மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது. மேடையிலும் முற்றவெளியிலும் இருள் சூழ்ந்தது. நான் "ஈழநாடு" அலுவலகம் நோக்கி நடந்தேன்.

இரவு பதினொரு மணியிருக்கும் அலுவலகத்திலிருந்த என்னிடம் என்.கே.சோமசுந்தரம் (முன்னாள் கல்கமுவ கிராம சபைத் தலைவர் ) மற்றும் ஒருவருடன் வந்து ஜே.ஆர்.உங்களை அவசரமாகச் சந்திக்க வேண்டுமாம் வாருங்கள் என்று அவசரப்படுத்தினார். வேறு ஒருவரை அனுப்புகிறேன் என்று சொன்னதற்கும் விடவில்லை. இழுத்துக் கொண்டு கோட்டை மன்னர் மாளிகைக்கு கூட்டிச் சென்றார்கள். அங்கு ஐ.தே.க. பிரமுகர்கள் உள்ளூர் வெளியூர் உட்பட பெரும்பாலும் அனைவரும் கவலை தீரத் தாகசாந்தி செய்து கொண்டிருந்தார்கள். ஜே.ஆர்.சாய்மானைக் கதிரையில் சாய்ந்திருந்தார். என்னை அவரிடம் அழைத்துச் சென்ற ராஜேந்திரமும் மற்றையவர்களும் எங்களைப் பேச விடாமல் திரும்பிக் கூட்டி வந்து ஒரு அறிக்கையின் பிரதியை கையில் திணித்துக் காருக்குக் கூட்டி வந்தனர். ஒரு கிளாஸ் பானத்தையும் ராஜேந்திரம் நீட்டினார். நான் ஏற்கனவே பானம் அருந்தியிருந்தேன் வேண்டாம் என்று மறுத்து விட்டு அலுவலகம் திரும்பினேன்.

மீண்டும் யாழ்ப்பாணம் வந்து பொதுக் கூட்டத்தில் பேசிவிட்ட குறையை முடித்து வைப்பதாக ஜே.ஆர் சொல்லியிருந்தார் என்று சொன்னேன் அல்லவா? ஜே.ஆரால் கடைசி வரை இதை நிறைவேற்ற முடியவில்லை.




○

## பொறுப்பான............

இதைவிட யாழ்.சிவில் அதிகாரிகளுக்கு புலிகளிடமிருந்து அனுப்பி வைக்கப்படும் கடிதங்களை நிமல்ராஜனே உறுதிப்படுத்துவார். யாழ்.குருநகரில் இடம் பெற்ற மோதல் சம்பவமொன்றில் படுகாயமடைந்து யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த பெண்புலி உறுப்பினரை சயனைட் குடிக்க உத்தரவிடுமாறு அப்போதைய யாழ்.மாவட்டப் புலிகளின் பொறுப்பாளர் துாயவன் நிமல்ராஜனுக்கே கடிதம் எழுதியிருந்தார்.

இதைவிட அண்மையில் வேட்பு மனுத் தாக்கல் செய்யப்பட்ட சில தினங்களில் கொக்குவில் சோதனைச்சாவடியில் வைத்துப் பிடிபட்டு படையினரிடமிருந்து தப்பியோடிய புலிகள் இயக்க உறுப்பினரிடமிருந்து கைப்பற்றப்பட்ட பையில் தமிழ்க் கட்சி முக்கியஸ்தர்களின் பல படங்கள் இருந்துள்ளன. இதுவும் நிமல்ராஜன் மூலமாவவே புலிகளுக்கு அனுப்பப்பட்டது. பொலிஸ் விசாரணையின் போது ராவய பத்திரிகைக்கு அனுப்பப்பட்டதாகக் கூறித்தப்பி விட்டார்."

இவை அமைச்சர் டக்ளஸின் வார்த்தைகள். இவற்றினூடாக ஒரு வாசகர் என்ன முடிவுக்கு வர வேண்டுமென அவர் எண்ணுகிறார்.

1.நிமல்ராஜன் புலிகளின் அரசியலைக் கொண்டிருந்தவர்.

2.புலிகளுக்கு பல வகையிலும் உதவி புரியும் ஒரு ஏஜென்டாகச் செயற்பட்டவர்.

3. ஆக,அவர் கொல்லப்பட்டதற்கு ஒரு காரணம் இருக்கிறது. அவர் கொல்லப்பட்டது தவறு அல்ல.

இவையா அந்த முடிவுகள்.

இதில் முதலாவது விடயம் நிமல் ராஜனின் அரசியலும் புலிகளின் அரசியலும் பற்றியது. தமிழ்மக்கள் மீதான ஒடுக்குமுறைகள் குறித்து அக்கறைப்படுகிற, அவர்களுடைய ஜனநாயக உரிமைகள் பேணப்பட வேண்டும் என்று அக்கறைப்படுகிற ஒரு ஊடகவியலாளராக நிமல்ராஜன் செயற்பட்டிருக்கிறார். இது தான் அவருடைய அரசியல். இந்த அரசியலைக் கொண்டிருப்பதற்காக அவரைப் புலிகளின் அரசியலைக் கொண்டிருப்பவர் என்று கூறிவிட முடியுமா? அதற்கு நிமல்ராஜன் என்ன செய்ய முடியும்? பொதுவாகவே தமிழ் மக்களுடைய அரசியலும் அதுவாகத்தானிருக்கிறது. அதற்காக ஒவ்வொரு தமிழர்களையும் புலிகள் என்று கூறிவிட முடியுமா?

மறுபுறத்தில் தமிழ் மக்கள் மீதான அரசியல் ஒடுக்குமுறை குறித்துக் குரல் எழுப்பினால் அது குமார் பொன்னம்பலமாக இருந்தாலென்ன நிமல்ராஜனாக இருந்தாலென்ன இது தான் நடக்கும் என்பதா சேதி?

இரண்டாவது குற்றச்சாட்டு அவர் புலி ஏஜென்டாகச் செயற்பட்டார் என்பது. அதற்காக ஏராளமான குற்றச்சாட்டுக்களை டக்ளஸ் அள்ளி வீசியிருக்கிறார். இவற்றைக் குற்றச்சாட்டுக்கள் என்று கூறுவதை விட அவதுாறுகள் என்று கூறுவது தான் பொருந்தும். இந்த அவதுாறுகளுக்குப் பதிலளிக்க நிமல்ராஜன் இன்று உயிருடன் இல்லை. இக்குற்றச்சாட்டுக்களுள் ஒன்றுடன் ராவய பத்திரிகை நிறுவனம் தொடர்புபடுகிறது.


அது பற்றி ராவய நிறுவனம் என்ன சொல்கிறது? 'தேர்தல் காலத்தின் போது தேர்தலில் குதித்திருக்கும் முக்கியமான வேட்பாளர்கள் பற்றிய விபரங்களை வெளியிடத் தீர்மானித்து நிமல்ராஜனைத் தொடர்பு கொண்டோம். அவர் சிலரது புகைப்படங்களையும் தகவல்கையும் எடுத்து அச்சமயத்தில் யாழ். சென்றிருந்த திவயின பத்திரிகையாளரிடம் கொடுத்திருந்தா ராவயவிடம் ஒப்படைக்கும்படி. இந்தத் திவயின பத்திரிகையாளர் தகவல் திரட்டுவதற்காகப் பல படை முகாம்களுக்குப் போய் வந்திருக்கிறார். அவ்வாறு போன முகாமொன்றில் அவர் இந்தப் படங்களைத் தவற விட்டிருக்கிறார். அதனைக் கண்டெடுத்த படையினர், இப்போது கொக்குவிலில் பிடிபட்டுத் தப்பியோடிய புலியிடமிருந்து

⇨19

~ விவேகி

# ஒரு உடலுக்கு இருவர் உரிமை கொண்டாடிய பரிதாபம்!

பண்டாரவளை பிந்துனுவெவ மறுவாழ்வு முகாமில் அக்டோபர் 25ம் திகதி நிகழ்த்தப்பட்ட கொடூரமான தாக்குதலில் உயிரிழந்த தமிழ் இளைஞர்களின் சடலங்கள் சில பெற்றோராலேயே அடையாளம் காணமுடியாத அளவுக்குச் சிதைக்கப்பட்டிருன்றன. இதன் விளைவில் திருகோணமலையைச் சேர்ந்த இரண்டு பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் உடல்களைக் கூட சரிவர இனங்காட்ட முடியாத நிலையில் ஒரே உடலுக்கு இரு சாராரும் உரிமை கொண்டாடிய சிக்கலான நிலைமை தோன்றியுள்ளது.



சுந்தரலிங்கம் சிவசங்கர்

கனகசிங்கம் பிரபாகரன் அலஸ் தோட்டம் அகதி முகாமைச் சேர்ந்தவர். 1983 ஆனி 18ம் திகதி பிறந்த இவர் குடும்பத்தில் மூத்த பிள்ளை. இவருக்குக் கீழே நான்கு சகோதரர்கள் இருக்கின்றார்கள். பிரபாகரனின் தந்தை கனகசிங்கம் ஒரு கடற்தொழிலாளி.

பிரபாகரனின் தாயார் கூறுகையில், நாங்கள் வீரநகரைச் சேர்ந்தவர்கள். எங்கள் வீடு சிங்களவர் ஒருவரால் ஆக்கிரமிக்கப்பட்டு இருப்பதால் தொடர்ந்து அகதி முகாமிலேயே தங்கியிருக்கின்றோம். 93ம் ஆண்டு தொடக்கம் இந்த முகாமிலேயே வசித்து வருகிறோம். நான் வெளிநாட்டுக்குத் தொழில் நிமித்தம் சென்ற வேளையில் கடந்த மே மாதம் என் மகன் இயக்கத்துக்குச் சென்றிருக்கிறார். நான் நாடு திரும்பிய பிறகு ஆகஸ்ட் 19ம் திகதி திருப்பி வந்தார். ஏற்கெனவே இவர் பற்றி நாங்கள் பொலிஸில் புகார் செய்திருந்தமையால் வந்தவுடன் உப்புவெளிப் பொலிஸில் ஒப்படைத்தேன். அங்கும், புலனாய்வுப் பிரிவிலும் சில நாட்கள் வைத்திருந்துவிட்டு பண்டாரவளை முகாமுக்கு அனுப்பி விட்டார்கள்.

அக்டோபர் 18ம் திகதி முகாமுக்குச் சென்றேன். 20ம் திகதிவரை அங்கு தங்கியிருந்து மகனைப் பார்த்தேன். அதன் பிறகு திருகோணமலை திரும்பினோம். பின்னர் வானொலிச் செய்தி மூலம் பண்டாரவளை முகாமில் அசம்பாவிதம் நடாந்ததைக் கேள்விப்பட்டு ஐ.சி.ஆர்.சி.யிடம் போனேன். அவர்கள் விசாரித்துவிட்டு எனது மகன் காயங்களுடன் இருக்கிறார் என்றார்கள். நானும் நம்பி ஓடிவந்தேன். ஆனால் பின்னர் எனது மகனும் இறந்து விட்டார் என்ற செய்தி கிடைத்தது. கொழும்புக்கு வருமாறு அழைத்தார்கள், போனேன். வெட்டிக் கொத்தி கருக்கப்பட்ட நான்கு சடலங்களைக் காட்டினார்கள். அதில் என் மகன் இல்லை. திருப்பி வந்தேன்.

அதன் பிறகு மேலும் பல உடல்கள் இருப்பதாக எனக்குத் தகவல் கிடைத்ததையடுத்து திரும்பவும் கொழும்பு சென்றேன். எரிக்கப்பட்ட நிலையில் உருக்குலைந்து போயிருந்த என் மகன் சடலத்தைக் காட்டினேன். ஆனால் வேறொருவரும் நான் காட்டிய உடலையே தனது மகன் என அடையாளம் காட்டப்போய் நிலைமை சிக்கலாகிவிட்டது" என்று கவலையுடன் தெரிவித்தார்.

மற்றைய இளைஞர் சுந்தரலிங்கம் சிவசங்கர். இவர் துவரங்காடு என்ற இடத்தையடுத்துள்ள புதுக்குடியிருப்பு என்ற இடத்தைச் சேர்ந்தவர். 1983 ஏப்ரல் 23ந் திகதி பிறந்தார். இவருக்கு ஒரு அக்கா மாத்திரம் உண்டு. அவர் வாய்பேச முடியாதவர்.


தனது மகனுக்கு நேர்ந்த கதி பற்றி தந்தையார் செல்லையா சுந்தரலிங்கம் கூறுகையில், கடந்த வருடம் மே மாதம் மூதூருக்கு வெள்ளாமை வெட்டுவதற்காக போனார். பின்னர் போராளிகள் அமைப்புடன் இணைந்து விட்டதாக அறிந்தேன்.

அதன் பிறகு நான் அவரைச் சந்திக்கவில்லை. பின்னர் ஜூலை மாதம் அவர் பொலிஸில் பிடிபட்டிருப்பதாக அறிந்து அங்கு போய்ப் பார்த்தேன். ஐ.சி.ஆர்.சி.யும் வந்து பார்வையிட்டுச் சென்றது.

பிறகு மகனை பண்டாரவளை முகாமுக்கு மாற்றிவிட்டார்கள். அங்கிருந்து அவர் ஆயிரம் ரூபா அனுப்பும்படி இரண்டுதடவை கடிதங்கள் போட்டார். கஷ்டத்தின் காரணமாக அனுப்ப முடியாது போய்விட்டது. பின்னர் றேடியோ மூலம் மகனுக்கு நேர்ந்த கதியை அறிந்தேன்.

ஐ.சி.ஆர்.சி.யின் உதவியுடன் கொழும்பு அழைத்துச் செல்லப்பட்டேன். அங்கு கருகிய உடல்கள் எனக்குக் காட்டப்பட்டன. அதில் எனது மகனை அடையாளம் கண்டேன். அது கருகிய நிலையில் இருந்த போதிலும் முன்னம் பற்களையும் கால் விரல்களின் அளவையும் கொண்டு எனது மகனைக் கண்டு பிடிக்க முடிந்தது. ஆனால், அதற்கு வேறொருவரும் உரிமை கொண்டாடியதால் எங்கள் இருவருக்கும் சடலம் கிடைக்காத நிலை தோன்றியிருக்கிறது என்று தெரிவித்தார்.

இரண்டு வீடுகளிலும் பந்தல்கள் போடப்பட்டிருந்தன. துக்கம் விசாரிக்கப் பலர் வந்து போய்க் கொண்டிருந்தார்கள். தங்கள் பிள்ளைகளின் உடல்கள் தங்களுக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கை தளர்ந்த நிலை அவர்களிடம் காணப்படுகிறது. தமிழன் கதி இதுதானா என்று கேட்பதைத் தவிர வேறு என்னதான் செய்ய முடிகிறது எம்மால்!



கனகலிங்கம் பிரபாகரன்

---

~ திரிபுரன்

# யாழ் தேர்தல் முடிவுகளை எதிர்த்து த.வி.கூ. வேட்பாளர் வழக்கு!

நடந்து முடிந்த யாழ்ப்பாண மாவட்டப் பாராளுமன்றப் பொதுத் தேர்தல் முடிவுகள் சந்பந்தமாக மேன்முறையீட்டு நீதிமன்றில் தேர்தல் ஆட்சேபனை மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ்ப்பாண மாவட்ட வேட்பாளர்களில் ஒருவரான சண்முகராசா அரவிந்தன் சார்பில் சட்டத்தரணி குமுதினி குமாரசிங்கம் நவம்பர் 2ம் திகதி இவ்வழக்கைத் தாக்கல் செய்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் நடந்து முடிந்த தேர்தலில் ஈ.பி.டி.பி சார்பில் நடராசா மாதவராசா, கந்தையா சங்கரன், டக்ளஸ் தேவானந்தா, வேலும்மயிலும் குலேந்திரன் ஆகிய நால்வரும் தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த வி.ஆனந்தசங்கரி, மாவை சேனாதிராசா, சிவமகராசா ஆகிய மூவரும், ஐக்கிய தேசியக்கட்சி சார்பில் மகேஸ்வரன் என்பவரும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சார்பில் அப்பாத்துரை விநாயகமூர்த்தியும் பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவாகியுள்ளனர்.

இவ்வழக்கின் பிரதிவாதிகளாக பத்துப்பேர் குறிப்பிடப்பட்டுள்ளனர். 1வது 2வது 3வது 4வது பிரதிவாதிகளாக ஈ.பி.டி.பி. பாராளுமன்ற உறுப்பினர்களும், 5,6,7வது பிரதிவாதிகளாக தமிழர் விடுதலைக் கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்களும், ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் 8வது பிரதிவாதியாகவும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் உறுப்பினர் 9வது பிரதிவாதியாகவும், தேர்தல் ஆணையாளர் பத்தாவது பிரதிவாதியாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளார். இவ் வழக்குக்கான வைப்புத் தொகையாக ரூபா இருபதாயிரம் செலுத்தப்பட்டுள்ளது.

இலங்கைப் பாராளுமன்றத் தேர்தல் சட்டத்தின் 34, 43, 47-1 ஆகிய பிரிவுகளும் 92-1அ, 92-1ஆ ஆகிய பிரிவுகளும் இவ் வழக்குத் தாக்கல் செய்வதற்கு உதவியாக எடுத்தாளப்பட்டிருக்கின்றன.

34ம் பிரிவின் ஐந்து பகுதிகளும் வாக்கெடுப்பு முகவர்களை நியமிப்பது பற்றிய விபரங்களைக் கொண்டுள்ளன. 43ம் பிரிவின் மூன்று பகுதிகளும் வெளிப்படுத்தல்களைச் செய்யுமாறு வாக்காளரைத் தேவைப்படுத்துவதற்கான அதிகாரத்தையும், 47-1 வாக்கெடுப்பு முடிந்தவுடன் கையாளப்பட வேண்டிய நடைமுறைகளையும் விளக்குகின்றன. 92-1 அ, 92-1ஆ பிரிவுகள் தேர்தல் மனுமீது தேர்தல் வலிதாக்கல் சம்பந்தமான விபரங்களைக் கொண்டுள்ளன.

மனுதாரர் மேன்முறையீட்டு நீதிமன்றில் யாழ்ப்பாண மாவட்டத் தேர்தல் வெற்றும் வறிதும் ஆக்கப்பட வேண்டும் என்பதற்குப் பல காரணங்களை முன்வைத்திருக்கிறார். அவற்றுள் பிரதான காரணமாக 4100 வாக்குகள் மட்டுமே கொண்ட ஊர்காவற்துறையில், தமிழர் விடுதலைக் கூட்டணி 1327 வாக்குகள் பெற்றதையும். ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் 12312 வாக்குகள் பெற்றதையும், அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் 820 வாக்குகள் பெற்றதையும், ஐக்கிய தேசியக் கட்சி 166 வாக்குகள் பெற்றதையும் சுட்டிக் காட்டியிருக்கிறார். அத்துடன் அரச அனுமதியுடன் ஈ.பி.டி.பி.யினர் ஆயுதங்களுடன் திரிந்து சுதந்திரமான தேர்தலுக்கு இடையூறு செய்தமையும் இதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

**4100 வாக்குகள் மட்டுமே கொண்ட ஊர்காவற்துறையில், தமிழர் விடுதலைக் கூட்டணி 1327 வாக்குகள் பெற்றதையும். ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் 12312 வாக்குகள் பெற்றதையும், அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் 820 வாக்குகள் பெற்றதையும், ஐக்கிய தேசியக் கட்சி 166 வாக்குகள் பெற்றதையும் சுட்டிக் காட்டியிருக்கிறார்.**

இதற்கு அனுசரணையாக, தேர்தலுக்கு முன் தமிழர் விடுதலைக் கூட்டணி உபதலைவர் வி.ஆனந்த சங்கரி தேர்தல் ஆணையாளருக்கு எழுதிய கடிதப் பிரதியும் இணைக்கப்பட்டிருப்பதோடு, ஊர்காவற்றுறைக்குப் பிரச்சாரத்துக்காகச் சென்ற த.வி.கூட்டணியைச் சேர்ந்த ரவிராஜ், சிவமகராசா ஆகியோர் பயமுறுத்தப்பட்டும் மேயர் அலுவலகத்தில் ரவிராஜ் மிரட்டப்பட்டது சம்பந்தமாக ஒக்டோபர் 03ம்திகதி அன்று யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டமை தொடர்பான தகவல்களும் இதில் குறிப்பிட்டிருக்கின்றன.

இந்த மனுவை ஏற்று விசாரணை நடத்துவதா இல்லையா என்பது பற்றி நவம்பர் 6, 9 அல்லது 10ம் திகதிகளில் ஒரு தினத்தில் மேன்முறையிட்டு நீதிமன்றம் முடிவெடுக்கவிருக்கிறது. இக்கட்டுரை வெளியாகும் சமயத்தில் இதுபற்றிய முடிவு எடுக்கப்பட்டிருக்கும்.

மேன்முறையீட்டு நீதிமன்றம் மனுவை விசாரணைக்கு எடுப்பதற்காக ஒப்புக் கொண்டால் மனுதாரர் மனுவில் காட்டிய குற்றச்சாட்டுக்களை தகுந்த ஆதாரங்களுடன் நிருபிக்குமிடத்து யாழ்ப்பாண மாவட்டத் 'தேர்தல் முடிவுகளை ரத்துச் செய்யவோ, ஊர்காவற்துறை வாக்குகளை மட்டும் ரத்துச் செய்து ஏனைய பகுதி வாக்குகளின் அடிப்படையில் பாராளுமன்ற உறுப்பினர் தெரிவு மேற்கொள்ளவோ, ஒன்று தொடக்கம் நான்குவரை குறிப்பிடப்பட்ட பிரதிவாதிகளான ஈ.பி.டி.பி. பாராளுமன்ற உறுப்பினர்களின் தெரிவை வெற்றும் வறிதும் ஆக்கவோ நீதிமன்றம் விளையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இவற்றுள் ஏதாவது ஒன்று நிகழுமிடத்து ஈ.பி.டி.பி.க்கு மாத்திரமல்ல பொதுஜன முன்னணியின் அரச அதிகாரத்துக்கும் 'பிராணன் விடு' பிரச்சினையாகவே இருக்கப் போகிறது என்பது அப்பட்டமான உண்மை. நீதி தேவதையின் வாக்கில்தான் இந்த முடிவு தங்கியுள்ளது.

# ஊசிக்குறிப்பு

~ ஆர்ஸ்

## ஒரு பிடி மண்: காட்சிகளாய் நகர்ந்து செல்லும் கதை

1960களில் எழுதத் தொடங்கி இன்னும் எழுதிக் கொண்டிருக்கும் ஒரு படைப்பாளி சாந்தன். இவர் ஈழத்து, தமிழ் நாட்டு இலக்கிய உலகில் நன்கு அறியப்பட்டவர். தற்போது யாழ் தொழில்நுட்பக் கல்லூரியில் விரிவுரையாற்றி வரும் சாந்தன் சொந்த மண்ணை விட்டுப்பிரிய மனமின்றி யுத்த சூழ்நிலைக்குள்ளும் அதனுடன் வாழும் மனிதர்.

இவரது இன்னொரு சிறுகதைத் தொகுதி 1999ம் ஆண்டு வெளியிடப்பட்டது. ஒரு பிடி மண் எனும் இத்தொகுதியில் கடந்த 25 வருடங்களில் (1975- 1994) அவர் எழுதிய சிறுகதைகள் தொகுக்கப்பட்டுள்ளன.

ருஸ்ய, சிங்கள, ஆங்கில, மொழிகளில் இவரது படைப்புகள் மொழிபெயர்க்கப்பட்டன என்றும் இவரது படைப்புகள் சர்வதேச தரம் வாய்ந்தவை என்றும் சொல்லப்படுகின்றது.

சர்வதேச தரம், ஆங்கில மொழிப் பரிச்சயம் என்பவற்றுக்கு அப்பால் அவரது படைப்புகள் நோக்கப்படுவது சிறந்தது. ஏனெனில் ஒரு நல்ல படைப்புக்கு இவை அல்ல அளவீடுகள். சர்வதேச தரம் இல்லை என்று புறக்கணிக்கப்பட்ட படைப்புகள் நல்ல படைப்புகள் இல்லை என்று ஒருபோதும் ஆகிவிடாது.

> ஒரு பிடி மண்
> சிறுகதைத் தொகுதி
>
> ஆசிரியர்
> சாந்தன்
>
> வெளியீடு:
> நர்மதா பதிப்பகம்
> 16/7. ராஜாபாதர் தெரு
> தி. நகர். சென்னை 600 067
> இந்தியா
>
> முதற்பதிப்பு: ஜுன் 1999

இன்றைய சர்வதேசத் தரம் என்பது அவை கொள்ளும் அரசியலிலும் தங்கியுள்ளது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இதற்கு நல்ல உதாரணம் அருந்ததி ராயின் "சில நினைவுகளும் கடவுளும்" என்ற நாவல், தஸ்லிமா நஸ்ரீனின் "வெட்கம்" என்பவற்றைச் சொல்லலாம். இவை யாவும் சிறந்த, மிகச் சிறந்த படைப்புகள் என்பதற்கு அப்பால், அதனது, அது சொல்லும் அரசியலுக்காகவே பெரிதும் நோக்கப்பட்டது. பிரபல்யமானது. சர்ச்சைக்கு உள்ளாக்கப்பட்டது. பரிசிற்குரிய படைப்பானது.

எனவே, அப்படைப்பு வாழும் சூழலுடனும் அதன் இலக்கியத்துடனும் நோக்குவது சிறந்தது.

ஒரு படைப்பாளி ஒன்றில் முற்று முழுதாக உணர்வு நிலையில் நின்று படைப்பாக்கலில் ஈடுபடுவார் அல்லது வெற்றுத்




தகவல்களாகவோ, சம்பவங்களாகவோ, அறிவுநிலை நின்று கொண்டோ படைப்பாக்கலில் ஈடுபடுவார்: இவற்றுக் அப்பால் எந்தச் சலனமும் இல்லாத நடையில் இயல்பாய் வருவன சாந்தனின் படைப்புகள். இவரது சிறப்பு இதுதான்.

இங்கு இலக்கியச் செழுமை என்பதைப் பற்றிய புரிதல் அவசியம். இவரது படைப்புகளில் முழுமையாக இலக்கியச் செழுமை படர்ந்து காணப்படுகின்றது என்று சொல்ல முடியாது. முற்று முழுதாக இலக்கியச் செழுமை வாய்ந்தது தான் சிறந்த படைப்புகள் என்று சொல்வீர்களாயின், இவரது படைப்புகள் அவற்றிலிருந்து சற்று விலகியே நிற்கும்.

இவற்றுக்கப்பால், ஒவ்வொரு சிறுகதையும் அந்தக் கரு சொல்லும் காலத்தின் அழகான விரிந்த படம். எம் ஒவ்வொரு மனிதரினதும் அனுபவம். மிக எளிய நடையில் அதனைத் தந்துள்ள அவர் அதனூடாக தன்னை சிறந்த படைப்பாளியாக நிரூபித்துப் போகிறார்.

அவரது அந்நியமான உண்மைகள் சிறுகதையில் திருமலையை தமிழ் பிரதேசம் ஆக நினைத்து வரும் யாழ் கோடி தமிழருக்கு அதுதரும் ஏமாற்றத்தைச் சொல்லி வந்து கடைசி வரிகளில் எழுதுகிறார்.

தெருக்கரை சுவரொன்றில் பெரிதாக எழுதப்பட்டிருந்த வாக்கியம் சிவத்தின் கண்களில் பட்டது,

*இஸ்ரேலிய ஆக்கிரமிப்பாளர்களே, அரபுப் பிரதேசங்களை விட்டு வெளியேறுங்கள்.*

என்று எழுதுகிறார்.

இதனூடாக நீங்கள் எதையும் உங்களுக்கானதாய் எடுத்துக் கொள்ளலாம். ஒரு வெற்று வசனமாகவும், ஆக்கிரமிப்புக்கு உள்ளாகிக் கொண்டிருக்கும் ஒரு நிலத்தில் காணப்படும் இன்னொரு தேசம் பற்றிய (தற்போதைய ஜே.வி.பி. காரர்களின் சுத்தல்களைப் போல்) வெளிப்பாடாகவும், மறைமுகமாக எங்கள் பிரதேசத்தில் இருந்து வெளியேறுங்கள் என்பதைப் போன்ற பல வகையான புரிதல்களை நீங்கள் பெறலாம்.

அதனூடாக எந்தச் செய்தியையும் கோசங்களாக வைத்துப் பிரச்சாரகராக ஆகாமல் இயல்பாக உங்களையே தீர்மானிக்க விடுகின்றார்.

இவை தான் அவரது படைப்பின் முழு வெற்றி.

இதே போல் பள்ளிக்கால அனுபவத்தினை முளைகள் சிறுகதையின் ஊடாக மிகவும் சுவாரஸ்யமாகத் தருகின்றார். சிறுமனங்களில் ஏற்படும், பிரம்படி பற்றிய பயம், ஆங்கிலம் கற்பதில் உள்ள தடுமாற்றம். தவறுக்காக வருந்தும் இயல்பு இப்படிப் பலதை அந்தக் கதையினூடாக பகிர்ந்து கொள்வதோடு எம்மிடமும் அதே உணர்வுகளைக் கிளறிச் செல்கிறார்.

மற்றும், இவரது தேடல். யுகங்கள். மனிதர்களும் மனிதர்களும் இப்படிக் குறிப்பிடத்தக்க நல்ல சிறுகதைகள் இத்தொகுப்பில் உள்ளன.

இவரது படைப்புகள் சர்வதேசத் தரம் வாய்ந்ததா இல்லையா என்பதற்கு அப்பால் ஈழத்து தமிழ் இலக்கிய உலகிற்கு ஒரு நல்ல வரவு.

ஈழத்து இலக்கிய உலகம் இவரிடம் இருந்து இன்னும் சிறந்த படைப்புக்களை எதிர்பார்க்கலாம்.

**<u>மூன்றாவது மனிதன் சிறுசஞ்சிகை விமர்சன அரங்கு.</u>**

அமர்வு — 1

காலம் — 12.11. 2000. ஞாயிற்றுக்கிழமை.

நேரம் — பி.ப. 2.00 மணி

இடம் — அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை. மட்டக்களப்பு.

ஈரான் நாட்டில் ஆயதுல்லாஹ் கொமைனியின் புரட்சிப் போராட்டத்தில், மன்னர் ஜாவின் கொடுமையை எதிர்த்துப் போராடிய ஒரு வீரப் பெண் மார்ஜியா அகமதி ஊஸ்சுயி. இவர் தனது இருபத்தெட்டாவது வயதில் சர்வாதிகார ஆட்சியாளனின் கூலிப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

புணர்ச்சியில் பங்கேற்கவே பெண் சிருஷ்டிக்கப்பட்டாள் என்ற சமூகத்தினதும், சில மதங்களினதும் மதிப்பீடுகளை உருத்தெரியாமல் உடைத்தெறிந்து ஆசிரியையாய் இருந்து, கொரில்லா இயக்கத்தில் வளர்ந்து, துப்பாக்கித் தோட்டாக்களால் துளைக்கப்பட்டு புரட்சியில் பங்கேற்றுச் சென்ற பெண் புலி அவள்.

அந்தப் பெண்கவி தான் சிந்திய ஒவ்வொரு துளி இரத்தத்தையும் எரிமலைகள் முளைப்பதற்கான விதைகளாய் விட்டுச் சென்றிருக்கிறாள்.

அவள் சிந்திய சில சிவப்புச் சொட்டுக்கள்.

"நான் ஒரு தாய்
நான் ஒரு சகோதரி
நம்பிக்கையான மனைவி
நானும் பெண் தான்

விழித்த நாள் முதலாய்
வெறுங்கால்களோடு
இந்தச்
சுடு பாலையில்
சுமையோடு ஓடியவள்

ஈரானின் வட புறத்தில்
ஒரு குக்கிராமத்தில்
விபரந் தெரிய முன்பிருந்தே
வேலை செய்து வந்தவள்

நெல் வயலில்
தேயிலைத் தோட்டச் சரிவில்
அடிமாட்டோடு மாடாய்
காலை முதல் கருக்கல் வரை
துன்பத்தில் தோய்ந்து தோய்ந்து
தேய்ந்து வருபவள்

மலைச் சரிவில்
பிள்ளைகளைப் பெற்றேன்
சமவெளியில்
ஆடுகளைத் தொலைத்தேன்.

இன்னும்
அழுது கொண்டிருக்கிறேன்.

உங்கள் வெட்கங் கெட்ட
அகராதிகளில்
என்னைப் போன்ற
பெண்ணைக்குறிக்கச்
சொல்லே இல்லை

மதர்த்த மேனியும்
திமிர்ந்த தனங்களும் கொண்டவளின்
பட்டுவண்ணத் தோலுக்கும்
பரிமளிக்கும் கூந்தலுக்கும்
மட்டுமே
உங்கள் அகராதியில்
பெண் என்று பெயர்

என் தோலோ
இந்தப்
பாலைவனத்தின்
வெறுமையின் எச்சம்

என் அடர்ந்த தலைமுடியோ
ஆலைப் புகை
கைநிறைய எனக்கு
காய்ப்புகள் - காயங்கள்

நானும் ஒரு பெண்
உங்கள் வெட்கங் கெட்ட
அகராதியில்
என்னைக் குறிக்க
ஒரு சொல்லே இல்லை

உங்கள் கண்ணுக்குத் தெரிவது
என்
மார்பகம் மட்டுமே
அதன் உள்ளே
இதயமொன்று
அழுது கொண்ருக்கிறதே
அறிவீரா?

துயரங்களையே
சுமந்து பழகிய நான்
இப்போது
சுமக்கப் பழகிக் கொண்டேன்
துப்பாக்கியை"



மொழிபெயர்ப்பு: எம்.ஏ.ஹபீழ்




## யாருக்குத் தலைவர்கள் இவர்கள்!

சரிநிகரை கடந்த 1 1/2 வருடமாக ஆழமாக வாசித்துவரும் வாசகனின் மடல். நீங்கள் ஐப்பசி மாத 22-28 இதழ் 206இல் வாசகர்களின் கேள்விகளுக்கு தலைவர்கள் பதிலளிக்கிறார்கள் என்ற தலைப்பில் அந்த அறிவித்தலை வெளியிட்டிருந்தீர்கள். இப்போது விடயத்துக்கு வருகின்றேன். "வாசகர்களின் கேள்விகளுக்கு தலைவர்கள் பதிலளிக்கின்றார்கள்" ஆம் இவர்களை எந்த அடைமொழியுடன் தலைவர்கள் என்று குறிப்பிட்டுள்ளீர்கள். நீங்கள் "தலைவர்கள்" என்று குறிப்பிடும் போது இவர்கள் இந்த தேசத்தின் தலைவர்களாகவோ அல்லது ஒட்டு மொத்த தமிழ் மக்களின் தலைவர் களாகவோ இல்லை.

இவர்கள் வெறும் பேரினவாதிகளுக்கு துணைபோகும் வெறும் துளிக் கட்சிகளின் தலைவர்கள் மாத்திரமே. நீங்கள் குறிப்பிடும் போது "கட்சித் தலைவர்கள் பதிலளிப்பார்கள்" என்று குறிப்பிட்டிருந்தால், தங்கள் கூற்றுடன் நான் ஒத்துப்போயிருப்பேன். நீங்கள் குறிப்பிடலாம் இவர்கள் தேர்தலால் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் என்று, இன்று மக்கள் தேர்தலை விரும்பி ஏற்கவில்லை. நிர்ப்பந்திக்கப்பட்டது. திணிக்கப்பட்டது.

சர்வதேசத்திற்கு இலங்கையில் ஜனநாயகம் உண்டு என்று காட்ட பேரினவாத அரசால் நடத்தப்பட்ட நாடகம். இந்த நாகடத்தின் ஒவ்வொரு பாத்திரமாக மாறியிருந்தவர்கள் தான் இந்தத் தலைவர்கள் கடந்த 10 வருடத்திற்கு மேலாக வடகிழக்கு மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படவில்லை. காரணம் தேர்தலுக்கான சூழ்நிலை அங்கு இல்லை. இதையும் நீங்கள் குறிப்பிட்ட தலைவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். இதே வடகிழக்கில் ஜனாதிபதி தேர்தல், பொதுத் தேர்தல் நடக்கும் போது வடகிழக்கில் தேர்தலுக்கான சூழ்நிலை உண்டு இதையும் இந்தத் தலைவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். இதிலிருந்து இத்தலைவர்களின் பதவி ஆசையும், பண மோகமும் தமிழ் மக்களின் பாதாளத்திற்கு தள்ளிவிடும் சுயநலமும் குறுகிய நோக்கமும் நன்கு தெரியும்.

தமிழ் பிரதிநிதித்துவம் பறிபோகக் கூடிய நிலையிலுள்ள மாவட்டங்களில் ஒற்றுமையுடன் நின்று பிரதிநிதித்துவத்தைக் காப்பாற்ற முடியாமல் தமக்குள்ளே அடிபட்டு தனித்தனியே நின்று தம் நிலை உணர்ந்து கொண்டவர்கள் இத்தலைவர்கள். எந்த சட்ட திட்டங்கள் தமிழ் மக்களை அச்சுறுத்துகின்றதோ அவற்றுக்கெல்லாம் அடிவருடிகளாக நின்று தம்நிலை உணர்ந்து கொண்டவர்கள் இத்தலைவர்கள்.

எந்த சட்டத்திட்டங்கள் தமிழ் மக்களை அச்சுறுத்துகின்றதோ அவற்றுக்கெல்லாம் அடிவருடிகளாக நின்று கை உயர்த்தும் தரம் கெட்டத் தலைவர்கள். யாழில் 4 ஆசனங்களைப் பெற்றுக் கொண்ட ஜனநாயகத்துக்கு திரும்பிய ஆயுதக் குழுவின் தலைவர் கூறியிருந்தார். இந்த அரசின் ஆட்சியில் வடகிழக்கு தமிழர் அமைச்சர் ஆவது தமிழ் மக்கள் பெருமைப்படவேண்டிய விடயம் என்று இந்த பதவிகளைக் கண்டு பெருமைப்பட தமிழ் மக்கள் இன்னும் மானமிழந்து தரம் கெட்டு விடவில்லை என்று இந்தத் தலைவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இதே ஆயுதக்குழு யாழ் மண்ணில் தேர்தலை நேர்மையுடன் எதிர்கொண்டிருக்கமானால் கிடைத்த 4 ஆசனமும் கிடைத்திருக்குமா என்பது சந்தேகமே. இதே கூற்றுக்குள் மிதவாத கட்சிகளும், அடங்குமா என நீங்கள் கேட்டால் ஆம் என்றே என் பதில். பழம் பெரும் தமிழ் மிதவாதத்தின் தப்புத் தாளங்களை பட்டியலிட்டால் அது ஒரு வேதாகமம் ஆகிவிடும். இன்று இந்த தலைவர்களின் இருப்பும், அரசியலும் தமிழீழ விடுதலைப் புலிகளை மையப்படுத்தியே சுழன்று கொண்டு இருக்கின்றன.

இன்று எந்தத் தலைவனால் தமிழினம் உலகில் தலைநிமிர்ந்து நிற்கின்றது என்றால், உலகறியும் வடகிழக்கு தமிழர் பூமியாக இன்று இருப்பதற்கு எந்தத் தலைவன் காரணம் என்று நாடறியும். பணம், பதவி சொகுசு என்று அந்தத் தலைவனும் கொழும்பு வந்திருந்தால், இன்று தமிழன் ஆதி வாசியாகி விடுவான். தமிழர் செய்த பாக்கியம் அப்படி நடக்கவில்லை. தமிழர்களின் பிரச்சினை என்ன என்று அறியாதவர்களே இந்தத் தலைவர்கள் இவர்களிடம் தேசியத்தைக் கொடுத்தால் தேசியம் மாசு பட்டுவிடும்.

இவர்கள் தலைவர்கள் என்று மக்களே தீர்மானிக்க வேண்டும். இவர்கள் ஏற்கெனவே தீர்மானித்து விட்டார்கள் தம் தலைவனை. எனவே இவர்களை தலைவர்கள் என்று குறிப்பிடாமல் கட்சித்தலைவர்கள் என்று குறிப்பிடுவதே சலாப்பொருந்தும். மொதத்தில் தமிழர் பிரச்சினை என்ன என்று அறியாம இக்கட்சித் தலைவர்களே தலைவர்கள் என்று தனிப்பட குறிப்பிடுவது தவறு. தவறு.

~ யாழ் ஊரான்

## தொடரும் ....

ஏறாவூர் மாவட்ட வைத்தியசாலை வைத்திய அதிகாரி டொக்டர் கே.சுகுமார் பிரேத பரிசோதனை நடத்தினார். துப்பாக்கிச் சூட்டினால் ஏற்பட்ட இரத்தப் பெருக்கே மரணத்திற்கு காரணம் என அவர் தெரிவித்துள்ளார். வலது பக்க கையில் பட்ட துப்பாக்கி சன்னம் வலது பக்க மார்பினூடாக வெளியேறியிருக்கிறது என்றும். இதனால் இரத்தக்குழாய் சிதைவடைந்து இரத்தம் வெளியேறியதாலேயே மரணம் சம்பவித்துள்ளதாகவும் பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. நிமலநாயகம் சௌந்தரநாயகத்தின் உடலில் ஒரு துப்பாக்கிச்சன்னம் மட்டுமே பாய்ந்து வெளியேறியிருக்கிறது. அது பலமான சன்னமாக இருக்கவேண்டும் என அவர் அந்த அறிக்கையில் கூறியுள்ளார். நவ.07,1954இல் பிறந்த இவர் வாழைச்சேனை புதுக்குடியிருப்பு மகாவித்தியாலய அதிபராகக் கடைமையாற்றி வந்தார். பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக அதிபர் பதவியை இராஜினாமாச் செய்தார். 1984ம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலத்தில் ஏறாவூர் தமிழ் மகாவித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றிய போது கைது செய்யப்பட்டு மூன்று ஆண்டுகள் பூஸா தடுப்பு முகாமில் இருந்தவர். பின்னர் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தையடுத்து விடுதலையானார். இவர் கடந்த ஒக்டோபர் 10ம் திகதி நடைபெற்ற பொதுத்தேர்தலில் 16,542 விருப்பு வாக்குகளைப் பெற்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் மட்டக் களப்பு மாவட்ட முதன்மை பாராளு மன்ற உறுப்பினராகத் தெரிவானார். பொதுமக்களின் பாதுகாப்பிற்காக இருக்கும் பொலிஸார் தங்கள் கடமையை உணர்ந்து செயற்பட வேண்டும். கண் மூடித்தனமாக பொதுமக்கள் மீது ஆயுதங்களைப் பாவிக்க கூடாது. அவ்வாறு இல்லாதுவிடில் மக்கள் பொலிஸ் நிலையப் பகுதியை விட்டு வெளியேற வேண்டும். அல்லது பொலிஸார், படையினர் வெளியேற வேண்டும் என்று கடந்த ஞாயிறு இரவு ஏறாவூரில் படையினர் மேற்கொண்ட எறிகணைத்தாக்குதல் தொடர்பாக ஏறாவூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியைச் சந்தித்த நிமலன் சௌந்தரநாயகம் கூறியிருந்தார் என தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதற்கு மறுநாள் நிமலன் சௌந்தரநாயகம் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார். நிமலன் சௌந்தரநாயகம் பிரதிநிதித்துவப்படுத்தும் கல்குடாத் தொகுதியில் வெள்ளைக் கொடிகள் பறக்க விடப் பட்டு துக்கம் அனுட்டிக் கப்படுகிறது.

வீதிகள் மக்கள் நடமாட்டமின்றி வெறிச்சோடிக் கிடந்ததுடன் வாகனப்போக்குவரத்தும் குறைவாகவே இடம் பெற்றது. இப்பிரதேசத்திலுள்ள பாடசாலைகளுக்கு மாணவர்கள் வருகை தராததால் பாடசாலைகள் இயங்கவில்லை. ஆசிரியர்கள் மாத்திரம் நண்பகல் வரை பாடசாலையில் இருந்து விட்டு வீடுகளுக்குத் திரும்பிச் சென்றனர்.

இதேவேளை இவரது மரணத்தை கொலை எனத் தீர்ப்பு வழங்கிய மட்டக்களப்பு மாவட்ட மேலதிக நீதிபதி அப்துல் கபூர் இது தொடர்பாக பூரண விசாரணை நடத்தி அறிக்கை சமரப்பிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். பொலிஸாரின் விசாரணைகள் கொலையாளிகளை நீதியின் முன் நிறுத்துமா?

~வி.ஜே.கே.

## புரியாத முரண்பாடு

இதழ் 204 "வருகை" (பக்.15) நீண்டகாலத்தின் பின் ஒரு அற்புதமான கவிதை சொல்லபப வேண்டிய விடயங்கள் மிகவும் ஆணித்தரமான முறையில் அதேசமயம் நறுக்காகச் சொல்லப்பட்டிருக்கிறது. வாழ்க! வளர்க!! "பனையடிப் பாடகன்"

இதழ் 206 பக் 05.... இலத்திரன் ஊடகங்களிலேயே அதிக இனவாதத்தைக் கக்குகின்ற ரீ.என்.எல்.

பக் 20 இனப்பிரச்சினை தொடர்பான தொலைக்காட்சி நிகழ்ச்சி அதே ரீ.என்.எல். நிறுவனத்தில்...

இந்த முரண்பாடு எனக்குப் புரியவில்லை.

இந்த முரண்பாடு தெளிவானால் "சரிநிகர்" செல்லும் திசைபற்றிய இன்னும் அதிகமாக அறிய முடியும். அத்தகைய ஒருநிலையில் தான் "பயன்படுத்தல்" (பக்02) என்ற தலைப்பில் வெளியான விடயம் பற்றிய அபிப்பிராயங்களை எழுதுவது பொருத்தமாகும்.

வாசகர் கருத்துக்களுக்கு "சரிநிகர்" வழங்கும் இடம் போதவே போதாது.

க.பீற்றர் கொழும்பு-13

## பொறுப்பான................

அவை மீட்கப்பட்டதாகவும் அவற்றை நிமல்ராஜன் புலிகளிடம் ஒப்படைத்ததாகவும் கதையைத் திசை திருப்பிட முயற்சிக்கின்றனர் என்கிறது ராவய.

இதில் எது உண்மை. மறுபுறத்தில் அமைச்சர் டக்ளஸ் அவர்கள் கூறிய படைத்தரப்பின் கூற்றை உண்மையென எடுகோளாகக் கொண்டால் அவர் செய்திருக்க வேண்டியது என்ன?

தனக்குத் தெரிந்த தகவல்கள் அனைத்தையும் பொலிஸாருக்கு வழங்கி சட்ட ஒழுங்கிற்கேற்ப நிமல்ராஜன் மீது நடவடிக்கை எடுத்து சட்டத்தின் முன் நிறுத்த உதவியிருக்கலாம் அல்லவா. ஆனால் அமைச்சர் அவ்வாறு செய்யவில்லை.

புலிகள், புலிகளின் நடவடிக்கைகள் பற்றிய தகவல் தெரிந்திருந்தும் அதனைப் பாதுகாப்புப் படையினருக்கோ பொலிஸாருக்கோ வழங்கவில்லை என்ற குற்றச்சாட்டின் கீழ் நாளாந்தம் தமிழ் மக்கள் தண்டிக்கப்படலாமென்றால், அமைச்சர் டக்ளஸ் நிமல்ராஜன் புலி ஏஜென்டாகவே செயற்படுகிறார் என்று தெரிந்திருந்தும், படையினருக்கோ பொலிஸாருக்கோ தகவல் தராமலிருந்தது தண்டனைக்குரிய குற்றமில்லையா? நிமல்ராஜன் மீது நடவடிக்கை எடுக்க உதவி செய்யாமலிருந்தது தவறில்லையா? வன்முறைகளைத் தூண்டி விட்டார் என்ற சந்தேகத்தின் மீது முன்னாள் அமைச்சர் சந்திரசேகரன் கைது செய்யப்படலாமென்றால், தகவல் தெரிந்தும் தராமலிருந்த குற்றத்தின் கீழ் டக்ளஸ் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட வேண்டுமல்லவா என்கிற கேள்விக்கு என்ன பதில் சொல்லலாம்?

ஆக,இவை எதுவும் நடைபெறவில்லை என்பதால் நிமல்ராஜன் மீது சுமத்தப்பட்டவை வெறும் அவதூறுகளே தவிர வெறொன்றுமல்ல.

மூன்றாவது இவ்வாறான மாற்று அரசியல் அல்லது அபிப்பிராயம் வைத்திருப்பவர்கள் அதற்காகவே தண்டிக்கப்படலாமென்றால் கொல்லப்படலாமென்றால் இதுகாலவரை புலிகள் மேற்கொண்டு வந்த மற்றைய இயக்கங்கள் மீதான தடையிலிருந்து கொலை வரை அனைத்து நடவடிக்கைகளும் சரியென்றாகவே ஆகிவிடும் அல்லவா? இதற்கு பொறுப்பான அமைச்சரின் பொறுப்பான பதில் என்னவாக இருக்கும்.

இதை எழுதியவர் யாரென்று தேடத் தொடங்குவதா அல்லது நிமல்ராஜன் மீது சுமத்தப்பட்ட அவதூறுகளை வாபஸ் வாங்குவதா?

இறுதியாக ஒரு குறிப்பு:

பத்திரிகா தர்மத்தின் அடிப்படையிலும், தனிநபர் ஒருவருக்கெதிரான அவதூறு பரவுதலைத் தடுக்கும் வகையிலும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் நேர்காணலில் அவர் தெரிவித்த நிமல்ராஜன் தொடர்பான அவதூறான விடயங்களை தினக்குரல் பிரசுரிக்காது விட்டிருத்தல் வேண்டும். -அதுவும் அவதூறுக்குள்ளாகும் நபர் தனது பக்க அபிப்பிராயங்களை வெளியிடுவதற்கு உயிருடனில்லாத நிலையில். தினக்குரல் இவ்வாறு நடந்து கொண்டது விசனத்திற்குரியது.

## வவுனியா:....................

இது குறித்து உடனடியாக வவுனியா பொலிஸ் தலைமையக இன்ஸ்பெக்டரின் கவனத்திற்கும், உரிய மேலதிகாரிகளின் கவனத்திற்கும் மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் கொண்டுவந்துள்ளார்கள்..

இதனையடுத்து, இவரை வைத்திய கவனிப்புக்கு உட்படுத்துவதற்குரிய ஏற்பாடுகளை செய்துள்ள வவுனியா பொலிஸ் தலைமையக இன்ஸ்பெக்டர் தொடர்ந்து தேவையான நடவடிக்கைகளையும் எடுத்துள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் தெரிவித்தனர்.

இதேவேளை, வவுனியா கிளர்ச்சித் தடுப்பு பொலிஸ் பிரிவில் விசாணைக்காகக் கைது செய்யப்பட்டுள்ள நால்வர் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருவதாக, கடந்த புதன்கிழமை அங்கு விஜயம் செய்த மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா இணைப்பாளர் எஸ்.சிறிதரன் தெரிவித்தார்.

தாண்டிக்குளம் திருநாவற்குளத்தைச் சேர்ந்த செல்லன் இராசதுரை (47), கண்டியிலிருந்து மன்னாருக்குச் செல்லும் வழியில் மதவாச்சியில் வைத் கடந்த மாதம் 24 ஆம் திகதி இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட குண்டசாலை வீதி இரஜவெலையைச் சேர்ந்த சுப்பிரமணியம் ஜெயச்சந்திரன் (17), பூந்தோட்டம் நலன்புரி நிலையம் 8 ஆம் யுனிட்டில் வைத்து கடந்த 19 ஆம் திகதி கைது செய்யப்பட்ட இராமையா இராஜ்குமார் (27), கடந்த மாதம் 8 ஆம் திகதி கைதுசெய்யப்பட்ட மட்டக்களப்பு ஏறாவூர் காளிகோவில் வீதியைச் சேர்ந்தவாரகிய பத்மநாதன் கிரிதரன் ஆகியோரே இவ்வாறு விசாரணைக்காகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் சிறிதரன் தெரிவித்தார்.

# சரிநிகர்

வார இதழ்

"சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இல. 19/04, 01/01, நாவல வீதி, நுகேகொட.

தொலைபேசி / தொலைமடல் : 074-400045

மின்னஞ்சல்: sarini@sltnet.lk


## பேச்சுக்கள் வழிவிடுமா?

மீண்டும் ஒரு முறை நம்பிக்கையின் ஒளிக்கீற்றாக நோர்வேயின் பேச்சுவார்த்தை முயற்சி வன்னி வரை சென்றிருக்கிறது.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் நோர்வே அரசாங்க விசேஷட தூதுவர் எரித் சொல்ஹெய்ம், புலிகளின் வன்னித் தலைமையகம் சென்று பேச்சுவார்த்தை நடத்திவிட்டு வந்த நிகழ்ச்சி வடக்கு - கிழக்கு மக்களிடம் மட்டுமல்ல நாடுபூராவும் உள்ள, அனைத்து மக்களிடையேயும் நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தப்படுவது ஒரு தவிர்க்க முடியாத அவசியம் என்பதை எதிர்க்கட்சியான ஐ.தே.க உட்பட ஏறக்குறைய அனைத்துக் கட்சிகளும் சுட்டிக் காட்டியிருந்த போதும், அரச தரப்பு இது குறித்த தீவிர சிரத்தை எதையும் எடுக்கவில்லை.

யுத்த தளபாடங்கள் ஆயுதங்களை வாங்கிக் குவிப்பதிலும், படைக்கு ஆட்சேர்ப்பதிலும், புதிய யுத்த நடவடிக்கைகளை முடுக்கி விடுவதிலும் அதற்கிருந்த தீவிர கவனமும் அக்கறையும் பேச்சுவார்த்தை நடாத்தப்படுவதில் இருக்கவில்லை.

சமாதானத்திற்கு புலிகளுடன் பேசுவதல்ல, அவர்களை அழித்தொழிப்பதே அவசியம் என்பது தான் அரசு தரப்பு கருத்தாக இருந்து வருகிறது.

பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தனது தேர்தல் பிரசார மேடைகளிலெல்லாம் இது பற்றியே பேசி வந்தார். பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்டுவது என்பதே அவரது பிரதான கோஷமாக இருந்தது. பயங்கரவாதம் என்பது - இந்த நாட்டின் இனப்பிரச்சினை அரசியலுடன் சம்பந்தப்பட்டது என்ற உண்மையைப் புரிந்து கொள்ளவோ, ஏற்றுக் கொள்ளவோ அவர் தயாராக இருக்கவில்லை. அவர் மட்டுமல்ல பயங்கரவாதம், பயங்கரவாதம் என்று கத்துகிற ஆட்சியாளர்கள் யாரும் இந்த விடயத்தைப் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. அவர்களது இனவெறி மீதான காதலும், வரலாற்று வளர்ச்சிப் போக்கு குறித்த குருட்டுத் தனமான கருத்துக்களும், சுயநலமும் இந்த விடயங்களை நிதானமாக புரிந்து கொள்ள அவர்களை அனுமதிப்பதில்லை.

ஆக, யுத்தம், யுத்தம் என்று கூக்குரலிடுவதே அவர்களது இனப்பிரச்சினை தொடர்பான அணுகுமுறையாகி விட்டது.

தீவிர இனவாதிகள், பெளத்த மத பீடங்கள் என்பவனவும் இராணுவத்தின் சில குறிப்பிட்ட உயர் மட்டமும் யுத்தமூலமே சமாதானத்தை நோக்கி செல்ல முடியும் என்ற அரச கோட்பாட்டை தூக்கிப்பிடித்து, அதற்கு மேலும் வலுவூட்டி வருகின்றன. இந்த நிலை சிங்கள சிவில் சமூகத்தின் மத்தியிலும், இன்று யுத்தம் தொடர்பான கருத்துக்கள், குறிப்பாக அரச சார்பான, புலிக்கெதிரான யுத்தத்தை ஆதரிக்கிற கருத்துக்கள் வளர்ந்து வருகின்றன. பண்டாரவளை சம்பவத்தில் கொல்லப்பட்ட தமிழ் இளைஞர்களை கொன்றவர்களுடன் கணிசமான உள்ளூர் மக்களும், கலந்து நின்று செயற்பட்டு இருக்கிறார்கள் என்பது இதற்கு நல்ல உதாரணமாகும்.

ஆக, யுத்தவாத நோயினால், பீடிக்கப்பட்ட சிங்கள பேரினவாத அணியினர் சமாதானத்திற்குரிய பேச்சுவார்த்தைகளை ஒரு அவசியமான கருவியாக கருதவில்லை. விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் இரு வருடங்களுக்கு முன்பே பேச்சுவார்த்தைக்கு தாம் தயாராக இருப்பதாக அறிவித்திருந்தும், இன்றுவரை அரசு அதற்குரிய முன் முயற்சியை எடுக்கவில்லை. மாறாக, அத்தகைய ஒரு முயற்சி ஏற்படக்கூடாது என்ற நோக்குடன் செயற்படுவதுபோல அதன் செயற்பாடுகள் அமைந்திருந்தன. வெளிநாட்டமைச்சர் லஷ்மன் கதிர்காமர் தான் செல்லுமிடமெல்லாம், புலிகளுடன் பேச நிபந்தனைகளை விதித்து வந்ததுடன் புலிகள் பேச்சுவார்த்தை மேடைக்கு வரமாட்டார்கள், வந்தாலும் அவர்கள் நம்பக் கூடியவர்கள் அல்ல என்ற அவநம்பிக்கையையே வெளிப்படுத்தி வந்துள்ளார்.

ஆனால், இன்று நோர்வே தூதுவர் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண அவசியமானது புலிகளுடன் பேசுவதே என்ற முடிவுடன் சென்று பிரபாகனையே சந்தித்துவிட்டு வந்திருக்கிறார். ஒருவகையில் மூன்றாம் ஈழப்போரின் பின் பிரபாகரனை உத்தியோகபூர்வமாக, பேச்சுவார்த்தை நடவடிக்கையின் ஒரு அம்சமாக சந்திருந்த முதலாவது வெளிநாட்டவராக்கிறர் எரிக் சொல்ஹெய்ம் என்றே சொல்ல வேண்டும்.

சொல் ஹெய்மின் பேச்சின் முடிவுகள் நம்பிக்கையூட்டுவனவாக உள்ளன. முதலாவதாக பேச்சுவார்த்தைக்கு தாம் தயார் என்று பிரபாரகன் எந்த நிபந்தனைகளையும் விதிக்காமலே ஒப்புக்கொண்டது ஒரு முக்கியமான திருப்பம் என்றே கொள்ள வேண்டும்.

இந்தத் திருப்பு முனையான நிலைமையை அரசு தரப்பும், விடுதலைப் புலிகள் தரப்பும் சரியான விதத்தில் பயன்படுத்த வேண்டும்.

அந்நிய சக்திகள் நெருக்குவாரங்களுக்கு விட்டுக் கொடுக்காமல் நாட்டினதும் மக்களதும் எதிர்காலம் பற்றிய அக்கறையுடன் இந்த சூழலைப் பயன்படுத் வேண்டும்.

ஆனால், இனவாதிகளது நெருக்கடிகட்கும், யுத்த வெறியர்களது சுயநலத்திற்கும் விட்டுக்கொடுத்து புலிகளின் பேச்சுவார்த்தைக்கான இந்த அழைப்பை அரசு கணக்கெடுக்காமல் விடுமாக இருந்தால், அது இந்த நாட்டை மிகக் கிட்டிய காலத்துக்குள்ளேயே ஒரு பேரழிவுக்கு இட்டுச் செல்வதாய் அமைந்துவிடும்.

இனவாத சக்திகள் பாசிச முகமெடுத்து வளர்ந்து வரும் சூழல் நாட்டை பேரழிவுக்கு இட்டுச் செல்லும் என்பதற்கான அறிகுறிகள் பண்டாவரளையில் தெளிவாக வெளிப்பட்டு விட்டிருக்கின்றன.

புலிகளும், சமாதான முயற்சியை, ஒரு தந்திரோபாய காய்நகர்த்தலாகக் கருதாது தமிழ் மக்களதும், முழு நாட்டினதும் நீண்டகால நலன்களின் அடிப்படையில் நின்று கையாள வேண்டும். மீண்டும் ஒருமுறை சமாதானப் பேச்சைக் குழப்பியவர்கள் என்ற பழிக்கு ஆளாகாமல் இதை நடாத்த வேண்டும்.

சமாதானம் இனிது. உலகில் மற்றெல்லா வழிமுறைகளையும் விட சமாதானம் இனி இனிமை நிறைந்த வாழ்வு முறை அது.

அதை வாழ எம் மக்களை அனுமதிப்பீர்களா?

## தொடரும் பட்டியல்!

### த.வி.கூ. பாராளுமன்ற உறுப்பினர்

# நிமல் செளந்தரநாயகம் கொலை!

மட்டக்களப்பு தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர் நிமலநாயகம் செளந்தரநாயகம்(50) நவ.07ம் திகதி அன்று பிற்பகல் 5.57 மணியளவில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். சம்பவ தினத்தன்று மட்டக்களப்புக்கு வந்து தனது சொந்த அலுவல்களை முடித்துக் கொண்டு, சித்தாண்டியிலுள்ள தனது உறவினர் வீட்டுக்குச் சென்றுவிட்டு அங்கிருந்து மாலை 5.45 மணியளவில் புறப்பட்டு வாழைச்சேனையிலுள்ள தனது வீட்டுக்குச் செல்லும்போதே கிரான் கமநலசேவை நிலையத்துக்கும் கூட்டுறவு எரிபொருள் நிலையத்துக்கும் இடையில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

சம்பவம் நடந்த இடத்தில் இருந்து 75 மீற்றர் நேர் பார்வைத் துரத்தில் கிரான் பாலத் திற் கருகாமையில் இராணுவத்தினர் சம்பவம் நடைபெற்ற நேரம் நின்றிருந்திருக்கின்றனர். துப்பாக்கிச் சத்தம் கேட்டு மறுகணமே இராணுவம், சம்பவம் நடந்த இடத்துக்கு வந்திருக்கின்றனர். கிரான் வாழைச்சேனை பிரதான பாதையில் இராணுவம் சாணுக்கொன்று முழத்துக்கொன்றாக நின்று வீதிக் கடமையில் ஈடுபடுவர். எனவே இராணுவத்தினருக்குத் தெரியாமல் இந்தச் சம்பவம் இடம் பெறுவதற்கு வாய்ப்பேயில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அதுமட்டுமல்லாமல் சம்பவம் நடந்த மறுகணம் இராணுவத்தினர் அவ்விடத்துக்கு வந்தபடியினால் இராணுவத்தினரும் சம்பவம் நடந்த சூழலுக்குள்ளே நின்றிருக்கிறார்கள் என்பதும் தெளிவாகின்றது.

நிமலனின் கொலை நன்கு திட்டமிட்டே செய்யப்பட்டிருக்கின்றது. அதனால் தான் மோட்டார் சைக்கிளில் வந்த இருவரில் நிமலனுக்கு மாத்திரம் குறிப்பாக நெஞ்சில் குறிபார்த்து சுடப்பட்டிருக்கிறது. மோட்டார் சைக்கிளில் பின்னுக்கு இருந்தவருக்கு உயிருக்கு ஆபத்தில்லாமல் வலதுபக்க கெண்டைக்காலுக்கு மாத்திரம் ஒரு சூடு விழுந்திருக்கிறது. எனவே இது திட்டமிட்ட கொலை என்பதில் எந்தவித சந்தேகத்திற்குமிடமில்லை.

இதேவேளை கடந்த பாராளுமன்றத் தேர்தலில் நிமலனுக்காக பிரச்சாரங்களில் ஈடுபட்ட ஆதரவாளர்கள் மீது பொதுஜன ஐக்கிய முன்னணி ஆதரவாளர்கள் குண்டுவீசி கொலைமுயற்சியில் ஈடுபட்டிருக்கின்றனர். இதில் நான்கு பேர் படுகாயங்களுக்குள்ளாகி இருந்தனர். இச்சம்பவமும் நிமலன் கொலை செய்யப்பட்ட அதே கிராமத்திலே நடைபெற்றது என்பதுவும் இங்கு குறிப்பிடத்தக்கது. இதிலும் இராணுவத்தினரே மறைமுகமாக இருந்து செயற்பட்டனர் என்றும் பரவலாக அறியப்பட்ட உண்மை.

'மட்டக்களப்பு நகரிலிருந்து வாழைச்சேனை நோக்கி நானும் நிமலன் மாஸ்ரரும் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது கிரான் கூட்டுறவுச்சங்க கட்டிடப் பக்கமாக வெடிச்சத்தம் கேட்டது. வெடிச்சத்தம் கேட்கிறது என நான் கூறிய போது பயப்படவேண்டாம் என கூறிய நிமலன் சில வினாடிகளில் துப்பாக்கி சூடுபட்டு கீழே விழுந்தார். துப்பாக்கி சூடுபட்ட நான் பின்னர் மயக்கமுற்றுவிட்டேன் என நிமலநாயகம் செளந்தரநாயகத்துடன் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த வந்தாறுமூலையைச் சேர்ந்த செல்லத்தம்பி லோகநாதன் (46) தெரிவித்தார்.

வீதியோரத்தில் அந்நேரம் படையினர் நின்றிருந்ததைக் கண்டேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



மட்டக்களப்பு பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் இவர் பொலிஸாருக்கு அளித்த வாக்குமூலத்திலேயே இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, ஓய்வு பெற்ற கூட்டுறவு ஊழியரான நான் தேர்தல் காலத்தில் நிமலன் செளந்தரநாயகத்தின் வெற்றிக்காக உழைத்தேன். நான் அவரின் உறவினரும் கூட. அவர் எங்காவது போவதாக இருந்தால் என்னையும் கூட்டிச் செல்வார். அவர் மெய்க்காப்பாளர்களாக யாரையும் வைத்திருக்கவில்லை. சம்பவதினம்-செவ்வாய்க்கிழமை- காலை 7.30 மணிக்கு மோட்டார் சைக்கிளில் புறப்பட்டோம். வந்தாறுமூலை, மட்டக்களப்பு பகுதிகளில் உள்ள திருத்த வேண்டிய வீதிகளைப் பார்வை யிட்டதுடன், மட்டக்களப்பு மாவட்டத்தில் மேற்கொள்ளவேண்டிய அபிவிருத்திப் பணிகள் பற்றி பலரையும் அவர் சந்தித்து உரையாடினார். நண்பகல் மட்டக்களப்பு நகரில் உள்ள கடை ஒன்றில் இருவரும் சாப்பிட்டோம். பின்னர் 4மணியளவில் மட்டக்களப்பிலிருந்து புறப்பட்ட நாங்கள் ஏறாவூர், செங்கலடி, வந்தாறுமூலை சித்தாண்டி ஆகிய இடங்களிலும் சிலரைச் சந்தித்துக் கதைத்து விட்டு வாழைச் சேனை நோக்கிச் சென்று கொண்டிருந்தோம். 'மொறக்கொட்டாஞ்சேனை இராணுவ முகாமுக்கும் கிரான் இராணுவ முகாமுக்கும் இடைப்பட்ட பிரதேசத்தால்-சென்று கொண்டிருந்த போது கிரான் பலநோக்கு கூட்டுறவு சங்க கட்டிடப் பக்கமிருந்து வெடிச்சத்தம் கேட்டது. வெடிச்சத்தம் கேட்கிறது. கவனம் என நான் கூறிய போது பயப்பட வேண்டாம் அண்ணன் எனக் கூறி சில வினாடி களில் துப்பாக்கிச் சூடுபட்டு நிமலன் கீழே விழுந்தார். நானும் விழுந்தேன் என அவர் தெரிவித்தார்.

சம்பவத்தை நேரில் கண்ட கிரானைச் சேர்ந்த மரக்கறி வியாபாரி ஒருவர் சாட்சியமளிக்கையில் "வெடிச் சத்தம் கேட்டது. பின்னர் வீதியில் வந்து பார்த்தபோது நிமலன் மாஸ்ரரும் இன்னுமொருவரும் இரத்த வெள்ளத்தில் கிடந்தனர். அவர்களை உடனடியாக அவ்வீதியால் வந்த வாகனத்தில் ஏற்றி வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தோம். அப்போது வீதியோர காவல் கடமையில் இருந்த இராணுவத்தினரும் வந்துசேர்ந்தனர்" என்றார்.


மட்டக்களப்பு மாவட்ட மேலதிக நீதிபதி அப்துல் கபூர் சம்பவம் நடைபெற்ற கிரானுக்கு நேரடியாகச் சென்று பார்வையிட்டதுடன் [illegible] விசாரணைகளையும் நடத்தினார்.

⇨19


* கொழும்பு காலி, புத்தளம், கம்பஹா மாவட்டத்தில் ஒரு கள ஆய்வு

யுத்தம் - இளைஞர்கள்-சமாதானம் பற்றி

நவம்பர் மாதம் 14 ஆம் திகதி மாலை 7.30 மணிக்கு ரி.என்.எல். தொலைக்காட்சியில் விழிப்பு நிகழ்ச்சியைப் பாருங்கள்




செவ்வாய் தோறும் இரவு 7.25 மணிக்கு ரி.என்.எல் தொலைக்காட்சியில்

எரியும் இனப்பிரச்சினை ! மக்களின் அவலங்கள் போதும் !!

இன நல்லிணக்கம் மூலமான சமாதானத்திற்கு இளையவர்களின் பணி !!!

சமஉரிமை, சகவாழ்வு, சமாதானம்

இலங்கையின் வரலாற்றில் இனப்பிரச்சினை தொடர்பான முதலாவது தமிழ் தொலைக்காட்சி சஞ்சிகை நிகழ்ச்சி இது.


ஆசிரியர் : பாலசுப்ரமணியம் வசந்தன், வெளியீட்டாசிரியர் : எஸ்.கே.விக்னேஸ்வரன், 19/04, 01/01, நாவல வீதி, நுகேகொட. அச்சுப்பதிவு : நவமக, 66/04, தர்மாராம வீதி, இரத்மலானை. 08.11.2000